ணன் வெளியீடு - 31.

# சைஞு சு-சூ!

**- தமிழ் நாவல் -**

MADURAI UNIVERSITY LIBRARY
15 FEB 1973
MADURAI-2.

ஆசிரியர்: **ஆர்வி**

Book supplied by the University
central Co-op. Stores, Madurai.

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் : : சென்னை-4

59-A,

முதல் பதிப்பு, நவம்பர், 1957.
உரிமை பதிவு

விலை 1·50

76352

PRINTED AT THE M. L. J. PRESS, PRIVATE LTD., MADRAS.

# முகவுரை

இந்தக் கதை முதலில் கண்ணன் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளி வந்தது. தொடர்கதையாகப் படித்து வந்தவர்களில் பலர் கதையின் போக்கைப் பற்றி என்னை முன்கூட்டியே எழுதிக் கேட்டார்கள். அதிலிருந்து அவர்கள் மிகவும் சுவாரஸ்யத்தோடு கதையைப் பின்பற்றி வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன். மேலும் மேலும் எழுத எனக்கு ஊக்கமும் பிறந்தது.

முதலில் சைனா சு-சூ கதையை நான் முழுவதும் திட்டமிட்டு எழுதவில்லை. அவ்வப்போதுதான் எழுதிவந்தேன். எந்தக் கதையானாலும் சரியே, முழுவதும் யோசித்து, திட்டமிட்டு எழுதுவதுதான் முறை. அப்பொழுதுதான் நாம் சொல்ல விரும்பும் கதையை அழகோடும் சுவாரஸ்யத்தோடும் தெளிவாகக் கூறமுடியும். அவ்வப்போது எழுதுவது அத்தனை சிறந்த முறையல்ல. என்னதான் குறிப்பு வைத்துக்கொண் டிருந்தாலும் முதலில் எண்ணியபடியே கதை உருவாகி வரும் என்று சொல்ல முடியாது.

ஆயினும் அதையும் சிறப்பாக எழுதியவர்கள் சிலர் இருக்கிறார்கள். கதையின் போக்குப்படி சென்று, முதலில் யோசித்த கதையைவிட அழகான கதையாக எழுதி வெற்றி கண்டிருக்கிறார்கள். 'சைனா சு-சூ!' வெற்றி கண்டதோ, காணவில்லையோ, பலரைக் கவர்ந்திருக்கிறது என்பதை ஆரம்பத்திலேயே உணர்ந்துகொண்டேன். அவர்களுடைய உற்சாகம் என்

னைக் கிளறி ஊக்கமூட்டியது. அந்த ஊக்கம் காரணமாக, கதை எப்படி எப்படியெல்லாமோ மாறி, இப்போ துள்ள உருவை அடைந்திருக்கிறது. எனவே இந்தக் கதையின் சிறப்புக்கள் எல்லாம் அவர்களையே சாரும். ஏதா வது குறை இருந்தால் அது என்னைச் சார்ந்தது.

பல வயதுப் படியில் உள்ளவர் களுக்கும் கண்ணன் வெளியீடுகள் தயா ரிக்கப்படுகின்றன. ஐந்து வயது முதல் பத்து வயது வரையுள்ள குழந்தைகளுக் குச் சில புத்தகங்கள், பத்துக்கு மேல் பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்களுக் குச் சில புத்தகங்கள், பன்னிரண்டு முதல் பதினறு, பதினேழு வயது வரையுள்ளவர் களுக்கென்று சில புத்தகங்கள் என்று முறைப்படுத்தி வெளியிடப்படுகின்றன. ஆனல் பொதுவாக எல்லாருமே முடிந் தால் எல்லாவற்றையும் படிக்கலாம்; மகிழலாம். இந்தக் கதை பத்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்காக என்று எழுதப் பட்ட கதை. பொழுதுபோக்குக்கு ஏற்ற முறையில் அமைந்த இந்தக் கதை படிப் பதற்குச் சுவையாக இருப்பதுடன் விறு விறுப்பாகவும் சுவாரஸ்யமாகவும் இருக் கும் என்று எண்ணுகிறேன்.

பற்பல ஆசிரியர்களும் இதைப் பாராட்டிக் கூறியிருப்பதால் எல்லாப் பொது நூல் நிலையங்களிலும் பள்ளி வாசகசாலைகளிலும் இது இடம் பெறத் தக்கதாகவே மதிக்கிறேன்.

ஆர்வி

MADURAI UNIVERSITY LIBRARY, MADURAI-2.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இருளிலே மறைந்தான் .. | 1 |
| 2. | பாறைக்கு நடுவே பெட்டி .. | 8 |
| 3. | "மூச்சு இருக்காடா" .. | 15 |
| 4. | கிழவரும் சீனனும் .. | 18 |
| 5. | கோடீசுவரன் சீனன் .. | 23 |
| 6. | அதிர்ஷ்டமும் ஆபத்தும் .. | 31 |
| 7. | அந்த ஆள் .. | 38 |
| 8. | பின்னால் வந்த வண்டி .. | 42 |
| 9. | குழாய் வழியே .. | 50 |
| 10. | போலீஸ் வந்தது .. | 54 |
| 11. | பயங்கர உருவம் .. | 59 |
| 12. | பெட்டியைக் காணோம் .. | 62 |
| 13. | மீண்டும் டெலிபோன் .. | 66 |
| 14. | மூளை குழம்பியது .. | 70 |
| 15. | மண்டை ஓடு .. | 74 |
| 16. | கறுப்புக் கம்பளி .. | 82 |
| 17. | ஷங்கங் கட்டுண்டான் .. | 87 |
| 18. | மயக்க மருந்து .. | 91 |
| 19. | பலே பாரிஸ்டர்! .. | 96 |
| 20. | பட்சி பறந்துவிட்டது .. | 102 |
| 21. | ஷங்கங்கின் சாகசம் .. | 105 |
| 22. | கூவம் நதிக்கரையில்.... .. | 112 |
| 23. | சின்னப் பக்கிரி .. | 120 |
| 24. | நல்ல முடிவு .. | 128 |

# சைனா சீனு



ஆர்வி

MADURAI UNIVERSITY L...
MADURAI-2

## 1

## இருளிலே மறைந்தான்

இந்தக் கதையின் தலைப்பே உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது, அல்லவா? ஏதோ சீனா தேசத்துக் கதைபோல் இருக்கிறது; பெயரெல்லாம் வாயிலேயே நுழையாது என்று நினைக்கிறீர்கள், அல்லவா?

அப்படியெல்லாம் நினைக்க வேண்டியதே இல்லை. அந்த மாதிரி எதையாவது எண்ணிக்கொண்டு கதையைப் படிக்காமல் கோட்டை விட்டு விடாதீர்கள். இது சீனாக்காரர்களைப் பற்றிய கதை அல்ல; சீனா தேசத்தில் நடந்த கதையும் அல்ல. இது நம் நாட்டில் நடந்த கதை; இதில் வருகிறவர்களும் நம் ஊர்க்காரர்கள் தான்.

ஆனால் சில பேருடைய பெயர்கள் மட்டும் கொஞ்சம் வேடிக்கையாக இருக்கக் கூடும். உதாரணமாக, இதிலே ஷங்கங் என்று ஒருவன் வருகிறான். அவனுடைய உண்மையான பெயர் என்ன தெரியுமோ? சங்கரன். இது எப்படிச் சீனாக்காரன் பெயர் மாதிரி ஆயிற்று என்பது உங்களுக்கே பின்னால் தெரியப் போகிறது.

அவன் பெயர் கிடக்கட்டும். இந்தக் கதையின் முக்கிய பாத்திரமான பையன் இருக்கிறானே, அவன் பெயரே சீனன் என்பது தான். சீனன் என்பது சீனிவாசன் என்ற பெயரின் சுருக்கம் என்பது நான் சொல்லியா உங்களுக்குத் தெரியவேண்டும்?

அவன் பெயர் சீனன் ஆயிற்றே? ஆளைப் பார்த்தாலும் கொஞ்சம் வேடிக்கையாகத்தான் இருப்பான். கொஞ்சம் மஞ்சளும் கறுப்பும் கலந்த மாநிறம். கொஞ்சம் சப்பை மூக்கு. கொஞ்சம் சின்னக் கண்கள். எல்லாம் கொஞ்சம் கொஞ்சந் தான். அதிகமில்லை. இத்தனைக்கும் அவன் சிறு பையனா, அதனால்

பார்க்கக் கொஞ்சம் குறிப்பாக, லட்சணமாக இருப்பான். ஆனால் அவனுடைய ஆடைகளை மட்டும் பார்த்துவிடக் கூடாது. தொள தொளவென்று கிழிந்த தாத்தா சட்டையைப் போட்டுக் கொண்டு, அரை டிராயர் ஒன்றையும் அறுதல் கிழிசலாக மாட்டிக்கொண்டு நிற்பான்.

எதற்காகச் சொல்ல வந்தேன் என்றால் பெயரைக் கண்டு ஏமாறவேண்டாம் என்பதற்காகத்தான். ஆகவே கதையை இனிக் கவனிப்போம்.



சென்னையில் மிக முக்கியமான வீதிகளிலே மவுண்ட் ரோடு என்பதும் ஒன்று. அது சர்க்கார் மாளிகையிலிருந்து, செயின்ட் தாமஸ் மவுண்ட் என்ற இடம் வரையில் கிட்டத்தட்ட ஏழுமைல் தூரம் உள்ள பெரிய சாலை. அந்தச் சாலையின் ஆரம்பத்திலேயே சீனாக்காரன் ஹோட்டல் ஒன்று இருப்பதைப் பலர் பார்த்திருக்கலாம். அந்த ஹோட்டலின் பெயர்தான் சு-சூ! பெரிய எட்டுக்கால் பூச்சிகளைப் போன்ற எழுத்துக்களில் 'சு-சூ! சுங்கிங் ரெஸ்டுரன்ட்' என்று மேலே எழுதியிருப்பார்கள். நம்மால் எல்லாம் சட்டென்று தெரிந்துகொள்ள முடியாது. அதன்மேல் ஆங்கிலத்தில் எழுதியிருப்பதைப் பார்த்துத்தான் தெரிந்துகொள்ளலாம்.



ஹோட்டல் என்றால் நமது ஊர் இட்டிலி, காபி ஹோட்டல் அல்ல. ஒருவர் போனால் ஒன்பது பேர் இடமில்லாமல் நின்றுகொண்டிருக்கிற ஹோட்டல் அல்ல. ஈக்களும் கொசுக்களும் சுக வாசஸ்தலங்களாக எண்ணி மொய்த்துக்கொண்டிருக்கும் ஹோட்டலும் அல்ல. வெண்கலக் கடையில் யானை புகுந்ததுபோல் கடா முடா என்று டவரா டம்ளர்களையும் தட்டுகளையும் உருட்டுகிற ஹோட்டலும் அல்ல.

அங்கே எப்போதும் அமைதியாக இருக்கும். எத்தனையோ பேர் அங்கே குடும்பத்தோடுகூடத் தங்கியிருப்பார்கள். ஆனால் வெளிப் பார்வைக்கு அங்கே யாரும் இருப்பதாகவே தெரியாது.

அந்த ஹோட்டலுக்கு வெளிவாசல் பக்கத்தில், சாலையை ஒட்டி, செய்தித்தாள் விற்கும் கடை ஒன்று இருக்கிறது. 'கலைமகள் - கண்ணன் - மஞ்சரி - மித்திரன்-ஹிந்து' என்று கை நிறைய ஒரு கட்டுச் சுமையை வைத்துக்கொண்டு ஐந்தாறு சிறுவர்கள் அங்கே எப்போதும் கூவிக்கொண்டிருப்பார்கள். ஜனநெருக்கடியும் போக்குவரத்துச் சந்தடியுமான இடமாகையால் பத்திரிகைகளுக்கு அங்கே நல்ல விற்பனை. அந்தச் சிறுவர்கள் எல்லாரும் பார்வைக்குச் சோம்பேறிகள் மாதிரி இருந்தாலும் சாயங்கால வேளைகளில் மிகவும் சுறுசுறுப்பாகக் கூட்டங்களில் சுற்றிக்கொண்டிருப்பதைக் காணலாம். பக்கத்தில் உள்ள சினிமாத் தியேட்டர் வாசலிலும் பஸ் நிற்கும் இடங்களிலும் டாக்ஸிகள் நிறுத்தியுள்ள வரிசைகளிலும் அந்தச் சிறுவர்கள் ஆளுக்கொரு பக்கமாகப் போய் நின்று, பத்திரிகைகளின் பெயரைச் சொல்லிக் கூவுவார்கள். அவர்களிலே வெகு சீக்கிரத்தில் எல்லாப் பத்திரிகைகளையும் விற்றுவிட்டு வருகிறானே, அவன் பெயர்தான் ஷங்கங். பக்கத்துச் சீனாக்கார

ஹோட்டலின் சிப்பந்திகள் கூப்பிட்டுக் கூப்பிட்டுத்தான் சங்கரன் என்பது 'ஷங்கங்' ஆகிவிட்டது.

ஆனால் பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்தில் நடைபாதையில் கடையைப் பரப்பிக்கொண்டு, போகிறவர்களையும் வருகிறவர்களையும் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறனே, அவன்தான் நம்முடைய கதாநாயகன் சீனன். அவனிடம் மட்டும் பத்திரிகைகள் அப்படியே தங்கித்தான் கிடக்கும். லேசிலே எதுவும் விற்பனையே ஆகாது. ஏனென்றால் அவனுடைய முகராசி அப்படி என்பதைத் தவிர வேறு என்ன சொல்வது?

அவனுடைய மற்றச் சகாக்கள் அவனைக் கிண்டலும் கேலியும் செய்வார்கள்; பார்த்துப் பார்த்துச் சிரிப்பார்கள். அவனைத் தனியே விட்டுவிட்டு, மூன்றுவது ஷோ சினிமாவுக்குக்கூடப் போவார்கள். ஆனால் அவனோ ஒன்றையும் லட்சியம் செய்யாமல் உட்கார்ந்திருப்பான். ஒன்றையும் புரிந்துகொள்ளவும் மாட்டான். எதற்கும் கொஞ்சங்கூட முகத்தைச் சிணுக்கமாட்டான். கோபம் என்பதே துளியும் வராது. பேசாமல் கற்சிலைபோல் அசைந்துகொடுக்காமல் உட்கார்ந்திருப்பான்.

பத்திரிகைகள் என்றுல் எப்படியோ விற்பனை ஆகாமலா இருக்கும்? தமிழ்ப் பத்திரிகைகள் எப்படியும் விற்றுவிடும். ஆங்கிலப் பத்திரிகைகள்தான் அவ்வளவு அங்கே விற்பனை ஆகாது. ஆனால் அவனுக்கு அதையெல்லாம் விற்பதற்கு நிச்சயமாக ஓர் இடம் இருந்தது. சு-சூ ஹோட்டலில் வந்து தங்கியிருப்பவர்கள் அத்தனை பேரும் அவனிடந்தான் வாங்குவார்கள். அவனைப் பார்த்தால் அவர்கள் தேசத்துப் பையன் மாதிரி கொஞ்சம் இருக்கிறுனு, அந்த அபிமானத்தில் வாங்குவார்கள்.

அன்று பத்து மணி இருக்கும். அன்று என்றுல் அது ஒரு வெள்ளிக்கிழமை. அந்த நாளில்தான் சென்னையில் வாரப் பத்திரிகைகள் எல்லாம் கடைக்கு வருகிற வழக்கம். கடைப் பையன்களுக்கு அன்று சரியான சுமையாக இருக்கும். கத்தலோ கத்தல் என்று காது கிழிவதுபோல் கத்தி விற்பனை செய்வார்கள். பணமும் அன்று பை நிறையப் புரளும். அதே போலத்தான் சீனன் பையிலும் நோட்டும் சில்லறையுமாகக் குவிந்து கிடந்தன. அவன் ஆங்கிலத் தினசரித் தாள்களை ஹோட்டலில் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வந்தான். கடைக்காரன் அன்று வெகு கோபமாக இருந்தான். அவனுக்கு, சாதாரணமாகவே ரத்தவிழிகள்! இன்றைக்கு அத்துடன் கோபம் வேறு. இரண்டும் நெருப்புப் பந்துகள் மாதிரி ஓடி ஓடி உருண்டன.

எதிரே ஷங்கங் கையைப் பிசைந்துகொண்டு நின்றிருந்தான்.

"பாக்கிக்கு மரியாதையாகப் பதில் சொல்லல்லே, தோலே உரிச்சுப்புடுவேன்!" என்றான் கடைக்காரன்.

"அதான் சொன்னேனே!" என்று முனகினான் ஷங்கங்.

"என்னடா சொன்னே?"

"இதோ பாரேன், சொக்காயை! கீச்சல். துட்டு எங்கியோ ஊந்து பூட்டுது-ஒணும்னு நான் துட்டைத் தொலேச்சேன்?"

"டேய், மூடுரு வாயை; சொக்காய் கீச்சல்னு தெரியு மில்லே?" —

"தெரியும்."

"பின்னே ஏண்டா துட்டை அதுலே போட்டே?"

"தெரியாது."

"என்னடா தெரியாது!"

"கீச்சல்னுதான் தெரியாதே!"

"முந்தி தெரியுமின்னியேடா!"

"நான் எப்ப சொன்னேன்?"

"இப்ப நீ சொல்லல்லே...டேய், சீனு! இப்ப இவன் சொன்னான், இல்லியாடா?"

"அதென்னமோ எனக்கு என்னப்பா தெரியும்? க்குங்..."

"உனக்குத் தெரியாதா! இங்கேதானேடா நிக்கிறே?"

"எங்கே நிக்கிறேன்?"

"டேய் பசங்களா! எல்லாரும் ஒண்ணுச் சேந்துக்கிட்டு, குல்லாவா தைச்சுப் போடப் பாக்கிறீங்க? புடிச்சுப் போலீஸ் காரங்கிட்டேக் குடுத்து, உதைக்கச் சொல்லணுமா?" என்று கோபம் தாங்காமல் பாய்ந்தான் கடைக்காரன். ஆனால் ஷங்கங் சிட்டாகப் பறந்துவிட்டான்!

சீனன் மட்டும் ஓடாமல் நின்றான். நின்றதோடு மட்டும் அல்ல; ஷங்கங்கிடம் மெதுவாகக் கணக்குக் கேட்டு வாங்குவதாகவும் கடைக்காரனிடம் ஒப்புக்கொண்டான். அதற்குப் பிறகு, தன் கணக்கையும் காலணா மிச்சமின்றிச் சரியாகக் கட்டின பிறகுதான் கடைக்காரன் அவனை வெளியே போகவிட்டான்.

"ஒம்பது ரூபா விளுந்திட்டுதுன்னா யாருடா நம்புவாங்க! சும்மா டூப் வுடறாண்டா!" என்றான் கடைக்காரன்.

"வுளுந்து இருக்கும்பா! கீச்சல் சொக்காயாச்சே!"

"அப்பன்னா பாக்கித் துட்டுமட்டும் எப்படிடா விளாமல் இருந்திச்சி! விளுந்தா எல்லாந்தானேடா போயிருக்கணும்?"

"ஆமாம்பா."

"அப்ப, அதுபோலக் கணக்கு கொடுக்கணுமில்லே?"

"ஆமாம்பா."

"அப்ப ஏன் கேட்டா ஓடறே?"

"நான் ஓடல்லியே!"

"நீ இல்லேடா. இவன் யாருடா இவன்? அந்தப் பயலைச் சொல்றேண்டா!"

"அவன்தான் இல்லியேப்பா!"

"இல்லாட்டி நீ போய்ச் சொல்லேன், சும்மா வுட்டுடமாட்டேன்னு. புடிச்சுப் போலீஸிலே குடுத்திடுவேன்னு சொல்லேன்!"

"ஹ்ஹும்..டே—அம்மாடீ..நா மாட்டேம்பா, கையைப் புடிச்சி ஒரு திருகு திருகினுன்னு—டே அம்மாடீ..உசிரு போயிடும்!"

"டேய் மூடுறு வாயை!" என்று கடைக்காரன் கோபத்தோடு ஓர் அதட்டல் போட்ட பிறகுதான் சீனன் ஓய்ந்தான்.

கடையை விட்டு வழக்கம்போல் பஸ் நிற்கும் இடத்திலுள்ள மேடையில் படுக்கப் போனுன் சீனன்.

ஷங்கங் வெகு நாளாகவே அந்தக் கடைக்காரனிடம் கரு வைத்திருந்தான். நிறையக் காசு குலுங்குகிற நாளாகப் பார்த்து அதை விட்டு ஓடிப்போய்விடப் போவதாக அவன் நாலைந்து நாளாகவே அடிக்கடி சொல்லி வந்தான். அதன்படி இன்று செய்துவிட்டான்போல் இருக்கிறது என்று சீனனுக்குத் தோன்றியது.

மறுநாள் சீனன் மட்டும் மற்றவர்களுடன் பத்திரிகை வாங்கி விற்று வந்தான். ஆனுல் ஷங்கங் மட்டும் கண்ணில் படவில்லை. அதற்கு மறுநாளும் வரவில்லை. ஷங்கங் வைதாலும் திருடினுலும் பரிகாசமெல்லாம் செய்தாலும் அவன் மனசு சீனனுக்கு நன்ருகத் தெரியும். சீனன் என்ருல் அந்தப் பயலுக்கு உயிர்தான். இவனுக்கும் அப்படித்தான். இனி அவனைப் பார்க்கவே முடியாமல் போய்விடுமோ என்று எண்ணியபோது சீனனுக்கு என்னவோபோல் இருந்தது, தூக்கங்கூட வரவில்லை.

மணி பன்னிரண்டு இருக்கும். எல்லாக் கடைகளும் மூடியாகிவிட்டன. மெதுவாகச் சீனன் காதருகில் வந்து ஒரு குரல், "டேய் சீனு - தூங்கிட்டியாடா?" என்று கேட்டது.

சீனன் துள்ளியடித்துக்கொண்டு எழுந்து பார்த்தால், ஷங்கங்தான் நின்றுகொண் டிருந்தான். அவன் சாதாரண ஷங்கங்

காகவா இருந்தான்? சொக்காய், டிராயர் எல்லாம் புதியவை! அது மட்டுமா? கையிலே ஒரு தட்டு நிறைய பிளாஸ்டிக் சாமான்கள். 'எதை எடுத்தாலும் ஒன்றீணு, இரண்டிரீணு' சாமான்கள்!

"ஏண்டா ஷங்கா! ஏதுடா இதெல்லாம்!"

"எல்லாம் என்னுதுடா - வாங்கினேண்டா!"

"எதுக்கு?"

"இனிமே இதாண்டா நம்ப வியாபாரம்?"

"பேப்பரு விக்கமாட்டியா?"

"அதுக்கு முந்தாநாளே முளுக்குப் போட்டாச்சே!"

"உன்னேப் புடிச்சுப் போலீஸிலே கொடுத்திடறேன்னிருக்காருடா கடைக்காரரு."

"அவரு கெடக்குறுருடா! என்னேப் புடிச்சால்ல தெரியும்? அவரையே புடிச்சி விட்டுடுவேன். சோடா, கலரா அவரு விக்குறுரு? என்னே என்ன பண்ணுவாரு?"

"திருட்டு எசென்சுன்னு!"

"போடா-அது மயக்கம் வர விசயம்டா. நமக்குத் தெரியாதுடா!"

"சரி......எனக்கும் இந்த மாதிரி ஏதாவது வாங்கிக் கொடுத்தா நானும் துணேயாக் கூடவே வருவேனில்லே!"

"ஆமாம்; அதுக்கு நீயும் ஒரு நாளு நான் செய்த வேலேயைச் செய்!"

"சே சே.....நம்பளுக்கு அதெல்லாம் முடியாதுடா!"

"அப்ப ஒண்ணு செய்! நாளேக்கு எங்கூட வா. என்ன? ஒரு எடத்துக்கு அழேச்சுக்கிட்டுப் போறேன். முதல்லே சும்மாக் கூலிக்கு விக்கலாம். அப்புறம் நீயே சொந்தமா விக்கக் கிளம்பிடலாம். சரிதானு?"

"சரிதான்."

"அப்ப இங்கேயே நாளே எனக்காகக் காத்துக்கிட்டு இரு. நான் சாயங்காலம் சரியா அஞ்சு மணிக்கு வறேன். அங்கே வந்து பாரு...புடிச்சா இரு. இல்லாட்டி வந்திடலாம்" என்றுன் ஷங்கங்.

"சரி" என்று தலேயாட்டினுன் சீனன்.

ஷங்கங் அதற்குப் பிறகு இருளிலே தட்டுடன் மறைந்து போனுன்.

# 2

## பாறைக்கு நடுவே பெட்டி

ஷங்கங் நடுநிசியில் வந்துவிட்டுப் போனபிறகு சீனன் வெகு நேரம் வரையில் தூக்கம் வராமல் விழித்துக்கொண்டிருந்தான். முதலில் சில்லறைச் சாமான்களை வாங்கிக் கூலிக்கு விற்கலாம்; அதற்கும் பிறகு சிறுகச் சிறுக, சொந்தமாகவே விற்கலாம், அதற்கும் அப்புறம் ஓர் இடத்தில் கடைமாதிரி பரப்பிக்கொண்டு அலையாமல் விற்கலாம். இப்படியே விற்றுக் கொண்டு போனால், அவனிடம் நாலு காசு சேர்ந்துவிட்டால் சாப்பாட்டைக்கூட அவன் தனியாக வைத்துக்கொள்ளலாம். வீட்டுக்கே போகவேண்டியதில்லை. ஒவ்வொரு வேளையும் திட்டும் அடியும் வாங்க வேண்டியதில்லை; மொத்துப் படவேண்டியதில்லை. பயந்து பயந்துகொண்டு பட்டினியும் கிடக்க வேண்டியதில்லை....

வீடு, வீடு என்று சொல்வதெல்லாம் அவனுடைய சொந்த வீடு அல்ல. அங்கே இருப்பவர்களும் அவனுக்கு என்ன உறவோ, அவனுக்கே சரியாகத் தெரியாது. அவனுக்கு விவரம் தெரிந்த நாள் முதல் அவன் அந்த வீட்டில்தான் இருந்தான். அந்த வீட்டுக்காரனைச் சிற்றப்பா என்று எல்லாரும் சொன்னார்கள். அவன் சீனனைக் கொடுமையெல்லாம் செய்து, படுத்தினான். அவனைக்கூட ஒருவிதத்தில் சேர்த்துக்கொள்ளலாம். அவனுடைய மனைவி இருக்கிறாளே, காளியாத்தா, அவள் வெறும் காளி அல்ல; அசல் பத்திரகாளியேதான்! அவளைக் கண்டாலே அந்தச் சேரி நடுங்கும். அப்புறம் சீனன் எல்லாம் எந்த மூலைக்கு?

கூவம் நதி ஓரமாக இருந்த கூரைக் குடிசைகளில் கடைசியாக இருப்பதுதான் சீனனுடைய சிற்றப்பாவுக்குச் சொந்தமானது. பூட்டு, பெட்டிகளுக்குச் சாவி போடுவது, குடை ரிப்பேர் செய்வது இதெல்லாந்தான் அவன் தொழில். சிங்கப்பூர் சின்னப் பக்கிரி என்றால் சின்னக் குழந்தைகளுக்குக்கூடத் தெரியும். அவனுடைய கிருதாக் கிராப்பும் முறுக்கு மீசையும் பெரிய விழிகளும் பார்க்கவே பயங்கரமாக இருக்கும். எப்போதும் ஜெயில் கைதி மாதிரி, கட்டம் போட்ட சட்டைதான் போட்டுக்கொண்டிருப்பான். அதை நனைக்கவும் மாட்டான். அவன் எப்படியோ போகட்டும். அவன்தான் சீனனைக் கொண்டு போய், அந்தக் கடையில் வேலைக்கு அமர்த்தினான். அன்றுடம் சீனனுடைய சம்பளம் மூன்றணவை அவன் கடைக்காரனிடமே வந்து வாரம் ஒரு முறை மொத்தமாக வாங்கிக்கொண்டு போய்விடுவான். அதைப் போய் வீட்டிலே மனைவியிடம் சொல்ல மாட்டான். ஏனென்றால் காளியாத்தாவிடம் அவனுக்குக் குலை நடுக்கந்தான். சேரி ஜனங்களுக்கெல்லாம் சிங்கப்பூர் சின்னப்

பக்கிரியிடம் பயம். ஆனால் அவனுக்கோ அவன் மனைவி ஒருத்தியிடந்தான் பயம். அதனால் காசு வாங்கிச் செலவழித்ததைப் போய்ச் சொல்லாமல் இருந்துவிடுவான். சீனன் பாடுதான் திண்டாட்டம். உண்மையைச் சொன்னால் சின்னப் பக்கிரி உதைப்பான்; உண்மையைச் சொல்லாவிட்டால் காளியாத்தா உதைப்பாள். வெறும் உதையா? பட்டினி போட்டு உதைப்பாள். இந்த மாதிரிச் சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு சீனன் திண்டாடினான். அவனுக்கு அப்பா இல்லை; அம்மாவும் இல்லை. அவர்கள் என்ன ஆனார்களோ, அந்த உண்மையும் அவனுக்குத் தெரியாது. சின்ன வயசிலிருந்து அவன் சின்னப் பக்கிரியிடந்தான் இருந்து வந்தான். இவ்வளவுக்கும் சீனன் ஒரு நாள்கூட வாய் திறந்து அவர்களை எதிர்த்துப் பேசமாட்டான். சோறு போட்டால் தின்பான்; இல்லாவிட்டால் வந்துவிடுவான். எல்லாவற்றையும் விட முக்கியமாக, அடி வாங்குவதற்கென்றே தினம் அங்கே போய்விட்டு வருவதாகத்தான் தோன்றியது.

ஷங்கங் சொன்னபடி எல்லாம் சரிவர நடந்துவிட்டால் அப்புறம் என்ன கவலை? இருந்தாலும் சீனனுக்கு உள்ளூறப் பயமாகத்தான் இருந்தது. சின்னப் பக்கிரியும் காளியாத்தாளும் அவன் எங்கே போனாலும் தேடி வந்து பிடித்துவிடுவார்கள். காசு பறித்துவிடுவார்கள். கொடுமைப் படுத்துவார்கள். ஆனால் அதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் இருக்கவேண்டும். எப்படியாவது அவர்கள் கண்ணிலே படாமல் தப்பித்துக்கொள்ள வேண்டும். இவ்வளவு பெரிய ஊரில் இதுகூடவா முடியாமல் போய்விடும்?

சீனன் மறுநாள் காலையில் மட்டும் வேலைக்குப் போனான். அதற்குப் பிறகு மாலையில் அவன் கடைக்காரன் கண்ணிலேயே படவில்லை. சரியாக ஐந்து மணி எப்போது ஆகும் என்று அவன் பதுங்கிப் பதுங்கிப் பார்த்துக்கொண்டிருந்தான். பதுங்குவதற்கு மவுன்ட் ரோடு ரவுண்டானாவில் சரியான இடம் கிடைத்திருந்தது. பாதாளக் குளியறையில் இரண்டு மணி நேரம் காலத்தைக் கழித்தான். அவனுடைய கவனமெல்லாம் ஷங்கங் வருவதிலேயே இருந்தது. ஆனால் குறித்த நேரம் தவறாமல் வரும் ரெயிலைப்போல், மவுன்ட் ரோடு கடிகாரத்தில் சின்ன முள் ஐந்திலும் பெரிய முள் பன்னிரண்டிலும் வந்து நின்றபோது கையில் பிளாஸ்டிக் சாமான் தட்டுடன் டாண் என்று ஷங்கங் பஸ் நிற்கும் மேடையருகில் தோன்றினான். அப்புறந்தான் சீனனுக்கு நல்ல மூச்சு வந்தது.

சீனனைக் கண்டதும் அவன் சிரித்தான். இருவருமாகக் கால் நடையாகவே சென்றார்கள். போகும் வழியெல்லாம் எப்படிச் சின்னப் பக்கிரியிடமிருந்து மீள்வது என்றே சீனன் யோசித்துக் கொண்டு நடந்தான்.

போன வேலை உடனே முடிவாகிவிட்டது. மறுநாள் முதல் அவனும் ஷங்கங்கைப் போல ஒரு பெரிய தட்டுக் கூடையில் சாமான்களை வைத்துக்கொண்டு சைனாபஜாரில் விற்கவேண்டும். யாராவது போலீஸ்கார்ரனைக் கண்டானோ இல்லையோ, சட்டென்று எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக்கொண்டு எங்கேயாவது போய் மறைய வேண்டும். இரவு எட்டுமணிக்கெல்லாம் விற்றவரையில் கணக்குப் பண்ணி, பணத்தையும் மீதிச் சாமான்களையும் கொடுத்தவனிடமே ஒப்படைத்துவிட்டுப் போய்விட வேண்டும். சீனன் எல்லாவற்றிற்கும் தலையை ஆட்டினான்.



வந்த வேலை ஆறு மணிக்கெல்லாம் முடிந்துவிடவே ஷங்கங் அவனை ஹைகோர்ட் பீச்சுப் பக்கம் அழைத்துக்கொண்டு போனான். போகும் வழியெல்லாம் ஜன நெரிசலாக இருந்தது. ஷங்கங் சிறிதும் கூச்சமில்லாதபடி, "ஓடியா ராஜா! ஓடியா! எதை எடுத்தாலும் ஒன்றீணா; இரண்டிரீணா!" என்று கூவினான்.

பலர் வழியிலேயே அவனைக் கூப்பிட்டு விலை விசாரித்தார்கள். சிலர் இரண்டொரு சாமான்களை வாங்கவும் வாங்கினார்கள். ஒரு பையன் தடதடவென்று ஓடிவந்தான். தட்டில் இருந்த சின்னப் பைனாகுலரைத் தூக்கிக்கொண்டான். கூடவே வந்த

அவனுடைய தந்தையோ மாமாவோ, "அடேடே. அதெல்லாம் வேண்டாண்டா! நான் வேறே ஓசத்தியாக வாங்கித் தறேண்டா!" என்றார்.

"எனக்கு ஓசத்தியும் வாண்டாம். பொசத்தியும் வாண்டாம்.



இதான் வேணும்" என்று வீம்புப் பிடித்தான் அந்தச் சிறுவன்.

"தம்பி, இது என்ன விலை?" என்றார் அவர்.

ஷங்கங் சிறிதும் தயங்காமல், "பதிமூன்றணா!" என்றான்.

"பின்னே எதை எடுத்தாலும் ஒன்றீணா, இரண்டிரீணான்னு சொன்னியே!" என்றான் சிறுவன்.

"இம்....இதெல்லாம் ஒன்றீணா; அதெல்லாம் இரண்டிரீணா....இது எல்லாம் அந்த வெலைக்கு வராது. பைனாகுலர் வேணுமானால் பதிமூன்றணாதான்!" என்றான்.

சீனனுக்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது. அந்தத் தட்டிலிருந்த இரண்டு பைனாகுலரில் ஒன்றை அவன் காலணா கூடக் குறையாமல் பதின்மூன்றணாவுக்கு அந்தச் சிறுவனிடம் விற்றுவிட்டான்.

"இதன் பேரெல்லாம் நீ எப்படா தெரிஞ்சிக்கிட்டே?" என்றான் சீனன்.

"பேரு என்னடா பேரு? ஒரு நொடியிலே தெரிஞ்சிக்கலாம். ஆனு இந்த மாதிரி செல்லம் பிடிக்கிற பையங்ககிட்டே ஆறணுச் சாமானைப் பதிமூணணுவுக்கு விக்கத் தெரியணும். அதாண்டா சாமர்த்தியம். அதைத்தான் நீ தெரிஞ்சுக்கணும்!" என்ருன் ஷங்கங்.

"இதன் விலை ஆறணுத்தாஞ?"

"ஆமாண்டா - நம்பளுக்கு நாலணுவுக்குக் கிடைக்கும். அதை ஆறணுவுக்கு விக்கணும். வித்தா ரெண்டணு லாபம். அந்த ரெண்டணுவை நீ எடுத்து ஜேபியிலே போட்டுக்கலாம்!" என்ருன் ஷங்கங், எல்லாம் கரைத்துக் குடித்தவன் மாதிரி.

"அப்படி ஏமாத்தலாமாடா?"

"போடா நீ ஒருத்தன். நாம்ப என்ன திருடருேமா, பொய் சொல்ருேமா, கொள்ளை யடிக்கிருேமா?"

"ஆறணுச் சாமானை ரெண்டு பங்கு வெலை சொன்ஞப் பொய் இல்லியா?"

"இதுதான் பொய்யா? ஆறணுச் சாமான் நம்பகிட்டே இது தான் விலை. இஷ்டமாஞ வாங்கு, கஷ்டமாஞ போ! ஆறணு மட்டும் நியாயமா? இதெல்லாம் செய்யறதுக்கு ஒரணுகூட ஆகாது. அவன் லாபம், கடைக்காரன் லாபம், அப்புறம் விக்கிற பையன்களுடைய லாபம்—கணக்குப் போட்டுப் பாரேன், எத்தினி பேரு பொழைக்கருங்கன்னு.... இதுக்கெல்லாம் பயந்தீன்ஞ நீ என்ஞ வித்துக் கிளிக்கப் போறே?" என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தான் ஷங்கங்.

சீனன் உடனே பயந்து, "அதெல்லாம் இல்லே ஷங்கா! விஷயத்தைத் தெரிஞ்சிக்கிட்டேன். எங்கே, இங்கே கொண்டா அதைப் பார்க்கலாம்!" என்று சீனன் அந்த இன்னெரு பைஞகுலரை எடுத்து இரண்டு கண்களிலும் வைத்துக்கொண்டான்.

என்ன ஆச்சரியம்! தூரத்தில் உள்ளவை எல்லாம் வெகு சமீபமாக வந்து நின்றன. பஸ் புறப்படுகிற சமயத்தில் ஒரு கிழவி ஏறப்போகிருள். அதோ யாரோ பிடித்து இழுத்து அவளை நிறுத்துகிருன்!

ஹைகோர்ட்டின் உச்சியிலுள்ள லைட் ஹவுஸ் விளக்கைக் கையாலேயே எட்டிப்பிடித்து விடலாம்போல் இருக்கிறது! சீனன் உடனே வெறும் கண்ணுல் அதை அண்ணுந்து பார்த்தான். அவ்வளவு உயரத்தில் இருக்கும் பொருள் எப்படி இவ்வளவு அருகில் தெரிகிறது! மாயக்கண்ணுடியோ, இது! இதற்குப் பதின்மூன்றணு என்ன, கையில் எவ்வளவு இருந்தாலும் கொடுக்கலாம் என்றுதான் அவனுக்குத் தோன்றியது. அதஞல்தான் ஷங்கங்கும் அப்படி இரண்டு பங்கு விலைக்கு விற்ருனே என்றும் எண்ணிக்கொண்டான்.

பிறகு அவர்கள் இருவரும் ரெயில்வே கேட்டைத் தாண்டி பீச்சுப்பக்கம் போனார்கள். ஷங்கங், சின்னக் குழந்தைகள் இருக்கும் பக்கமாகவே சாமான்களை விலை கூறிக்கொண்டு போனான். சீனன் பைனாகுலரில் கருநீலக் கடலையும் புரண்டு புரண்டு சுருண்டு விழும் வெண்ணலை வரிசைகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தான். வேர்க்கடலை, பட்டாணி விற்கும் பையன், பட்டாணிச் சுண்டல் விற்கும் கிழவர், சிப்ஸ், முந்திரிப் பருப்பு விற்கும் பாலக்காட்டுப் பையன், பிடிவாதமாகப் பிச்சை கேட்கும் ஒரு மொட்டைப் பிச்சைக்காரி, கடலை தின்னும் மனிதர்களை ஒற்றைக் கண்ணால் வேடிக்கை பார்க்கும் காக்கைகள், காக்கைக்கு வேர்க்கடலையைப் போடாமல் கிளிஞ்சலைப் போட்டு ஏமாற்றும் மனிதர்கள். மணல் வீடு கட்டி விளையாடும் சிறுமிகள்— எல்லாரும் சீனனுக்கு வெகு அருகில் இருப்பதுபோல் தோன்றினார்கள். முகந்தான் அதிலே அத்தனை தெளிவாகத் தெரியவில்லையே தவிர, மற்றவை எல்லாமே நன்றாகத் தெரிந்தன.

நடு நடுவில் பின்தங்கிப்போன சீனனைக் கூப்பிட்டு அழைத்துக்கொண்டே ஷங்கங் துறைமுகப் பக்கமாகப் போகத் தொடங்கினான். அங்கே கூட்டம் அதிகமாக இல்லாததால், "நீ இங்கேயே இரு—அந்தக் கும்பலைமட்டும் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு ஐந்தாறு குழந்தைகளுடன் இருந்த ஒரு சிறு கும்பலை நோக்கிப் போனான் அவன். சீனன் மீண்டும் பைனாகுலரில் கடலையும், கரையை நோக்கி ஊர்ந்து வரும் பாய்விரித்த கட்டுமரங்களையும் பார்த்துக்கொண் டிருந்தான். அப்படிப் பார்த்துக்கொண்டே துறைமுகத்தையும் துறைமுகத்தில் வந்து நிற்கும் கப்பல்களையும் கவனித்தான். துறைமுகப் பிரதேசத்தில் இருள் வந்து சூழ்ந்துவிட்டது. புகைபோல அலைச் சாரல் எழும்பி, பனிமூட்டமாகப் பார்வையைத் தடுத்தது. ஆயினும் துறைமுகத்தின் மதில் வளைவுச் சுவர் நன்றாகத் தெரிந்தது.

சீனன் அப்படிப் பார்த்தபோது அவன் கண்களில் ஓர் அதிசயமான காட்சி தென்பட்டது. அங்கே துறைமுகத்து மதில் வளைவின் மேலே யாரோ இருவர் முதலில் நடந்துபோவதுபோல் தெரிந்தது. பின்னர் அவர்கள் ஒருவர்மீது ஒருவர் திடீரென்று பாய்ந்தது தெரிந்தது. சற்றைக்கெல்லாம் சண்டை வெகு தீவிரமாக மாறிவிட்டது. சண்டையிட்டவர்களிலே ஒருவன் வாலிபனாகத் தோன்றினான். மற்றவன் கிழவனாக இருந்தாலும் அவன் வாலிபனைத் தடுத்து, அடிக்குப் பதில் அடி, குத்துக்கு மறு குத்து, உதைக்கு எதிர் உதை என்று சளைக்காமல் போராடி வந்தான்.

"சீனா! வாடா போகலாம்!" என்றான் ஷங்கங் திரும்பி வந்து.

"அடே, அடேய், இங்கே வந்து பாரேன்.." என்று அவனை அருகில் அழைத்தான் சீனன்.

இப்போது வாலிபனாக இருந்தவன் சளைத்துப் போகாமல் கிழவன்மீது பாய்ந்து அவன் கழுத்தை இறுகப் பிடித்து எக்கச்

சக்கமாக நெரித்துக்கொண் டிருந்தான். கிழவன் கை கால் எல்லாம் ஓய்ந்து போய், அநேகமாக வாயைப் பிளந்துவிட்டான்.

சீனன் கையிலிருந்த பைனகுலரை வாங்கிப் பார்த்த ஷங்கங், "அடேய் சீனு! கிழவன் கையில் என்னமோ ஒன்று இருக்குடா; அதனால்தாண்டா அவனால் திமிற முடியவில்லை!'' என்றான்.

சீனன் பார்த்தபோது அது ஒரு சிறு நகைப் பெட்டிபோல இருந்தது. ஆனால் அது இன்னும் சற்றுப் பெரியதாக இருந்தது. கிழவனைப் பார்த்தால் நம் ஊர்க் கிழவன் மாதிரியும் இல்லை. என்னதான் நடக்கிறது என்று பார்த்துக்கொண் டிருக்கும் போதே, வாலிபன் கிழவனுடைய கழுத்தை ஓர் அழுத்து அழுத்தி, உடலை ஒரு புரட்டுப் புரட்டி, கட்டைச் சுவருக்குக் கீழே உள்ள சிமென்டுப் பாறையிடுக்கில் தள்ளினான்.

சீனனுக்கு இந்தக் காட்சியைப் பார்க்கும்போதே விழி பிதுங்கியது. கிழவன் விழுந்தது தண்ணீர்ப் பக்கத்தில் உள்ளவர்களுக்குத்தான் தெரியுமே யொழிய, துறைமுகத்தில் உள்ளவர்களுக்குத் தெரியாது.

அந்தக் காட்சியை ஷங்கங்கும் பார்த்தான். கிழவன் பாறையிடுக்கில் விழுந்த பிறகும் பெட்டியை விடவில்லை என்பது தெரிந்தது. வாலிபன் உண்மையில் பயந்து போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் கீழே குதித்துப் பெட்டியை எடுக்க முயன்றிருக்க மாட்டானா? கிழவன் உயிர் இருக்கிறதா, இல்லையா என்றுகூட அவன் பார்க்கவில்லை. அப்படியே உயிர் இருந்தாலும் அந்த இடத்தில் இன்னும் ஒரு மணி நேரம் கவனிப்பாரற்றுக் கிடந்தால் உயிர் நில்லாது என்று அவனுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அங்கே நின்றிருந்தால் அவனல்லவா உயிரோடு மாட்டிக்கொள்ள வேண்டியிருக்கும்? அதனால் சுற்று முற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு, மதில் வளைவிலேயே ஓடினான். அதைக் கொஞ்ச தூரம் வரையில்தான் பார்க்க முடிந்தது. அப்புறம் திடீரென்று அவன் தலை மறைந்துவிட்டது.

இதையெல்லாம் யாரும் கவனித்திருக்க மாட்டார்கள் என்றுதான் அவன் எண்ணியிருப்பான். ஆனால் இரண்டு சிறுவர்கள் கையிலே பைனகுலரோடு ஒன்று விடாமல் பார்த்திருப்பார்கள் என்பதை அவன் எங்கே கண்டான்? மனிதர்கள் ஏமாறுவதெல்லாம் இப்படித்தான்!

இப்பொழுது சீனனுக்கும் ஷங்கங்குக்கும் யோசனையாகப் போய்விட்டது. நேரமோ கிழக்கே சந்திரோதயம் ஆகப்போகிற சமயம்.

இருந்தாலும் இருவரும் ஒரு முகமாக, துறைமுகத்துக்குஓடிச் சென்று, முடிந்தால் கிழவனைக் காப்பாற்றுவது; இல்லையானால் அதிகாரிகளிடமாவது சொல்வது என்று புறப்பட்டார்கள்.

## 3

## "மூச்சு இருக்காடா?"

கீழ்வானம் சிவந்து, சந்திரன் நெருப்புப் பந்து மாதிரி மெல்ல மெல்ல எழும்பி வந்தான். சிறுவர்கள் இருவரும் முடிந்த வரையில் வேகமாகத் துறைமுகத்தை நோக்கி ஓடினார்கள். முள் வேலி போட்டு, யாரும் கரையோரமாகத் துறைமுகத்துக்கு வர முடியாதபடி தடுத்திருந்தார்கள். ஆனால் இவர்கள் இருவரும் எப்படியோ புகுந்து அடித்து, துறைமுகத்துக் கட்டைச் சுவரை நெருங்கி விட்டார்கள்.

அலைகளின் மோதலைத் தடுத்து, சுவரைப் பலவீனப்படுத்தாமல் இருப்பதற்காக, பெரிய பெரிய கற்பாறைகளையும் சிமெண்டுப் பாளங்களையும் அணைப்பாகக் குவித்துப் போட்டிருந்தார்கள். தூரத்திலிருந்து பார்த்தால் ஏதோ சாதாரண மதில் சுவர் போலிருந்த துறைமுக வளைவு, அருகே போனபோது உறுதியானதாகவும் உயரமாகவும் அகலமாகவும் இருப்பது தெரிந்தது. சீறி வரும் பேரலைகள் பாறைகளிலே மோதி மோதிச் சிதைந்து போயின. சில சமயம் தண்ணீரைக் கட்டைச் சுவரின் மேல் வாரியடித்தன. பாரம் தூக்கிகளும், ரெயில்வே எஞ்சின்களும் ஓடுவதற்காகக் கட்டைச் சுவரின்மீது கடைசி வரையில் தண்டவாளங்கள் அமைத்திருந்தார்கள். இரண்டொரு ரெயில் பெட்டிகள் நிலக்கரியை நிரப்பிக்கொண்டு நின்றன.

சீனனும் ஷங்கங்கும் மலைக் குன்றின்மீது ஏறுபவர்கள் போல், சிமெண்டுப் பாறைகளின்மீது கையையும் காலையும் ஊன்றி வேகமாக ஏறினார்கள். அந்தக் கிழவர் விழுந்து கிடந்த இடத்தை உத்தேசமாக இலக்கில் வைத்துக்கொண்டு, ஏறினவுடனே ஓடிச் சென்று பார்த்தார்கள்.

கிழவர் பேச்சு மூச்சில்லாமல், நன்றாக அடிபட்டு, பாறைகளுக்கிடையே அகப்பட்டுக்கொண்டு கிடந்தார். ஷங்கங் மட்டும் வெகு சாமர்த்தியமாகத் துறைமுகச் சுவரில் ஏறி, கப்பல்கள் எல்லாம் நிற்கிற உட்புறத் தேக்கத்தைப் பார்த்தான்.

துறைமுகம் பெரிய வட்டமாக இருந்தது. கிழக்குப் பக்கத்தில் கடலிலிருந்து கப்பல் நுழைவதற்காக, ஒரு பெரிய இடைவெளி விட்டு, சுவர் முடிந்திருந்தது. மேல் புறத்தில் கப்பல் ஒன்று தளத்தில் நின்றிருந்தது. நடுவில் உள்ள தேக்கம் சுமார் இருநூற்றைம்பது அடி ஆழமாவது இருக்கும்போல் இருந்தது. ஷங்கங் பார்த்தபோது, கிழவரோடு சண்டையிட்டவனோ, அல்லது வேறு யாரோ ஒருவன் மோட்டார்ப் படகில் கப்பலை நோக்கிக் குறுக்கே

போய்க்கொண் டிருந்தான். மேல் புறத்தில் துறைமுகக் காரியால யங்கள் எல்லாம் நிலவில் மங்கலாகத் தெரிந்தன.

அந்தப் பக்கத்தில் துறைமுகத்துக்குள் சுவர் ஓரமாக ஓர் ஆள் இறங்குவதற்கு வசதியாக அங்கங்கே சிறிய படிக்கட்டுகள் இருந்தன. கிழவனை அடித்துவிட்டுப் போனவன் படிக்கட்டு வழி யாகத்தான் போயிருக்க வேண்டும். ஷங்கங் திரும்பி வந்து விட்டான்.

"மூச்சு இருக்காடா?" என்று சீனனிடம் கேட்டான்.

"மூச்சு இருக்கு! வா, இரண்டு பேருமாகத் தூக்கி, வெளி யிலே போடுவோம்!" என்றான் சீனன்.

மிகவும் பிரயாசைப்பட்டு, எப்படியோ கிழவனை மேலே தூக்கினார்கள். கிழவனுடைய சட்டைத் துணியெல்லாம் நார் நாராகக் கிழித்திருந்தது. மூக்கிலிருந்து லேசாக ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. கையும் காலும் ஒடித்துப் போட்டது மாதிரி, தூக்கும்போது தொங்கிக் கனத்தன.

"அதோ பாத்தியா - அந்தப் பெட்டி!" என்று சீனன் அந்தப் பாறையிடுக்கில் சிக்கிக் கிடந்த பெட்டியைப் போய் எடுத்தான்.

"நல்ல வேளை, அது எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டு அந்தரத்தில் நிற்கிறது. இன்னும் கொஞ்சம் சாய்வாக விழுந் திருந்தால், பாறைகளுக்கு அடியில் போய் விழுந்திருக்கும். அது வரையில் அதிருஷ்டந்தான்!" என்று சொன்னான் ஷங்கங்.

கிழவனுடைய சட்டைப் பையில் ஏழெட்டு ஐந்து ரூபாய் நோட்டுகளும், மற்றொரு பையில் ஒரு சாவியும் விலாசச் சீட்டும் தங்கியிருந்தன. இதெல்லாம் சண்டையின்போதும், கீழே விழுந்த போதும் விழாமல் இருந்தது பெரிய ஆச்சரியந்தான். ஆச்சரியம் கூட இல்லை; பெரிய அதிருஷ்டமேதான்.

மங்கிய நிலவொளியிலே விலாசச் சீட்டைப் படிக்க முடிய வில்லை. மேலே என்ன செய்வதென்றும் அவர்களுக்குப் புரிய வில்லை.

"வாடா, இந்த நோட்டு ஆச்சு; பெட்டியாச்சு. எடுத்துக் கொண்டு போயிடலாண்டா! இன்னும் இங்கே இருந்தா வம்புடா!" என்றான் ஷங்கங்.

"சே சே! அப்படியெல்லாம் செய்யக் கூடாதுடா! ஓர் உயி ரைத் தவிக்க விட்டுட்டுப் போகக்கூடாதுடா!" என்றான் சீனன்.

ஷங்கங் அந்தச் சிறு பெட்டியைத் திறக்க முயன்றான். எது மூடி, எது அடி என்று தெரியவேயில்லை. திறக்கவும் முடியவில்லை. பெட்டியோ கிழங்காகக் கனத்தது. பார்க்க அழகாகவும் பூவேலைப் பாட்டுடனும் இருந்தது. மெதுவாக அந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு போய்விடலாம் என்றே அவனுக்குத் தோன்றியது.

இல்லாவிட்டால், கிழவனுல் வீண் வம்புகளில் இருவரும் மாட்டிக் கொள்ளும்படி நேரும் என்று அவன் கருதினுன்.

''நம்மைச் சுங்கப் போலீஸ்காரன் யாராவது பார்த்தால், உள்ளே போய்க் கம்பி எண்ண வேண்டியதுதான். வாடா சீனு! போகலாம்; நேரமாயிட்டுது'' என்ருன் ஷங்கங் மறுபடியும்.

சீனன் கேட்கவில்லே. ''நீ வேண்டுமாஞல் முன்ஞல் போ! நான் கிழவரை மூர்ச்சை தெளிய வைத்துவிட்டு வருகிறேன்'' என்ருன்.

''இந்த ரூபாய், பெட்டி எல்லாத்தையும் நான் எடுத்துக் கொண்டு போறேன். நீ அப்புறமா வந்தால், ஹைக்கோர்ட்டுக் குள்ளே முதல் வாசல்லே நான் இருப்பேன்; அங்கே வந்துடு'' என்ருன் ஷங்கங்.

''சரி; போ!'' என்ருன் சீனன்.

அப்புறம் என்ன தோன்றிற்ருே என்னவோ? "இந்தப் பெட்டியை நீ வரும்போது கொண்டுவா. நான் இந்த ரூபாயை மட்டும் கொண்டு போறேன். இந்தப் பணம் இருந்தால் நாம் ஒரு பயகிட்டெப் போய்க் கைகட்டி நிக்க வேண்டியதில்லே. நாற்பது ரூபாய் இருக்கு..ஆளுக்கு இருபது ரூபாய் இருந்தால் சொந்த மாகவே தட்டுச் சாமான் வாங்கி விக்கலாம். நான் போகட்டுமா?'' என்ருன் ஷங்கங்.

''சரி, போ!'' என்ருன் சீனன்.

எப்படித்தான் இவ்வளவு தைரியமாக, இவ்வளவு உறுதி யாக அவனுக்குச் சொல்ல வந்ததோ தெரியாது. அதைத்தான் அதிருஷ்டம் என்று சொல்ல வேண்டும்!

# 4
# கிழவரும் சீனனும்

ஷங்கங் வந்த வழியாகவே கஷ்டப்பட்டு இறங்கி, நிலவிலே புள்ளிபோல மறைந்து போனுன். சீனன் மட்டும் என்ன கஷ்டம் வந்தாலும், என்ன ஆபத்து நேர்ந்தாலும் அந்தக் கிழவரை அந்த நிலையில் தனியே விட்டுச் செல்வதில்லை என்று உறுதியாகத் தங்கி விட்டான்.

மூக்கிலே விரலை வைத்து, மூச்சு வருகிறதா என்று அடிக்கடி பார்த்தான். இருதயம் அடித்துக்கொள்கிறதா என்று அடிக்கடி மார்பிலே கையை வைத்துப் பார்த்தான்; பிறகு மெதுவாக, "ஸார், ஸார்! ஐயா, ஐயா!' என்று ஆசை ஆவலாதியோடு கூப்பிட்டுப் பார்த்தான்.

ஆனுல் என்ன ஆச்சரியம்! அவன், "ஐயா, ஐயா!" என்று கூப்பிட்டவுடனேயே, "உம்..உம்.." என்று எங்கிருந்தோ குரல் வருவதுபோல் சத்தம் கேட்டது.

சீனன் திடுக்கிட்டான். அந்தக் கிழவர் செத்துப்போய், அவருடைய ஆவிதான் பதில் சொல்லுகிறதோ என்று பயம் வந்து விட்டது. பயத்தோடு அவன் மீண்டும் சற்று உரத்த குரலில், "ஐயா, ஐயா!" என்று அந்தக் கிழவருடைய மார்பைப் பிடித்து உலுக்கினுன்.

அதற்கும், "உம்...உம்" என்று பதில் வந்தது.

சீனன் அந்தக் கிழவர் முகத்தை உற்றுப் பார்த்தான். நிலவிலே அந்தக் கிழவருடைய கண் விழிகள் மெல்லத் திறந்திருப்பது தெரிந்தது. சீனனுக்கு அந்தக் காட்சி இன்னும் பயத்தை அதிகரிக்கச் செய்தது.

"உயிரோடுதான் இருக்கீங்களா?" என்று தன்னை மறந்து கேட்டான் சீனன்.

"ஆமாம்" என்று கிழவருடைய உதடுகள் அசைந்தன.

"நிசமாகவா?"

"ஆமாம் தம்பி!"

சீனனுடைய மன நிலையை வர்ணிக்க முடியவில்லை. பாவம்! திகைப்பு, அதிர்ச்சி, ஆச்சரியம், நடுக்கம், உதறல், பிரமிப்பு, படபடப்பு-எல்லாம் ஒரே சமயத்தில் ஒருவனுக்கு உண்டானுல், அதை எப்படி வர்ணிப்பது? எல்லாம் சீனனுக்கு அவ்வமயம் இருந்



தன. அவன் என்னவோ தைரியமாய், ஷங்கங்கிடம் அப்புறம் வருவதாகச் சொல்லிவிட்டானே தவிர, இப்போது உடனே குதித்து எழுந்து ஓடிவிடலாமா என்று தோன்றியது. ஆனால் கிழவருடைய கை அவனுடைய கையை மெல்லப் பிடித்துக்கொண்டது. அதனால் அவனால் நினைத்ததை நினைத்தபடி செய்ய முடியவில்லை. அவனுக்கு எதனாலோ அழுகையே முட்டிக்கொண்டு வரும்போல் இருந்தது.

"பயப்படாதே, தம்பி!" என்று கிழவர் மிகவும் பலவீனமான குரலில், கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோலக் கூறினார்.

"இல்லே ஐயா, தெரியாமல்..தெரியாமல்..செய்திட்டேன். ஐயா!" என்று சீனன் அழுகை தொண்டையை அடைக்க, உளறுவதுபோல் கூறினான்.

கிழவர் விருட்டென்று எழுந்து உட்கார்ந்துவிட்டார். சீனன் நடுநடுங்கிப் போய் விலகி உட்கார்ந்தான். கைப்பிடி மட்டும் கிழவர் கையிலேயே இருந்தது. இல்லாவிட்டால், காற்றோடு காற்றாகச் சிட்டாகப் பறந்து போயிருப்பான்.

"பயப்படாதே...தம்பி! பயப்படாதே! நான் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன்... பணம் போனால் போகட்

டும்...இதோ பாத்தியா...இன்னும் வேண்டிய பணம் இருக்கு..." என்று நிஜார்ப் பையில் கையைவிட்டு, ஒரு கற்றை நோட்டை எடுத்துக் காட்டினார் கிழவர். சீனன் விழித்த கண்ணை இமைக்காமல் உட்கார்ந்திருந்தான். கிழவர் மீண்டும், "என்னாலே பேச முடியல்லியே தவிர, நான் எல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். நீ மட்டும் தைரியமாய் இருந்தியே - அதுவே போதும். உன் இரக்கத்துக்கு ஆண்டவன் வெகுமதிகள் கொடுப்பார்; பயப்படாதே!" என்று தேவ தூதனைப்போல், கொச்சையான மொழியில் நிறுத்தி நிறுத்திப் பேசினார்.

சீனனுக்குத் தைரியமும் நம்பிக்கையும் ஏற்பட்டன.

"என் உயிரைக் காப்பாத்தணும் என்று நீங்கள் ஓடி வந்தீர்களே; உங்களுடைய நல்ல சுபாவத்தை மெச்சுகிறேன். மெதுவாக இரண்டு பேருமாகத் தூக்கி என்னைக் கரை சேர்த்தீர்களே, அது போதும். நீங்கள் மட்டும் வராமல் இருந்திருந்தால், எனக்கு நினைவே வந்திருக்காது; பாறைகளுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டு அப்படியே வாயைப் பிளந்து உயிரை விட்டிருப்பேன். அதனால் பயப்படாதே; சந்தோஷப்படு! நீ யாராக இருந்தாலும் இனி நீ என் சொந்த மகன், பேரன் மாதிரி. எனக்கு மறுபடி உயிரைக் கொடுத்த உனக்கு, என் உயிரையே வேண்டுமானாலும் கொடுப்பேன்" என்று திக்கித் திக்கி, மிகவும் கஷ்டப்பட்டுக் கூறினார் கிழவர்.

சீனன் எல்லாவற்றையும் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்தான். பார்த்தால் சீனுக்காரன் மாதிரி இருந்த அந்தக் கிழவர், நம் ஊர்க்காரன் மாதிரி தமிழ் பேசுவது அவனுக்கு வியப்பாக இருந்தது. அவருடைய பேச்சு நம்பிக்கையை உண்டாக்கிற்று. அவருடைய குரல் உள்ளத்தைத் தொட்டது; உருக்கமாகவும் உண்மையாகவும் இருந்தது; தன் நினைவு தெரிந்து செய்த ஒரு நல்ல காரியம் இதுதான் என்று அவனுக்குப் பட்டது.

"வா, தம்பி! உன் தோளைப் பிடித்துக்கொண்டு மெள்ள நடக்க முடியுமோ, பார்க்கிறேன். எக்கச்சக்கமாக ஓரத்தில் வந்து மாட்டிக்கொண்டேன். இல்லையோ, அந்தப் பயலின் மூக்கை உடைச்சுப் போட்டிருப்பேன்..ஸ்..ஆ! கால் ஒடிந்து போனாப் பலே வலிக்கிறதே!.." என்று கிழவர், சீனனுடைய தோளைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றார். இரண்டு மூன்று முறை தடுமாறிவிட்டு, கடைசியாக முயற்சியை விடாமல் எழுந்துவிட்டார்.

"அந்தச் சாவியும் பெட்டியும் உங்கிட்டேதானே இருக்கு?"

"ஆமாம், ஐயா."

"அது போதும்; நட; உன் தோளைப் பிடித்துக்கொண்டு வருகிறேன்" என்று கிளம்பினார் கிழவர்.

அதற்குப் பிறகு அவர்கள் ரெயில் தண்டவாளத்தின் வழியாக, துறைமுகத்தை விட்டு, ஒருவர் கண்ணிலும் படாமல் வெளியில் வந்து சேர்ந்ததே ஒரு தனிக் கதை. அதையெல்லாம் வளர்த்துவதில் என்ன பயன்? எத்தனை இடத்தில் கிழவர் கீழே விழுந்து எழுந்தார், தெரியுமா? கடைசியில் தட்டித் தடுமாறி, ரெயில்வே லயனை மிகவும் பிரயாசைப்பட்டுக் கடந்து, எதிரே வந்த காவற்காரனுடைய கண்ணில் படாமல் பதுங்கி, எண்ணெய்க் கிடங்கு வழியாக அவர்கள் முதல் பீச்சுத் தெருவுக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது கிட்டத்தட்ட மணி பதினொன்று இருக்கும்.

தெருவிலே மனித சஞ்சாரமே இல்லை. நீல நிற விளக்குகள் மட்டுமே அந்த விசாலமான வீதியில் வெறிச்சென்று தொங்கிக் கொண்டிருந்தன. பீச் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் நாலு ஐந்து ரிக்ஷாக்காரர்கள் வண்டியிலேயே சாய்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். காலடிச் சத்தம் கேட்டதுமே சிலர் கண் விழித்துப் பார்த்தார்கள். பிரம்மாண்டமான கட்டடங்கள் நிறைந்த அந்த நீண்ட சாலையில் போக்குவரத்தே இல்லாமல் இருப்பது பொருத்தமாக இல்லை. கிழவரும் சீனனும் ஒருவரை ஒருவர் இறுகப் பற்றிக்கொண்டு சாலைக்கு வந்ததும் ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரன் ஓடிவந்தான். கிட்டே வந்து பார்த்த பிறகுதான் அவன் பேசாமல் திரும்பிப் போனான். இவ்வளவு கிழிந்த சட்டையும் அழுக்குச் சட்டையும் போட்டுக்கொண்டிருப்பவர்கள் எங்கே ரிக்ஷாவில் போகப் போகிறார்கள் என்று அவனுக்கு அலட்சியம்.

ஆனால் தற்செயலாக அந்தப் பக்கமாக வந்த டாக்ஸி ஒன்றை, கிழவர் கைகாட்டி நிறுத்தினார். அவனும் நிறுத்தத் தயங்கிக்கொண்டேதான் நிறுத்தினான்.

கிழவர் மெல்லக் கதவைத் திறந்துகொண்டு, சீனனோடு ஏறி உட்கார்ந்தார். இதுவரையில் காரிலேயே ஏறிப் பார்த்திராத சீனனுக்கு வாய் அடைத்துப் போய்விட்டது. இந்தக் கிழவர் எங்கே போகப் போகிறார் என்பதைக்கூட அவன் தெரிந்து கொள்ளவில்லை. ஒரு கையிலே அந்தச் சிறு பெட்டியையும் சாவியையும் பத்திரமாக வைத்துக்கொண்டு கிழவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான்.

"நேரே மவுன்ட் ரோடு போப்பா!" என்றார் கிழவர்.

"மவுன்ட் ரோடிலே எங்கே?"

"சைனீஸ் ரெஸ்டாரன்ட் - சைனா சு - சூ!" என்றார் கிழவர்.

இதைக் கேட்டதும் சீனனுக்கு இன்னும் ஆச்சரியமாக இருந்தது. அத்துடன் கொஞ்சம் உதைப்பாகவும் இருந்தது. பத்திரிகைக் கடைக்கு அன்று மட்டம் போட்டிருந்தான் அல்லவா?

அவன் கண்ணில் படும்படியாக இருந்தால் என்ன செய்வது? அது தான் பயம்.

வண்டி பாரிஸ் கார்னரில் வளைந்து ஹைக்கோர்ட்டு வழியாக, பிராட்வே, பூக்கடை, பாய்க்கடை, சென்டிரல் என்றெல்லாம் கடந்து, சர்க்கார் மாளிகை வழியாக வந்தது.

இத்தனை சீக்கிரத்திலே மவுன்ட் ரோடு வந்தது சீனனுக்கு ஆச்சரியமாக இருந்தாலும், மனசுக்குப் பிடிக்கவே இல்லை. டாக்ஸியில் ஏறினதுபோலவே இல்லையே, அதற்குள்ளே இறங்க வேண்டும் என்றால் யாருக்குத்தான் மனசு வரும்? வண்டி சர்ரென்று பத்திரிகைக் கடையைக் கடந்து, சைனீஸ் ரெஸ்டாரன்டுக்குள் நுழைந்தது. சீனன் அந்தச் சந்துக்குள் வரும் போதுதான் அதைக் கவனித்தான். கடை திறந்திருந்ததா, மூடி யிருந்ததா என்பதை அவன் சரியாகக் கவனிக்கவே இல்லை.

வண்டியைவிட்டு இறங்கியதும் கிழவர் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தார். டிரைவர் மீதி இரண்டு ரூபாயை நீட்டிய போது, "தம்பி, வாங்கிக்க அதை!" என்று சொல்லிவிட்டு, கிழவர் முன்னால் போனார்.

தன்னிடம் கிழவருக்கு இருந்த அன்பையும் நம்பிக்கையையும் கண்டு சீனனுக்குப் பெருமையாக இருந்தது. அவனையும் கிழவரை யும் சேர்த்துப் பார்த்த ஹோட்டல் மானேஜர், சிப்பந்திகள் அனை வரும் எழுந்து நின்றார்கள். எல்லாரும் அவர்களை வியப்புடன் பார்ப்பதைக் கண்ட சீனனுக்கு உண்மையில் பெருமையாகத்தான் இருந்தது. ஒரு சிப்பந்தி மிகவும் மரியாதையோடு முன்னால் வந்து சீனனிடம் சாவியை வாங்கிக்கொண்டு ஓர் அறையைத் திறந்து விட்டான்.

விளக்கின் சுவிச்சைப் போட்டதும் சீனனுக்குப் பெரிய பிரமிப்பாக இருந்தது. அத்தனை பெரிய அறையில் அந்தக் கிழவர் மட்டுமே இருந்ததாகத் தோன்றியது. எத்தனை ஆடம்பரமாக இருந்தது அந்த அறை!

கிழவர் உடைகளை மாற்றிக்கொள்வதற்காகத் தம் பீரோ வைத் திறந்தார். ஆனால் மறுகணமே, அவர் தடாலென்று, தரையிலே, வெட்டிய மரம்போல் சாய்ந்து விழுந்துவிட் டார். அந்தப் பீரோவினுள்ளே அவன் கண்ட காட்சி அவன் தலையைச் சுற்ற வைத்தது. அதனுள்ளே மண்டை ஓடு ஒன்று இருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை!

# 5
## கோடீச்வரன் சீனன்

அந்தக் கிழவர் கீழே விழுந்ததைக் கண்ட சீனனுக்கு ஒன்றும் புரியவில்லை. மின்சாரம் தாக்கியதுபோல அவர் தலைகுப்புற விழுந்துவிட்டார்.

அவனுக்கு நிதானம் உண்டாகச் சிறிது நேரம் பிடித்தது. பிறகு மேஜைமீது கிடந்த சிறு டவலை எடுத்து, எதிரே தெரிந்த பீங்கான் பொருத்திய குழாயில் நனைத்துக்கொண்டு வந்தான். மயக்க மடைந்தவர்கள் முகத்தில் சுத்தமான தண்ணீரைத் தெளித்தால் நல்லது என்று அவனுக்குத் தெரியும். அதனால் அந்தத் துணியினால் அவர் முகத்தை மெல்லத் துடைத்தான். அந்த அறையில் குளிர்ச்சி தரும் சாதனம் பொருத்தப்பட்டிருந்தது அவனுக்குத் தெரியாது. அது இப்போது வேலை செய்யவில்லை. மேலே விசிறி ஒன்று இருந்ததைப் பார்த்தான். போய் அத னுடைய விசையைத் திருகியதும் குளிர்ந்த காற்றாக வீசியது.

பீரோ திறந்திருப்பது அவனுக்கு அச்சமாக இருந்தது. மண்டை ஓட்டைக் கண்டு அவன் பயப்படவில்லை. அதைப் போல் தெருவில் வித்தை காட்டுபவர்கள் வைத்திருப்பதை அவன் அடிக்கடி பார்த்திருக்கிறான். மண்டை ஓடு வைத்துக்கொண் டிருக்கக்கூடிய மனிதரிடம் தனியாக அகப்பட்டுக்கொண்டு விட் டோமே என்றும் அவன் பயப்படவில்லை. ஆனால் விலையுயர்ந்த பொருள்களும் ஆபரணங்களும் பணமும் குவிந்து கிடக்கும் அந்தப் பீரோ மண்டை ஓட்டைவிட அவனை அச்சப்படுத்தியது. அதனால் எழுந்து அதன் கதவை மூடினான்.

முகத்தில் குளிர்ந்த காற்றும் தண்ணீரும் பட்டதும் கிழவருக் குக் களைப்பு ஒரு மாதிரியாக நீங்கியது. மெல்லக் கண் விழித் தார். அவருடைய நெற்றிப் பொட்டிலிருந்தும் மூக்கிலிருந்தும் லேசாக ரத்தம் கசிந்தது. சீனன் மிகவும் பய பக்தியோடும் அன் போடும் அதை ஈரத்துணியால் ஒற்றினான். கிழவர் அப்படியே சிறிது நேரம் படுத்திருந்தார். பிறகு மெல்லப் புரண்டு அவனைக் கவனித்தார்.

அதைக் கண்ட சீனன் உடனே, "யாரையாவது கூப்பிடட் டுமா? எழுந்திருந்து படுக்கையில் படுத்துக்கிறீங்களா?" என்று கேட்டான்.

வேண்டாம் என்பதுபோல் கிழவர் தலையை அசைத்துவிட் டார். "தண்ணீர்!" என்று மட்டும் அவர் உதடுகள் முணு முணுத்தன.

சீனன் ஓடிப்போய் ஒரு கிளாஸில் தண்ணீர் பிடித்து வந்து குடிக்கக் கொடுத்தான். திறந்து கிடந்த கதவை மூடிவிடும்படி சைகை செய்துகொண்டே கிழவர் தண்ணீரைக் குடித்தார். அப்புறந்தான் மெதுவாக எழுந்து உட்கார்ந்தார். சீனன் அவர் முகத்தையே மிகுந்த பரிதாபத்தோடு பார்த்துக்கொண் டிருந்தான். கிழவர் பிறகு அவன் பெயர், ஊர் என்று ஒவ்வொன்ருக விசாரித்தார். சீனன் தன் கதையைச் சுருக்கமாகச் கூறினுன்.

எல்லாவற்றையும் கேட்ட பிறகு, "தம்பி, அந்த டெலிபோன் புஸ்தகத்தைக் கொண்டு வா!" என்ருர் அவர்.

சீனன் அதை எடுத்து வந்து கொடுத்தான்.

"தம்பி, பீரோவைத் திறந்து அடித்தட்டில் இருந்து என் உடுப்புகளை எடு!" என்ருர். அவன் தயங்கியதைக் கண்டு, "பயப் படாதே! உன்னுடைய பீரோவாக நெனச்சு எடு!" என்ருர். தட்டித் தடுமாறி அவன் எடுத்துக் கொடுத்த புதிய ஆடைகளை அவர் சீனனுடைய உதவியுடன் அணிந்து கொண்டார். பிறகு டெலிபோனுக் குப் பக்கத்தில் இருந்த சோபாவில் போய் உட்கார்ந்தார். அவருக்குப் பெருமூச்சு வாங்கியது. மீண்டும் மூக்கின் வழியாக ரத்தம் கசியத் தொடங்கியது. கைகள் வெல வெலத்ததுபோல் ஆடின. இருந்தும் அவர் தீர்மானத்தோடு, டெலி போனை எடுத்து, ஏதோ எண் களைச் சுழற்றிஞர்.



"ஹலோ! பாரிஸ்டர் வேதாசலந்தானே?"

மறுபக்கத்தில் யாரோ பேசுகிருர்கள் என்பது தெரிந்தது.

"உடனே என் தஸ்தாவேஜிகளை எடுத்துக்கொண்டு வர முடியுமா?" என்ருர்.

அதற்குப் பதில் கிடைத்ததும் அவர் முகத்தில் சந்தோஷக் குறி தென்பட்டது. "சரி; தாங்ஸ்; அவ்வளவுதான்!" என்று சொல்லிக்கொண்டே அவர் டெலிபோன் ரிஸீவரைப் பொத்தொன்று போட்டார். தலை தள்ளாடிச் சோபாவிலே சாய்ந்தது.

சீனன் மீண்டும் கையிலிருந்த துணியினுல் அவர் முகத்தைத் துடைத்தான்.

கிழவர் பேசாமல் இருந்தார். பிறகு மெல்ல நிமிர்ந்து ஒரு துண்டுச் சீட்டை எடுத்து அதில் ஏதோ கிறுக்கி, அதைக் கொண்டு போய் வாசலிலிருந்த மானேஜரிடம் கொடுத்து விட்டு வரும்படி சொன்னார். சீனன் அவருடைய உத்தரவுப்படியே செய்துவிட்டு வந்தான்.

சற்றைக்கெல்லாம் கதவை யாரோ தட்டுவதுபோல் சத்தம் கேட்டது. வெளியில் கட்டை குட்டையான பெரிய மனிதர் ஒருவர் மேல்நாட்டுப் பாணியில் வந்திருந்தார்.

"பெரியவர் இருக்காரா?" என்றவர் உள்ளே பார்த்துவிட்டு, "ஹலோ! வரலாமா?" என்று கேட்டுக்கொண்டே நுழைந்தார்.

"மிஸ்டர் வேதாசலம், வாங்க! நம்ம உயிலைக் கொண்டு வந்திருக்கீங்களா?" என்றார் கிழவர்.



வேதாசலம் கையிலே ஒரு தோல் பை வைத்திருந்தார். அவர் உடனே, "அதான் போன் செய்துட்டீங்களே! எல்லாம் கொண்டு வந்திருக்கேன்!" என்றார்.

"உயிலே இப்பப் பூர்த்தி செய்துப்புடலாமா?" என்றார் கிழவர்.

"எல்லாம் நிச்சயம் செய்துப்புட்டீங்களா?"

"ஆச்சு."

"யாருக்கு, தம்பி மகனுக்குத்தானே?"

"இல்லே!"—கிழவர் முகத்தில் கோபம் கொதித்தது.

"பின்னே யாருக்கு?"

"பாரிஸ்டர் ஸார்! எல்லாம் நான் தேடின சொத்து; இல்லியா?"

"அதுலே என்ன சந்தேகம்?"

"என் மகன் இன்னும் இருக்கான்னு வையுங்க. அவனுக்குக்கூட நான் இந்தச் சொத்தைக் கொடுக்காமெ இருந்திடலாம். இல்லேயா?"

"அதுலே என்ன சந்தேகம்?"

"அட -- சந்தேகந்தானேயா - கேட்டதுக்குப் பதில் சொல்வீங்களா? ஆச்சா - இஷ்டப்பட்டுத் தெருவிலே போறவனுக்கும் கொடுத்திடலாம், இல்லேயா?"

"அதுலே என்ன சந்தே..ஆகா, தாராளமாய்க் கொடுத்திடலாம்."

"அதனுலே.....என் சொத்து, சுதந்தரம், உடைமை எல்லாம் அதைப் போலவே தெருவிலே போய்க்கொண்டிருந்த ஒருத்தனுக்கே கொடுக்கிறதாக முடிவு பண்ணிட்டேன்.."

"ஆ..அப்படியா!" என்று பாரிஸ்டர் வேதாசலம் தூக்கி வாரிப் போட்டது போல் கேட்டார்.

கிழவர் இப்போதெல்லாம் கொஞ்சங்கூடத் தளர்ச்சி இல்லாமல் பேசி வந்தார்.

"தம்பி சீனு, போய் ஹோட்டல் மானேஜரை நான் வரச் சொன்னதாகக் கூட்டிக் கொண்டு வா!" என்றார்.

ஆனல் அதற்குள் இரண்டு பெரிய அட்டைப் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு ஓர் ஆள் கதவு திறந்ததும் உள்ளே வந்தான். அவனுக்குப் பின்னல் இரண்டு பேர் இரண்டு பெரிய 'டிரே'யில் ஆகாரங்களைச் சுமந்துகொண்டு வந்து மேஜைமீது வைத்தார்கள்.

சீனனுக்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது. அந்த ஆச்சரியத்துடனேயே அவன் மானேஜரிடம் போய் விஷயத்தைச் சொன்னன். அவர் அவன் கூடவே கிழவருடைய அறைக்கு வந்துவிட்டார். சீனன் ஓரமாக ஒதுங்கி நிற்பதைப் பார்த்து, "தம்பீ, அந்தப் பெட்டிகள இரண்டையும் பக்கத்து அறைக்குக் கொண்டு போய் என்னவென்று பார்த்து, அதை எடுத்து வா!" என்று கனிவோடு சொன்னர் கிழவர்.

அந்தப் பெட்டிகள் இரண்டையும் கொண்டு போய்ப் பிரித்தான் சீனன். அவனுக்கு ஆனந்தம் பொறுக்கவில்லை. எல்லாம் கண்ணைப் பறிக்கும் ரெடிமேடு ஆடைகள். எல்லாம் சீன தேசத்து உயர்ந்த ரகங்கள். புஷ்கோட்டு, சட்டை, டிராயர், பான்ட், பனியன் என்று அளவு எடுத்துத் தைத்தவை போல இருந்தன. கிழவர் இதற்குத்தான் கிறுக்கிக் கொடுத்திருக்கிருர் என்று சீனனுக்கு இப்போது புரிந்துவிட்டது. அவற்றை அணிந்து கொண்டு அந்த அறையில் இருந்த நிலைக்கண்ணுடி முன்னல் போய் அழகு பார்த்துக்கொண்டான். அவனல் தன்னையே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அத்தனை பிரமாதமாக, பெரிய செல்வந்தர் வீட்டுப் பிள்ளைபோல ஜம்மென்று இருந்தது. அரை மணிநேரம் பார்த்தும் ஆசை தீராமல் அவன் அவர்கள் இருந்த அறைக்குத் திரும்பினன். அங்கிருந்த மூவரும் அவனையே ஆச்சரியத்தோடு விழித்த கண்ணை இமைக்காமல், திறந்த வாயை மூடாமல் பார்த்தார்கள்.

சற்றுப் பொறுத்து, கிழவர் மட்டும் செல்லமான குரலில், "தம்பீ! இப்படி என் பக்கத்திலே வந்து உட்கார்!" என்று கூப்பிட்டார். அவன் அவர் அருகில் வந்து உட்கார்ந்தான். அவன் முதுகை ஆசையோடு தடவிக்கொண்டே பாரிஸ்டர் வேதாசலத்தைப் பார்த்து, "ஐயா, இது வேறு ஒண்ணும் இல்லை. அவ்வளவும் அசல் மாணிக்கம். நான் தேடி எடுத்து விட்டேன்" என்ருர். மிகவும் சிரமப்பட்டுத்தான் இந்த வார்த்தைகளை அவர் சொன்னர். ஆனல் நாத் தழுதழுத்து விட்டது. தொண்டை கர கரத்து விட்டது. மீண்டும் தள்ளாமையெல்லாம் ஒன்று சேர அவர் அப்படியே சோபாவில் சாய்ந்து விட்டார். படுத்த அதிர்ச்சியில் மறுபடியும் மூக்கில் ரத்தம் கசிந்தது.

பிறகு கால் மணி நேரம் போல் கையெழுத்துப் போடுவதும் நகல் எடுப்பதுமாக அவர்களுக்குள் ஏதோ பேச்சு நடந்தது. முதலில் கிழவர் கையெழுத்துப் போட்டார். அவரும் பாரிஸ்டருமாக ஆளுக்கு ஒரு பத்திரம் எடுத்துக்கொண்டார்கள். எல்லாம் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டதால் சீனனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனல் மற்ற இருவரும் நடுநடுவே சீனனைப் பார்ப்பதும், பத்திரத்தைப் பார்ப்பதுமாக இருந்தார்கள். அதனல் அதில் மட்டும் ஏதோ பெரிய விசேஷம் இருக்கும்போல் இருந்தது. இன்னும் யாருடைய வரவையோ அவர்கள் எதிர்பார்த்திருப்பதாகவும்

தோன்றியது. கிழவரால் சோபாவை விட்டு எழுந்திருக்க முடிய வில்லை.

பாரிஸ்டர் பேச வேறு விஷயம் இல்லை என்று கண்டதும் சீனனைப் பார்த்து, அவன் பெயர், பெற்றோர், உறவினர் என்றெல்லாம் கிழவர் கேட்ட தோரணையிலேயே விசாரிக்கத் தொடங்கினார். சீனன் முதலில் தன் பெயரைச் சொல்லி விட்டான். ஆனால் கேள்விகள் மேலே மேல வளரத் தொடங்கியதும் அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. கிழவருடைய அநுமதியில்லாமல் அவருக்குப் பதில் சொல்வது அவனுக்குச் சரியாகப் படவில்லை. சிற்றப்பன் சின்னப் பக்கிரியையும் சின்னம்மா காளியாத்தாளையும் பற்றிச் சொல்ல அவனுக்கு விருப்பமும் இல்லை.

சற்றைக்கெல்லாம் டாக்டர் ஒருவர் வந்து சேர்ந்தார். உடனே கிழவரைப் பரிசோதிக்கத் தொடங்கினார். சுமார் கால் மணி நேரம் போல் ஆராய்ந்த பிறகு, "உயிருக்கு ஒண்ணும் பயமில்லை; எதற்கும் இரவு போனால்தான் நல்லது. யாராவது உறவினர்கள் இங்கே இருக்கிறார்களா?" என்றார் டாக்டர்.

"இதோ, இந்தப் பையன்தான் அவருடைய சுவீகாரப் பையன். அவருடைய சொத்து முழுவதையும் இந்தப் பையனுக்கே சேரும்படி சற்று முன் உயில் எழுதி வைத்துவிட்டார்.......'' என்றார் வேதாசலம்.

சீனனால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. சினிமாவில்கூட இவ்வளவு பெரிய அதிஷ்டம் ஒருவனுக்குத் திடீரென்று கிடைத்ததாக அவன் பார்த்ததில்லை. இது எல்லாவற்றையும் தூக்கியடிப்பதாக இருந்தது. கிழவருக்கு வாரிசு என்றால் இந்தப் பீரோ, இதிலுள்ள நகைகள், பணம், அந்தச் சிறிய பெட்டி எல்லாம் இனிமேல் அவனுடையவையா? இது என்ன சொப்பனமா, இல்லை நிஜந்தானா?

கிழவர் கண்களைத் திறந்து, "தம்பீ, சீனு!" என்று கூப்பிட்டார், மிகவும் பலவீனமான குரலில்.

சீனன் அருகில் போனதும், கிழவர் தம் கையில் வைத்திருந்த சாவிக் கொத்தை அவனிடம் கொடுத்தார். பிறகு தம்மிடமிருந்த பத்திரத்தைக் கொடுத்து, அரக்குச் சீல் வைத்து, விலாசம் எழுதி, அதிகாரிகளுக்குத் தபாலில் அனுப்பச் சொன்னார். அதனுடைய நகல் பிரதியில் எல்லார் முன்னிலையிலும் மீண்டும் கையெழுத்திட்டு, அவனிடம் கொடுத்தார்.

இதையெல்லாம் செய்து முடிக்க வெகு நேரம் ஆயிற்று. மிகுந்த சிரமத்துடன்தான் இவ்வளவையும் அவர் செய்தார். "அப்பாடா, இனி நான் செத்தால்கூடக் கவலையில்லை. ஆனால்

மிஸ்டர் வேதாசலம்! பையனைப் பாதுகாக்க வேண்டியது இனி உம்முடைய பொறுப்பு. அவனைச் சேர்ந்தவர்கள் யாராவது வந்தால், அவன் எப்படி விரும்புகிறானோ அதேபோல நடந்து கொள்ளுங்கள். சரி, இனி நீங்கள் போகலாம், கொஞ்சம் படுத்துத் தூங்கினால் தேவலைபோல் இருக்கிறது" என்றார்.

பாரிஸ்டர் வேதாசலம், டாக்டர், ஹோட்டல் மானேஜர் மூவரும் கிழவரிடமும் சீனனிடமும் விடைபெற்றுக்கொண்டு வெளியில் வந்தார்கள்.

"இதில் ஏதோ மர்மம் இருக்கிறது!" என்றார் மானேஜர்.

"எதுவாக இருந்தால் என்ன? அவர் சுய ஞாபகத்துடன் தான் பேசுகிறார்!" என்றார் டாக்டர்.

"அதில் என்ன சந்தேகம்? அப்படியானால் அவருடைய விருப்பப்படிதான் எதுவும் நடக்க வேண்டும். நான் லாயர். கட்சிக்காரர் விருப்பப்படிதான் நான் நடக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்..." என்றார் பாரிஸ்டர்.

அவர்கள் எல்லோரும் போன பிறகு, கிழவர் சீனனிடம் அந்தச் சிறிய பெட்டியையும் கொடுத்தார். "அதைப் பத்திரமாக வைத்துக்கொள். அதில்தான் உன்னுடைய அதிருஷ்டம் எல்லாம் அடங்கி யிருக்கிறது. போய் அந்தப் பீரோவைத் திறந்து அதைப் பத்திரப் படுத்தி வை. பாரிஸ்டர் என் சொத்துக்களை உன்னிடம் ஒப்படைப்பார். ஆனால் உனக்கு வேண்டிய பணம் எல்லாம் நாளையே கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். நீ யாராக இருந்தாலும் இனி என்னுடைய பேரன். நான் இருந்தாலும் பேரன்தான்; இறந்தாலும் பேரன்தான்!" என்று கூறிவிட்டு அவர் அசதியால் கண்ணை மூடிக்கொண்டார்.

இரவில் வெகுநேரம் சீனன் அவருக்குத் துணையாக விழித்துக்கொண்டிருந்தான். கிழவர் ஏதேதோ சொல்லிக்கொண்டேயிருந்தார். அப்புறம் அவனை அறியாமலே தூங்கிவிட்டான். கண் விழித்தபோது மணி ஏழுக்குமேல் ஆகிவிட்டது. படுக்கையில் கிழவர் பிரக்ஞையற்ற நிலையில் படுத்திருந்தார். எத்தனை முறை, "தாத்தா; தாத்தா!" என்று கூப்பிட்டு எழுப்பிப் பார்த்தும் பயன் படவில்லை.

பிறகு, அவன் அந்த அறையை விட்டு வெளியில் வந்தான். முதல் காரியமாக உறையைத் தபாலில் சேர்த்தான். மானேஜருடன் திரும்ப உள்ளே நுழைந்த சமயத்தில் கிழவருடைய தலை சாய்ந்துவிட்டது. சீனனுக்கு உண்மையில் நெஞ்சே வெடித்துவிடும்போல் இருந்தது. தாயைப் பிரிந்த கன்றுபோல் கதறிக் கதறி அழுதான். ஹோட்டல் மானேஜரும் டாக்டரும் அவனைத் தேற்றினார்கள். பழைய சீனனாக இருந்

தால் அடித்து விரட்டியிருப்பார் மானேஜர். ஆனல் அன்று அவன் பேப்பர் விற்கும் சீனன் அல்ல; கோடீசுவரன் சீனன்!

அதனுல் கண்ணைத் துடைக்கிருர் மானேஜர்; காபி கொண்டு வந்து, "ச்சூ ச்சூ!" என்று ஆறுதல் சொல்கிருர் இன்னெருவர். டாக்டர் வந்து, "இன்னும், ஏதாவது வேண்டியிருந்தால் சொல்லி யனுப்புங்க, தம்பி!" என்கிருர்.

இதையெல்லாம் பார்த்த சீனனுக்கு எல்லாம் என்னவோ வேதாளம் – விக்கிரமாதித்தன் கதையில் நடப்பதுபோலத்தான் இருந்தது.

பாரிஸ்டர் வேதாசலம் ஒரு சூட் கேஸ் நிறையப் புத்தம் புது நோட்டுக்களாகக் கொடுத்துவிட்டு, கிழவருடைய அந்திமக் கிரியை முடியும் வரையில் கூடவே இருந்ததைப் பார்த்தபோது அதிசயக் கனவாகத் தோன்றியது.

கிழவர் எப்படி ஹார்பருக்கு வந்தார், ஏன், எதற்காக? யாரோடு சண்டை போட்டு விழுந்தார் என்ற மர்மம் எல்லாம் எதுவும் தெரியாமலே போய்விட்டது.

# 6

## அதிர்ஷ்டமும் ஆபத்தும்

மூன்றும் நாள் அவனுக்குக் கம்பெனியிலிருந்து ஒரு புதிய கார் வந்து சேர்ந்தது. கிழவருடைய ஆர்டரின்பேரில் வந்த கார் அது. ஆனால் அதில் ஏறிச் செல்ல அவருக்குக் கொடுத்துவைக்க வில்லை.

சீனன் அதில் போய் ஏறி உட்கார்ந்து கொண்டபோது, "பாருடா, பேப்பர் விற்ற பரதைப் பயலுக்கு வந்திருக்கிற பவிஷை! அதிருஷ்டம்னு இப்படில்லேடா அடிக்கணும்!" என்று யாரோ சொல்வது காதில் விழுந்தது. அப்படிச் சொல்வது யார் என்று பார்க்க எண்ணி, சீனன் திரும்பினன். ஆனல் வண்டி அதற்குள் திரும்பிவிட்டது.

புத்தம் புதிய கார்; புது வருஷத்து மாடல்; பளபள வென்று டால் அடித்துக்கொண்டு சத்தம் கித்தம் போடாமல் வழவழ வென்று சாலையிலே வழுக்கிக்கொண்டு ஓடியது.

சீனன் ஆசை தீர பின் ஸீட் மெத்தையில் தொப்பென்று குதித்தான். ஸ்பிரிங் வைத்த மெத்தை தூக்கித் தூக்கிப் போட்டது அவனை. ஆனல் பின்னல் உட்கார்ந்துகொண்டு போவது அவ்வளவு சுகமாகப் படவில்லை. எனவே வண்டியை நிறுத்தச் சொல்லி, முன் பக்கத்தில், டிரைவருக்கு அருகே போய் உட்கார்ந்து கொண்டான்.

கால் தேயத் தேய நடந்த நடை பாதையெல்லாம் அவனை ஏக்கத்தோடு பார்ப்பதுபோல இருந்தன. எட்டிப் பார்த்த கூவம் நதிப் பாலம் ஏங்கிப் போய்ப் பார்த்தது. நெரிசலில் இடித்த கூட்டம், காலை விழுங்கப் பார்த்த சாக்கடைப் பொந்து, ஏமாந்தால் சறுக்கிவிடத் துடித்த பழத் தோலிகள், தோளிலும் தலையிலும் சாமான்களைச் சுமந்து, காதைச் செவிடாக்கிய சில்லறை வியாபாரிகளின் கூச்சல் - எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே அவன் பாரிஸ் முனை வரையில் போனன். இத்தனை ஜனக் கூடத்திலே அவன் யாரைப் பார்க்க விரும்பினனே, அவனை மட்டும் காணவில்லை. திடீரென்று அவனுக்குப் பழைய ஞாபகம் வந்தது. அந்த ஷங்கங் ஹைகோர்ட்டுப் படிகளில்தான் தங்கி யிருப்பான்!

"சாபர்! வண்டியைக் கோர்ட்டுக்கு உள்ளே கொண்டு போக லாமா?" என்றுன் சீனன்.

அவனுக்கே தன் குரலைக் கேட்டு என்னவோபோல் இருந்தது. வேறு யாரோ ஒருவருடைய அதிகாரக் குரலைக் கேட்பது

போல் இருந்தது. நாலு நாள் முன்பு இருந்த சீனனுக்கு, இந்த அதிகாரக் குரல் ஏது? பணம் வந்துவிட்டது என்ருல் என்ன என்றுகூட இன்னும் அவனுக்கு அநுபவம் ஏற்படவில்லை. அதற்குள்ளேயோ இத்தனை தெம்பு, தைரியம், திண்மை! திடீரென்று முன்பின் பேசியறியாத புதிய புதிய வார்த்தைகள் எல்லாங்கூட, "நான் நான்-என்னைச் சொல்லு!" என்று அவன் நாவிலே வந்து குதித்தன.

"சாபர்!"—திரும்பாமலே அழைத்தான் சீனன்.

"எஜமான்!"

சீனன் உடனே திரும்பி, "இங்கே பார், மான். அந்த எஜமான், கிஜமான் பேச்செல்லாம் வேண்டாம். பாரிஸ்டர் கூப்பிடருப்பலே, 'மாஸ்டர்' என்று அழைத்தால் போதும். அதான் காதுக்கு நல்லா இருக்கு; என்ன?"

"சரி, மிஸ்டர்!"

"மிஸ்டர் இல்லே மான், மாஸ்டர், சொல்லு, மாஸ்டர்!"

"மாஸ்டர்!"

"ஆங்..அதான்...வண்டியை உள்ளே கொண்டு வந்திட்டியே, சரி; போய், அந்தப் படிக்கட்டு ஓரமா நிறுத்து. சிலைக்குப் பக்கத்திலே மண்டபம் மாதிரி ஒரு இடம் இல்லே, அங்கே யாராவது ஒரு பையன், கொஞ்சம் பூனைக் கண்ணு, கையிலே ஒன்றிரண்டு, இரண்டிரண்டு தட்டுக்கூடை வச்சிக்கிட்டு இருக்காணு, பார்! இருந்தா, பேர் என்னுன்னு கேளு; ஷங்கங்னு சொன்ணு உடனே இங்கே அழைச்சுக்கிட்டு வா! ஷங்கங்; சொல்லு, ஷங்கங்!"

"ஷங்கங்!"

"ஆங்...போய்ப் பாரு; போ; ஜல்தி வரணும்."

"சரி மாஸ்டர்!" என்று தலையைப் பணிவாக ஆட்டிவிட்டு, டிரைவர் லைட்ஹவுஸ் படிக்கட்டுப் பக்கம் போனுன்.

சீனனே, அந்தக் காருக்குச் சொந்தக்காரனுக இருப்பவன் எப்படி உட்கார வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்பவன் போல் பல கோணங்களில் உட்கார்ந்து, ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஹலோ, மாஸ்டர் சீனன்! எங்கே இப்படி!" என்று பின்னுல் ஒரு குரல் கேட்டது.

அங்கே பாரிஸ்டர் வேதாசலம், தம் காரிலிருந்து இறங்கி வந்துகொண் டிருந்தார். அவருக்குப் பக்கத்திலே இருபது, இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க வாலிபன் ஒருவனும் வந்துகொண்

டிருந்தான். அவனுடைய தோற்றத்தையும் ஆடையையும் கண்டு, சீனனுக்குப் புதுமையாக இருந்தது. கப்பல் மாலுமியின் உடை. அதாவது பான்டும், பனியனும் மட்டும்! தலையிலே தொப்பி இல்லை. அழகான கிராப்புத் தலையை அவன் வாராதபடி விட்டிருந்தான். நீலப்பட்டை போட்ட பனியன் அவனுக்கு எடுப்பாக இருந்தது. ஆனால் ஒன்றுதான் கொஞ்சம் குறையாகப் பட்டது சீனனுக்கு. அது அவன் முகம்!

ஆள் என்னவோ ஜோராகத்தான் இருந்தான். ஆனால் முகத்திலே கண், பார்வை, வாய், உதடு எல்லாம் ஏதோ ஒரு முதிர்ச்சியைக் காட்டின. இளைஞர்களுக்கு வேண்டிய மினு மினுப்புக்குப் பதில் ஏதோ ஒரு குழப்பம் இருந்தது. அதுவே அவன் பல விஷயங்களில் மிதமிஞ்சிய பழக்கங்கள் உள்ளவன் போல் காட்டியது.

ஒரு சில விநாடிதான் சீனன் அவனைக் கவனித்தான். அவனும் அந்தச் சில விநாடிகளில் சீனனைக் கவனித்துக் கொண்டான்.

“இது யார் தெரியுமா?” என்றார் பாரிஸ்டர், அவனிடம்.

அவனுக்குத் தமிழ் தெரியாதுபோல் இருந்தது. பார்த்தால் கிட்டத்தட்ட அவன் சைனாக்காரனைப் போலத்தான் இருந்தான். சின்னக் கண்; கொஞ்சம் லேசாகச் சப்பை மூக்கு; ‘தெரியாது’ என்பது போல அவன் தலையை ஆட்டினான்.

பாரிஸ்டர் வேதாசலம் சிறிது நேரம் ஏதோ யோசனை செய்வது போலத் தயங்கினார்.

“உனக்குத் தெரியுமா, மாஸ்டர் இவனை!” என்று தமிழில் கேட்டார் சீனனை.

“ஹூம்.. எனக்கு எப்படித் தெரியும்? நான் முன்னே பார்த்ததே யில்லையே!” என்றான் சீனன்.

“சரி; நல்லதாப் போச்சு; நீ அவனைத் தெரிஞ்சு கொண்டாலும் அவன் உன்னைத் தெரிஞ்சுக்காமல் இருக்கிற வரையில் சந்தோஷம்! சரி; நான் அப்புறம் வர்றேன். அல்லது அவசரமாக இருந்தா நீ வா, நான் வரட்டுமா? எல்லாம் அப்புறம் சொல்றேன்” என்று சொல்லிக்கொண்டே, “கமான் மிஸ்டர், கிங் கிங்!” என்று அந்த வாலிபனை அழைத்துச் சென்றார்.

‘நல்ல பேருடா, இவங்களுக்கு! சுங்கிங்-கங்குங்-கிங்கிங் என்று! நம்ப ஷங்கங்கைக்கூட இனிமே பேரை மாத்திக்கச் சொல்ல வேண்டியதுதான்!’ என்று எண்ணும்போதே அவனுக்கு உள்ளூற ஏதோ ஒன்று குத்துவதுபோல் இருந்தது. ‘கிழவருடைய தம்பி மகன்! முன்பு பாரிஸ்டர் கேட்டாரே கிழவரை, அந்தத் தம்பி மகன் இவன்தான்போல் இருக்கிறது! அவனுக்குக் கிடைக்க வேண்டிய இந்த அதிருஷ்டம் எனக்கு வந்துவிட்டது. அப்படி

யானுல்...' என்ற நினைவு, விவரம் இல்லாமல் அவன் மனத்தை என்னவோ வேதனை செய்தது.

ஆனுல் இரண்டு கால் பாய்ச்சலில், "அடே சீனு!" என்று தூரத்திலிருந்தே பார்த்துவிட்டு, கூவிக்கொண்டே ஓடிவந்தான் ஷங்கங். கையிலே கலகலவென்று தட்டுச் சாமான்கள் உருண்டன.

"ஏறுடா வண்டியிலே!" என்ருன் சீனன்.

"யார் வண்டிடா இது?" என்று வாயைப் பிளந்தான் ஷங்கங்.

அதற்குமேல் ஷங்கங்குக்கு உண்மை தெரியும் வரையில் நடந்தவற்றை விவரிப்பது அவசியமேயில்லை. பிட்சாதிபதி லட்சாதிபதி ஆனுல் எப்படியோ, அந்தக் கதைதான். சுருக்கமாகச் சொன்னுல், ஷங்கங்குக்கு ஏற்பட்ட அந்த அதிர்ச்சியில் அப்படியே கூடையைத் தரையில் போட்டுவிட்டு, கீழே விழுந்து புரண்டுவிட்டான். அந்தப் புழுதி அழுக்கோடு எழுந்து சீனனைக்கட்டிக்கொண்டான். இத்தனைக்கும் சீனன் முழு விவரங்களும் சொல்லிவிடவில்லை. அதையெல்லாம் டிரைவரையும் வைத்துக்கொண்டு சொல்லலாமா?

ஷங்கங் கூடையையும் தூக்கிக்கொண்டு பின் ஸீட்டில் ஏறி உட்கார்ந்துகொண்டான். சீனனும் அவன் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டு, "சாபர்! வண்டியிலே பெட்ரோல் நிறைய இருக்கா?"

"இருக்கு, மாஸ்டர்!"

"இப்ப மணி என்ன? பத்தே முக்கால்; இல்லையா?



முதல்லெ பஸ்ட் கிளாஸ் டிரஸ் ஷாப்புக்குப் போ! அப்புறம் நியூ இந்தியா கேப்! அதுக்கப்புறம் வண்டி ஓர் இடத்திலே நிக்கப் படாது. போன வழியாப் போகப்படாது. பாக்காத இடம் இருக்கப்படாது. போகிற வழியிலேயே பெட்ரோல்; போகிற வழியிலே எது வேணுமோ அது...எங்கே...இரண்டரை மணிக்குத்தான் நம்ப ஹோட்டலுக்குத் திரும்பணும்!" என்று சீனன் வெகு டாம்பீகமாக உத்தரவு கொடுத்தான்.

ஷங்கங் வாயைப் பிளந்தபடி இதையெல்லாம் ஆனந்தம் தாங்காமல் கேட்டுக்கொண்டே உட்கார்ந்திருந்தான். முதலில் ஷங்கங்குக்கு வேண்டிய ஆடைகளைப் புத்தம் புது மோஸ்தரில் வாங்கினன் சீனன். அவன் எடுத்துப் போடுவதைப் பார்த்தால் ஷங்கங்குக்கே பயமாக இருந்தது. தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு நின்ருன். சீனன் அவன் காதோடு, "டேய் அசட்டு முட்டாள். வையடா கீழே! ஆள் இருக்கான்; தூக்கிக்கொண்டு வைக்கிருன். நீ ஏண்டா தூக்கறே! போய், அந்தப் பிரைவேட் ரூமிலே ஒரு ஸெட் டிரஸ்ஸை மாட்டிக்கிட்டு வாடா முதல்லே!" என்ருன்.



"ஏண்டா, முந்திப் பிந்தி செத்திருந்தாத்தானேடா இதெல்லாம் தெரியும்!" என்று ஷங்கங் சிரித்துக்கொண்டே சொன்ஞன். சீனன் டிராயர் பையிலே ஒரு கத்தை புத்தம் புதிய பத்து ரூபாய் நோட்டு வைத்திருப்பதைப் பார்த்து அவனுக்கு மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது.

பிறகு எப்படியோ டிரஸ் போட்டுக்கொண்டு ஜம்மென்று வந்தான். அப்புறம் ஹோட்டலுக்குப் போனர்கள். டிரைவரையும் சாப்பிடச் சொல்லிவிட்டு அவர்களும் பெயர்-ருசி தெரியாததையெல்லாம் கேட்டு வாங்கித் தின்ருர்கள். முடியாததை எறிந்துவிட்டார்கள்.

அதற்குப் பிறகு ஊர் சுற்றும் படலம் ஆரம்பமாயிற்று.

"சாபர்! வண்டி இந்த மாதிரி 'ஸ்லோ'வாகப் போகக்கூடாது. இன்னும் கொஞ்சம் 'ஸ்பீடா'கப் போகணும்!" என்ருன் சீனன்.

"சரி மாஸ்டர்!" என்ருன் சாபர். வண்டி சுகமாகப் போய்க்கொண்டேயிருந்தது. ஷங்கங் தொணதொணப்பான்போல இருந்தது. "உஷ்...பேசாதே. டிரைவர் இருக்கும்போது நாம் கேவலமாக எதுவும் பேசிக்கப்படாது!" என்று அவனே அடக்கி விட்டான் சீனன்.

"இரண்டரைக்கு ஹோட்டல்; அரை மணி ரெஸ்ட். பதினைந்து நிமிஷத்தில் குளிச்சுப்புட்டு வேறு டிரஸ் பண்ணிக்க வேண்டியது. உடனே ஸ்லேட்டா ஒரு லஞ்ச்! சரியா மூன்றரை மணிக்கு டார்ஜான் பிக்சர் பாலஸ்! இதுதான் நம்ப பிளான் இன்னிக்கு" என்றான் சீனன்.

"ரைட்டோ, பலே பலே, அச்சா - ஹோ!" என்றான் ஷங்கங்.

அதேபோல வண்டி சென்னையில் ஓர் இடம் பாக்கி விடாமல் சுற்றிவிட்டு, சைனு சு-சூவுக்குத் திரும்பும்போது மணி இரண்டு இருபத்தொன்பது!

சீனன் இந்த உலகமே லட்சியமில்லாததுபோல் தன்னுடைய ஏர்-கண்டிஷன்டு அறைக்குள் நுழைந்தான். ஷங்கங் பேசுகிற நிலையில் இல்லை. அவனுக்கு மூர்ச்சை போடவில்லை; அவ்வளவே.

அவர்கள் திட்டப்படி எல்லாவற்றையும் முடித்துவிட்டு, மீண்டும் சினிமாப் பார்க்கப் புறப்பட்டபோது, எதிரே ஓர் அறை திறந்து மூடிக்கொண்டதுபோல இருந்தது சீனனுக்கு. ஷங்கங் கூட அதைக் கவனித்தான்.

"யாருன்னு கவனிச்சியா?" என்று கேட்டான் சீனன்.

"முகம் சரியாகத் தெரியல்லே. ஆனா, கோர்ட்டிலே பார்க்கல்லே, அவன் மாதிரி இருக்கு!" என்றான் ஷங்கங்.

"சரி; சரியாகப் பூட்டிக்கொண்டு வா!" என்று சாவியை ஷங்கங்கிடம் கொடுத்துவிட்டு நின்றான். ஷங்கங் நன்றாகப் பூட்டி, காலால் உதைத்து இழுத்துப் பார்த்துவிட்டுத்தான் திருப்தியடைந்தான்.

ஆனால் கார் வாசல் போர்ட்டிகோவில் வந்து நிற்கும் சமயத்துக்கு இவர்கள் எங்கே வந்தார்கள்!

அவர்கள் வேறு யாருமில்லை; சிங்கப்பூர் சின்னப் பக்கிரியும் அவனுடைய மனைவி காளியாத்தாளும் ஆளுக்கொரு பக்கமாக வந்து, வாசலில் வண்டியின் எதிரில் நின்றார்கள்!

சீனன் தன் சிற்றப்பன் சின்னப் பக்கிரியையும் சிறிய தாய் காளியையும் பார்த்தவுடன் கலங்கிப் போனான். பழைய பயமும் நடுக்கமும் உண்டாயின. அவர்கள் இரண்டு பேரும் எதற்கும் அஞ்சாதவர்கள். இடம், பொருள், ஏவல் என்று ஒன்றும் பார்க்கக் கூடியவர்கள் அல்ல. அவர்கள் சண்டை போடுவதற்குக் காரணமே வேண்டியதில்லை. அவர்களிடம் பேச்சு வைத்துக்கொள்வதே ஆபத்துத்தான். சத்தம்போட்டு, ஊரைக் கூட்டி, அவமானப் படுத்தி விடுவார்கள். முன்பு என்றால் சீனனுக்கு இந்த மான-அவமானம் ஒன்றும் தெரியாது, ஆனால் இன்று அவன் அப்படி இருக்க முடியுமா?

சீனன் காரில் உட்கார்ந்திருந்த கோலத்தைப் பார்த்ததும் காளி, "அம்மாடி, யம்மாடி!" என்று கைகளைக் கொட்டி, மோவாயில் கையை ஊன்றிக்கொண்டாள். சின்னப் பக்கிரி குடைக் கம்பிப் பெட்டியை காரின் மேலேயே கொண்டு வந்து வைத்தான்.

"இவுருக்கு வந்த வாழ்வைப் பாருங்கடி!" என்று ராகம் போட்டபடி ஆரம்பித்தாள் காளி. அந்த ஒரு வார்த்தையை ஆரம்பப் பல்லவியாக வைத்துக்கொண்டு, கோடை மழை அடித்து ஊற்றுவதுபோல் பேசப் பிடித்துக்கொண்டு விட்டாள்.

"ஏண்டா, உனக்கு என்னடா வாழ்வு வந்துட்டுது? ஆயிர மைலு தாண்டி உன்னை எடுத்து வந்தோமேடா; அநாதையாய்க் கிடந்த உன்னைக் கொண்டாந்து வளத்தோமேடா! ராக் கண் பகல் கண் முளிச்சுக் காப்பாத்திஞேமேடா; இன்னிக்குப் பணக்காரனு யிட்டா எங்களை மறந்திடலாமாடா?" என்று பேசினுள்.

"இந்தாய்யா! அந்தக் குடைக் கம்பியை வண்டி மேலே வைக்காதே; எடுய்யா!" என்று டிரைவர் கோபமாகச் சொன்னுன். புத்தம் புது வண்டியை ஓட்டைக் குடைக்கம்பியால் கீறிஞல் அந்த அநாகரிக முட்டாள்தனத்தை யார்தான் சகிப்பார்கள்?

அப்படி அவன் சொன்னுனே இல்லையோ, சின்னப் பக்கிரி பெட்டியைக் கீழே வைத்தான். தலை முண்டாசை அவிழ்த்து உதறிக் கட்டினுன். முண்டாவை ஒரு புரட்டுப் புரட்டினுன். மீசையை இரண்டு விரலாலே முறுக்கினுன். 'டேய், யாரைப் பாத்துடா சொல்லிப்பிட்டே, இந்த வார்த்தையைப் போனுப் போவுதுன்னு? சிங்கப்பூர் சின்னப் பக்கிரியைப் பாத்தா விளையாட வரே?...ஹஹ்ஹைஹங்!" என்று விறைத்துக்கொண்டு கிளம்பினுன் சண்டைக்கு.

சீனன் வாயைத் திறக்கவில்லை. சட்டைப் பையில் கையை விட்டு இரண்டு, மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து, "இந்தா! இதை எடுத்துக்கிட்டுப் போங்க!" என்று காளியின் கையில் கொடுத்தான்.

"இனிமே இங்கே வராதீங்க!" என்ருன் ஷங்கங்.

"டாய்! இவன் யாருடா?" என்று மடிபடியும் உறுமினுன் சின்னப் பக்கிரி.

பேச்சுத் தடிப்பதற்குள் சீனன் டிரைவரைப் பார்த்து, "சாபர்! வண்டியை விடு! உம்!" என்று மெல்ல உத்தரவு கொடுத்தான். உடனே வண்டி புஸ்ஸுக்கென்று புறப்பட்டது.

"சீனு! ஏய், சீனு!" என்று கத்தினுன் சின்னப் பக்கிரி.

"சீனுவாவது ஜப்பானுவது; போய்யா!" என்ருன் ஷங்கங்.

அவர்கள் இரண்டு பேரும் பின்னுலேயே ஓடி வருவது தெரிந்தது. ஆனுல் வண்டி ஒயிலாகத் திரும்பி, சிட்டாக மறைந்து விட்டது.

# 7

## அந்த ஆள்

டார்ஜான் பிக்சர் பாலஸின் பால்கனியில் சீனனும் ஷங்கங்கும் போய் உட்கார்ந்தார்கள். எத்தனையோ தடவை அந்தப் பால்கனி எப்படி இருக்கும் என்று பார்க்க அவர்கள் ஆசைப்பட்டிருக்கிறார்கள். தரை டிக்கட்டிலிருந்து கழுத்து ஒடிய ஒடிய, அதை அண்ணாந்து பார்த்துப் பிரமித்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் படிக்கட்டில் காலை வைக்கக்கூட அவர்களை ஒருவரும் விட்டதில்லை. கிட்டே போனாலோ அங்கிருக்கும் காவற்காரன் கழுத்தைப் பிடித்து விரட்டிவிடுவான். அப்படிப்பட்ட இடத்தில் இன்று ஜம்மென்று ஏறி, ராஜதோரணையில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். ஆளுக்கு ஓர் ஐஸ் கிரீம் கப்பை வாங்கிக் கொண்டு சுவைத்தார்கள்.

சற்றைக்கெல்லாம் படம் ஆரம்பமாயிற்று. படம் கிட்டத்தட்ட அவனுடைய சொந்தக் கதையைப்போலவே இருந்தது. தெருவில் இருந்த சாதாரணப் பிச்சைக்காரப் பையனுக்குத் திடீரென்று அதிருஷ்டம் அடிக்கிறது. அவன் அந்த அதிருஷ்டத்தை எப்படி அநுபவித்துக் காப்பாற்றுவது என்று தெரியாமல் விழிக்கிறான். அந்த அதிருஷ்டம் வந்ததிலிருந்து அவனுக்கு முன்பு இருந்த சந்தோஷமும் சௌகரியமும்கூட இல்லாமல் போய், திரும்பத் திரும்பச் சங்கடத்தில் மாட்டிக்கொள்கிறான். அதிருஷ்டம் வந்தால் போதுமா? அதை அநுபவிக்கத் திறமை வேண்டாமா? அந்தத் திறமை கல்வி யறிவு இல்லாமல் ஏற்படுமா? கல்வி வாசனையும், திறமையும் இல்லாத அந்தப் பையன் தானாக வந்த அதிருஷ்டத்தை அநுபவிக்க முடியாமல் தத்தளித்தான். அவனுடைய தத்தளிப்பைக் கண்டு, படம் பார்க்கிறவர்கள் எல்லாரும் சிரித்து ரசித்துக்கொண்டிருந்தார்கள், கடைசியில் முடிவுதான் சீனனுக்கு வயிற்றைக் கலக்கியது. எழுந்து வெளியிலே ஓடிவந்து விடலாமா என்று தோன்றியது. அந்தப் பையனுக்கு வந்த அதிருஷ்டத்தை ஓர் அக்கிரமக்கார ஆள் அபகரித்துக் கொண்டு, அவன் உயிருக்கே ஆபத்தை உண்டாக்கினான். பணம் போனாலும், உயிர் மிஞ்சினால் போதும் என்று அந்தப் பையன் தப்பி ஓடி வருகிறான். மறுபடியும் பழைய பிளாட்பாரத்தில், சாக்கடைக்கு அருகில் படுத்துத் தூங்க வேண்டிய நிலை வந்து விடுகிறது. பழைய நண்பர்களும் சுற்றத்தார்களும் அவனை மேலும் துன்புறுத்திக் கேவலமாக நடத்துகிறார்கள். அவன் படும் துன்பத்தைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. கதை அப்புறம் எப்படி முடிந்ததோ, என்னவோ சீனன் எழுந்து வெளியில் வந்துவிட்டான். ஷங்கங் மட்டும் முடிவுவரையில் பார்த்து



விட்டுத்தான் வருவான் என்று தோன்றியதால், அவன் மாடி வராந்தாவருகில் போய் நின்றுகொண்டிருந்தான்.

படத்தில் தோன்றிய பையன் வெகு அருமையாக நடித்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவன் பல சந்தர்ப்பங்களில் சாமர்த்தியமாக நடந்துகொண் டிருந்திருக்கலாம் என்றே சீன னுக்குத் தோன்றியது. தெரியாத்தனத்தினால் அவன் எல்லாரை யுமே அப்படியே நம்பிவிட்டான். உண்மையானவர்கள் யார், கபடமானவர்கள் யார் என்று அவன் யோசித்துப் பார்க்கவே யில்லை. அதனால்தான் அவனுக்குப் பல கஷ்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்டுக்கொண் டிருந்தன. ஆகவே இதிலிருந்து தானும் இனி ஜாக்கிரதையாக, எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று அவன் தீர்மானித்துக்கொண்டு நின்றான்.

சற்றுப் பொறுத்து அவன் தற்செயலாகத் திரும்பிப் பார்த்த போது வெளிச்சத்திலிருந்து இருட்டை நோக்கி யாரோ அவசர மாக மறைந்து செல்வது தெரிந்தது. அதைக் கண்ட பிறகுதான் சீனனுக்கு இப்பொழுது உண்மையிலேயே பயம் தோன்றத் தொடங்கியது. அப்படி அவசரமாக மறைந்து சென்றவன், தன் னைத் தொடர்ந்து வந்திருப்பதாகவே தோன்றியது. அதில் சந்தேக மில்லை. படத்தில் பார்த்த கதையைப்போல், தனக்கும் ஏதாவது தொந்தரவு வராமல் போகாது என்று அவனுக்கு முதல் முத லாகப் பட்டது. உடல் எல்லாம் வெவெடவென்று நடுங்கியது. நெஞ்சு திக் திக்கென்று அடித்துக்கொண்டது. தனியாக நிற் கவே யோசனையாக இருந்தது.

உள்ளே போகவும் மனம் பிடிக்காமல், வெளியில் நிற்கவும் தைரியம் இல்லாமல், அவன் சங்கடத்தோடு தடுமாறினன். வண்டியை ஓட்டத் தெரிந்திருந்தால், ஷங்கங்கும் டிரைவரும் மெதுவாக வந்து சேரட்டும் என்று அவன் முன்னுல் புறப்பட்டுப் போயிருப்பான். ஆனல் அந்த ஹோட்டல் அறைக்குத் தனியாகப் போக இப்போது அவனுக்கு இஷ்டமில்லை. சின்னப் பக்கிரிக்கும் காளிக்கும்கூட அவன் பயப்படவில்லை. அவன் தங்கியிருந்த அறைக்கு எதிர் அறையில் யாரோ இருந்தானே, அவனை நினைத்துப் பார்த்துக்கொண்டுதான் அவன் பயந்தான்.

இப்பொழுது பெரிய லட்சாதிபதியாக ஆகிவிட்ட பெருமையும் பூரிப்பும் மறைந்து, 'ஏண்டாப்பா இப்படி ஆனேம்?' என்று கூடக் கவலை ஏற்படத் தொடங்கிவிட்டது.

"டிரிண்..டிரிண்..டிரிண்.."

படம் முடிவதற்கான மணிதான் அது. கதவுகளும் திரைகளும் விலகும் ஓசை 'சர் சர்'ரென்று தொடர்ந்து கேட்டது. கும்மென்ற புழுக்கமான காற்றும் சந்தடியும் வெளிவரத் தொடங்கின. ஜனங்கள் எல்லாரும் கடைசியில் சிரித்த முகத்தோடு வெளிவந்துகொண் டிருந்தார்கள். வேர்வை வடியும் அவர்கள் முகத்துக்கு அந்தச் சிரிப்புக்கூட விகாரமாகத்தான் இருந்தது. எல்லாம் அப்படிச் சந்தோஷப்படும்படி கதை எப்படி முடிந்திருக்கும், அந்தப் பையன் எப்படி ஆகியிருப்பான் என்பனவற்றைத் தெரிந்து கொள்ளச் சீனனுக்கு ஒரே ஆவலாக இருந்தது. ஷங்கங் சீனனைத் தேடிக்கொண்டு வெளியில் வந்தான். "ஏண்டா பாதியிலே எழுந்திரிச்சு வந்துட்டே?" என்று கேட்டுக்கொண்டே ஷங்கங் அவன் தோளைப் பற்றிக்கொண்டான்.

"அப்புறம் என்ன ஆச்சு? அந்தப் பையன் என்னவானுன்?" என்ருன் சீனன்.

ஷங்கங் ஏதோ பதில் சொல்ல வந்தான். அதற்குள் கூட்டத்தினுள்ளே ஒருவன் வெகு நெளிவாக நுழைவதைப் பார்த்துவிட்டு, "டேய், டேய்! அதோ பார்!" என்று அந்த ஆளைச் சீனனுக்குக் காட்டினுன்.

"அதோ, அந்தச் சேப்புச் சட்டை போட்டுக்கொண்டு அந்தத் தாடிக்காரனுக்குப் பின்னுலே போகிருனே, அவன்தான்; ஆளைப் பாத்தியா?" என்ருன்.

சீனன் அவன் காட்டிய ஆளைப் பார்க்க முயன்ருன். முகம் மட்டும் தெரியவில்லை. அவனுக்கு முன்னுல் வேகமாக நடந்து, அந்த முகத்தைப் பார்த்து விடவேண்டும் என்று இருவரும் வேகமாக நடந்தார்கள். அந்த ஆள் இவர்களைக் கவனித்துவிட்டானே, என்னவோ; முகத்தைத் திருப்பாமலேயே அந்தக் கூட்டத்துக்குள் வெகு சாமர்த்தியத்தோடு மறைந்து முன்னேறிக்

கொண்டிருந்தான். இவர்களும் விடாமல் அவன் வேகத்துக்கு மேலான வேகத்துடனேயே பின்பற்றிச் சென்ருர்கள்.

இந்தப் போட்டி சிறிது நேரம் நடந்தது. கூட்டம், சாலேக்கு வந்ததும் கலகலத்து விட்டது. அதற்குமேல் அந்த ஆளினுல் எங்கும், தன் முகத்தை மறைத்துக்கொள்ள முடியவில்லே. பின்னுல் தன்னே யாரும் தொடர்ந்துவரவில்லே என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காகச் சிறிது நின்று திரும்பிப் பார்த்தான். அவன் திரும்பிய சமயமும் இவர்கள் இருவரும் அவனேப் பார்த்த நேரமும் கணக்காக இருந்தன. அவனே இவர்களும், இவர்களே அவனும் மிக மிக நன்ருகக் கவனித்துவிட்டார்கள்.

கிழவருடைய இந்தத் தம்பி மகன் மிகவும் பெல்லாதவனுக இருப்பான் என்றுதான் அவனுக்கு வர வர அதிகமாகப் படத் தொடங்கியது. அவன் காலேயில் அணிந்துகொண் டிருந்த 'நேவி' பனியனே இப்போது காணேம். இருந்தாலும் அந்தக் காட்சி அவனுக்கு ஒரு நினேவை உண்டாக்கிவிட்டது.

முதல் முதலில் அந்தக் கிழவரைச் சந்திக்க நேர்ந்தது துறைமுகத்தில்தானே? கிழவருக்குக் கடற்கரையில் என்ன வேலே? அப்படியே வேலே ஏதோ இருந்தாலும் அவரை அடித்துப் போட்டவன் யார்? அவரைக் குற்றுயிரும் கொலே உயிருமாகப் போட்டுவிட்டு அவன் படகில் ஏறி மறைவானேன்? சொத்துக்கள் எல்லாவற்றையும் தனக்கே எழுதி வைக்கும்படி என்ன நடந்திருக்கும்? இந்தத் தம்பி மகன் கப்பலில் மாலுமியாக இருப்பானு?

யோசிக்க யோசிக்க, இதெல்லாவற்றிற்கும் ஏதோ ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதுபோல அவனுக்குப் பட்டது. அப்படிப் பட்ட பிறகு, பாரிஸ்டர் வேதாசலம் சொன்ன வார்த்தைகளில் ஏதோ விசேஷப் பொருள் இருப்பதும் புரிந்தது. இதற்கு ஏற்ருற்போல அவன் ஹோட்டலிலும் சினிமாவிலும் தன்னேயே தொடர்ந்து வருவது அந்தச் சந்தேகத்தை இன்னும் பலமாக ஊர்ஜிதம் செய்தது.

''சாபர், பாரிஸ்டர் பங்களா தெரியுமில்லே, உனக்கு?''

''தெரியும்; ஒயிட்ஸ் ரோட்டிலே இருக்கு.''

''முதல்லே நேரே அங்கே போ! அப்புறம் ஹோட்டலுக்குப் போய்க்கொள்ளலாம்!'' என்று உத்தரவு கொடுத்தான் சீனன்.

கார் பாரிஸ்டர் வேதாசலத்தின் பங்களாவுக்குள் நுழைந்து கம்பீரமாக ஓர் உலுக்கு உலுக்கிவிட்டு நின்றது.

ஆனுல் என்ன ஆச்சரியம்! சீனனும் ஷங்கங்கும் படியேறும்போது, படியிலிருந்து வேகமாக ஓர் ஆள் இறங்கி, அவர்களேத் தாண்டிச் சென்றது தெரிந்தது. சீனன் திரும்பிப் பார்த்தான். அதே ஆள்தான்; கிழவருடைய தம்பி மகன்; கிழவருடைய ஆஸ்திகளில் ஒரு பைசாகூட அடையாத அந்தச் சப்பை மூக்கு ஆள்!

# 8

## பின்னால் வந்த வண்டி

சீனனும் ஷங்கங்கும் உள்ளே நுழைந்தபோது, பாரிஸ்டர் வேதாசலம் அமைதியாக ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்தார். மேஜைமேல் காகிதங்களும், கேஸ் கட்டுகளும் பரத்திக் கிடந்தன. நீல நிறத்திலுள்ள பெரிய பிளான் ஒன்று மடித்து வைக்கப்பட்டிருந்தது.

"என்ன மாஸ்டர்! வா, வா! ஏதாவது விசேஷம் உண்டா?" என்று அவனை வரவேற்றார் அவர்.

"விசேஷம் ஒன்றுமில்லை. சும்மா இப்படி" என்றான் சீனன்.

"சும்மாச் சொல்; தயங்காதே! வா, இப்படிப் பக்கத்தில் வந்து உட்கார்!" என்றார் பாரிஸ்டர்.

சீனன் அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு, "ஷங்கங்! அப்படி, அந்த நாற்காலியில் உட்கார்!" என்றான். பிறகு பாரிஸ்டரைப் பார்த்து, "நான் ஒன்றும் பெரிய வேலையை வைத்துக்கொண்டு வரவில்லை. ஒரே ஒரு சந்தேகம். அதைக் கேட்கவே வந்தேன்" என்றான்.

"சந்தேகம் என்ன? தாராளமாகக் கேளேன்."

"இப்பொழுது நாங்கள் உங்கள் பங்களா வாசலில் நுழைந்தபோது ஓர் ஆள் வெளியிலே பாய்ந்து போனான். அவனை நீங்கள் கூடக் காலையிலே ஹைக்கோர்ட்டுக்கு வரும்போது அழைத்து வந்தீர்கள். கிங்கிங் என்றோ சிங்சிங் என்றோ அவனைக் கூப்பிட்டீர்கள். அவன் யார்? அதைத் தெரிந்துகொள்ளவே இங்கே வந்தேன்."

"நீ வரும்போது அவனை வாசலில் பார்த்தாயா?"

"ஆமாம்; இங்கே வாசலில் மட்டும் என்ன? இன்றைக்குள் அவனை நான் காலையில் பார்த்ததையும் சேர்த்து நாலு தடவை பார்த்துவிட்டேன். நான் பார்த்தேன் என்று சொல்வதுகூடத் தப்பு. என்னைப் பார்க்கும்படி அவன் வைத்துவிட்டான். என்னையே அவன் சுற்றிக்கொண்டு இருப்பதாகத் தோன்றுகிறது. அப்படி அவன் சுற்றுவதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா?" என்றான் சீனன்.

பாரிஸ்டர் வேதாசலம் முகத்தைக் கொஞ்சம் சுருக்கிக்கொண்டு அவனையும் ஷங்கங்கையும் மாறி மாறிப் பார்த்தார்.

"அப்படியா? பின்னே நல்லவன் மாதிரி இங்கே வந்துவிட்டுப் போகிறானே!" என்றார் பாரிஸ்டர்.

"யார் அவன்? என்னை ஏன் சுற்றுகிறான்?"

"அதுதான் சொன்னேனே! அவன் உன் சுவீகாரத் தந்தையின் தம்பி மகன். அந்தக் கிழவருடைய சொத்தெல்லாம் தனக்குக் கிடைக்கும் என்று அவன் சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறான். ஆனால் அவன் எதிர்பார்த்ததற்கு நேர் விரோதமாக, கிழவர் தம் ஆஸ்தி, பாஸ்தி அனைத்தையும் உனக்குக் கொடுத்து விட்டார். முதலில் அவர் இப்படிச் செய்யப் போகிறார் என்று எனக்கே தெரியாது. முதலில் அதைக் கேட்டதும் நான் ஆச்சரியப் பட்டுப் போனேன். உயிலில் கையெழுத்திட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பும் வரையில் நான்கூட அவர் விளையாட்டுக்குச் சொல்கிறார் என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன். எனக்கே இதை நம்ப முடியவில்லை என்றால், அவனுக்கு எப்படி இருக்கும்? பெரிய அதிர்ச்சியாகவே இருந்திருக்கும். ஆனால் அவன் அதிர்ச்சியடைந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. 'உழைத்துச் சம்பாதிக்கக் கால் இருக்கிறது; கை இருக்கிறது. அந்தச் சொத்து எனக்குத் தேவையில்லை. நான் அதை எதிர்பார்க்கவும் இல்லை' என்றுதான் என்னைக் கண்டபோதெல்லாம் சொல்கிறான். ஆனால் உன்னைச் சதா பின்பற்றி வருகிறான் என்கிறாயே, அது தானே எனக்கும் காரணம் புரியவில்லை!" என்றார் பாரிஸ்டர்.

இந்தச் சமயத்தில் ஷங்கங் துள்ளிக் குதித்து, கதவுப் பக்கம் எட்டிப் பார்த்தான்.

"என்ன அது?" என்றார் பாரிஸ்டர்.

"ஏதோ காலடிச் சத்தம் கேட்டதுபோல் இருந்தது. ஆனால் ஒருவரையும் காணோம்!" என்று சொல்லிக்கொண்டே அவன் வாசல் தெரியக்கூடிய இடமாகப் போய் உட்கார்ந்தான்.

பாரிஸ்டர் பிறகு, "எங்கெங்கே அவனைப் பார்த்தாய்?" என்று விவரமாகக் கேட்டார்.

சீனன் ஒவ்வொன்றையும் அப்படி அப்படியே சொல்லிக் கொண்டு வந்தான். அதையெல்லாம் கேட்ட பிறகுதான் பாரிஸ்டருக்கும் அந்தக் கிங்கிங் மீது கொஞ்சம் சந்தேகம் தட்ட ஆரம்பித்தது. நிச்சயம் அவன் ஏதோ விபரீத எண்ணத்துடன் பின்னால் சுற்றுகிறான் என்று தோன்றிற்று. அவர் எழுந்து காலால் ஒரு மின்சாரப் பொத்தானை அமுக்கவே சற்றைக்கெல்லாம் ஒரு வேலைக்காரன் தட்டுகளிலே சுடச் சுட டிபனும், பீங்கான் கோப்பையிலே பால், டிகாஷன், சர்க்கரையும் கொண்டுவந்து அவர்களுக்கு எதிரே வைத்தான்.

பாரிஸ்டர் டிபன் சாப்பிடும்போது, "மாஸ்டர்! எனக்கு இப்போது ஒரு யோசனை தோணுது. செயின்ட் தாமஸ் மவுன்டு மேலே உனக்கு ஒரு பங்களா இருக்கு. நீங்க இரண்டு பேரும் அங்கே போய் ஒரு நாலு நாளைக்கு இருங்க..அப்புறம் என்ன செய்யலாமோ, பார்த்துக்கொள்ளலாம். சைனா ஹோட்ட

லுக்குப் போனால்தானே இப்ப வம்பு? பறங்கிமலைக்கு நீங்க போயிருப்பீங்க என்பது யாருக்குத் தெரியும்? அதுக்குள்ளே அந்தக் கிங்கிங் ஊருக்குத் திரும்பிவிடுவான்னு நினைக்கிறேன். அப்படிப் போகல்லே, அதுக்கு மேலே வேறே ஏற்பாடு செய்வோம்..எப்படி இந்த யோசனை?'' என்றார்.

சீனனுக்கு அந்த யோசனை மிகவும் பிடித்திருந்தது. ஷங்கங்குக்கு அது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. பாரிஸ்டரையே அவன் ஏதோ சந்தேகக் கண்களோடு பார்த்தான். மவுன்ட்ரோடு என்றாலும் ஓர் ஆபத்து. விபத்து என்றால் சட்டென்று உதவி கிடைக்கும். பறங்கிமலையில் அவர்களுக்கு யாரைத் தெரியும், யார் உதவிக்கு வந்து நிற்கப் போகிறார்கள் என்று அவன் எண்ணினான். ஆனால் சீனனுக்கோ, அந்த ஹோட்டலைவிட்டு வேறு எங்கே போய் இருக்கச் சொன்னாலும் தேவலைபோல் இருந்தது. காரணம், படத்தில் தோன்றிய பையனுக்கு நேர்ந்த கஷ்டங்கள் எல்லாம் ஒரு ஹோட்டலில்தான் ஆரம்பமாயின. இவ்வளவு செல்வமும் வசதியும் உள்ள ஒருவன் ஹோட்டலில் இருப்பதனால் எவ்வளவு கஷ்டங்கள் உண்டாகும் என்பதை அவன் கண்கூடாகக் கண்டுவிட்டான். மேலும் அவனையே பின்பற்றித் தொடர்ந்துவரும் கிங்கிங் அவனுடைய அறைக்கு எதிர் அறையிலேயே இருந்தது அவனுக்குப் புது அச்சத்தைக் கொடுத்தது. அதற்கு அடுத்தபடியாக அவனுடைய சிற்றப்பன் சின்னப் பக்கிரியும் அவன் மனைவி காளியாத்தாளும் அந்த ஹோட்டலைவிட்டு அந்தண்டை இந்தண்டை போவார்கள் என்று அவனுக்குத் தோன்றவில்லை.

திடீரென்று அவனுக்கு அந்தச் சைனு சு-சூ பெட்டியின் நினைவு வந்தது. அந்தப் பெட்டியின் ரகசியம் என்னவோ சீனனுக்குத் தெரியாது. ஆனால் அதில் ஏதோ விலை மதிப்பற்ற பொருள் இருக்கிறது என்று மட்டும் அவனுக்குத் தெரியும். இல்லாவிட்டால், கிழவர் அந்தப் பெட்டிக்காக உயிரைக் கொடுக்கவும் தயங்காமல் போராடியிருப்பாரா?

அந்தச் சிறிய வெல்வெட் பெட்டியின் நினைவு வந்ததும் சீனனுக்குப் பறங்கிமலைப் பங்களாவுக்குப் போவது உசிதமாகப் படவில்லை. ஆயினும் பெட்டியை எடுத்துக்கொண்டு, அந்த இடத்தைவிட்டுப் போய்விடலாம் என்று எண்ணிக்கொண்டான்.

பறங்கிமலைப் பங்களாவின் பெரும் பகுதியும் யாரும் வசிக்காமல்தான் இருந்தது. அதற்கு 'அவுட் ஹவுஸ்' என்று ஓர் ஓட்டு வீடு வெளிப்பக்கமாக இருந்தது. அதில் நம்பிக்கையான வேலைக்காரன் ஒருவன் வசித்து வந்ததோடு, அவனே அந்தப் பங்களாவையும் அன்றாடம் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து வந்தான். இதையெல்லாம் பாரிஸ்டர் சீனனுக்கு இரண்டு நாள் முன்பே சொல்லியிருந்தார். அதையே மீண்டும் இன்றும் சொன்னார். கிழவர் முன்பெல்லாம் வந்தால் பறங்கிமலைப் பங்களாவில்தான் இருப்பார். ஹோட்டல் பக்கமே அவர் ஒரு மாதத்துக்கு

முன்பு வந்ததில்லை; வருவதும் இல்லை, அந்த ஹோட்டலை ஐந்தாறு பேர்கள் பணம் போட்டு விலைக்கு வாங்கி, நடத்தி வந்தார்கள். அவர்களில் அந்தக் கிழவருக்குத்தான் அதிகமான பங்குகள் இருந்தன. கிழவருக்குப் பிறகு, அவருடைய வாரிசான சீனனே அதற்கும் சட்டப்படி வாரிசாகி விட்டான். மொத்தம் அது இரண்டு லட்ச ரூபாய் பெறுமானமுள்ள ஹோட்டல். அதில் பெரும் பகுதிப் பங்கு அவனுடையது. அவன் நினைத்தால் அந்த ஹோட்டலின் மற்றப் பகுதிகளையும் விலைக்கு வாங்கிக்கொண்டு விடலாம். அவனே அதை எடுத்து இன்னும் பெரிய அளவில் நடத்தலாம். ஆனால் சீனனுக்கு அந்த எண்ணமே இப்போது இல்லை. தனக்குரிய பங்குகளையும் அவன் மற்றவர்களிடம் விற்று விடக்கூடத் தயாராகத்தான் இருந்தான். அது அவனால் முடியுமோ என்னவோ, அதெல்லாம் பாரிஸ்டருக்குத்தான் தெரியும். பாரிஸ்டர் சம்மதித்தால், அல்லது அவர் வழி சொல்லிக் கொடுத்தால், அதன்படி செய்யலாம். அவனுடைய உரிமை, அதிகாரம், விருப்பம் இதெல்லாம் எவ்வளவு என்பது அவனுக்கே புரியவில்லை. முந்திப் பிந்தி அந்த மாதிரியான சொத்துக்களை உடையவனுக்கே புரிபடாத இந்த விஷயங்களை, அவன் பாவம் எப்படி அறிவான்?

இப்போதைக்கு, கிழவரைப்போலவே, பறங்கிமலைப் பங்களாவிலேயே போய்த் தங்கிவிடலாம் என்றுதான் அவனுக்குப் பட்டது. அங்கே போய், இரண்டு பேரும் தனியாக இருக்கலாமா முடியுமா என்பதெல்லாம் அவனுக்குத் தோன்றவில்லை.

பாரிஸ்டர் அவர்களை அங்கே அனுப்பிவிடுவதற்கான யோசனைகளைச் சொன்னதோடு நில்லாமல், அந்தப் பங்களாவுக்கு அவர்களைத் தகுந்தபடி அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் பத்து நிமிஷங்களில் செய்துவிட்டார். முதல் ஏற்பாடு டெலிபோனில் அந்தக் காவற்காரனைக் கூப்பிட்டு, அந்தப் பங்களாவின் புதிய எஜமானன் வருவதை அறிவித்ததுதான். இரண்டாவது ஏற்பாடு அவர்களுக்குத் துணையாகத் தம்முடைய கார் டிரைவரை வண்டியை ஓட்டிக்கொண்டு போகும்படி சொன்னது.

ஆனால் அவர் கூடவே புறப்பட்டு வருவதை ஷங்கங் விரும்பவில்லை என்பதை அவரும் புரிந்துகொண்டார்; சீனனும் புரிந்துகொண்டான். 'உயிரே போவதானாலும் பெட்டியைக் கோட்டைவிட்டு விடாதே' என்று கிழவர் எச்சரித்திருந்தார்.

அதனால் அவன், "சார்! நீங்கள் வீணாகச் சிரமப்பட வேண்டாம். அதுதான் உங்கள் டிரைவர் துணையாகவும் அடையாளம் காட்டவும் எங்களோடு வருகிறான். எங்களுக்கு அதுவே போதும். அவசியமானால் உங்களுக்கு டெலிபோன் செய்கிறேன்" என்றான்.

"சாபர், நீயும் அந்த டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள். அப்புறம் அந்த டிரைவரைக் கொண்டுவந்து இங்கே

விட்டுவிட வேண்டும்'' என்று அவன் மிகவும் மிடுக்கோடு உத்தர விட்டான்.

வண்டி புறப்பட்டது. ஒயிட்ஸ் ரோடு திரும்பியதும் சீனன் வண்டி ஓட்டுபவனைப் பார்த்து, ''முதலில் சைனீஸ் ரெஸ்டா ரென்ட் போ! அப்புறம் பங்களாவுக்கு அங்கிருந்தபடியே புறப் படலாம்'' என்றான்.

அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில் வண்டி வந்து, சைனு ஹோட் டல் வாசலில் நின்றது. ஆனால் நல்ல வேளையாக, சின்னப் பக்கிரியோ, காளியோ அங்கே காணப்படவில்லை. இருவரும் விடு விடென்று சீனனுடைய 'ஏர்-கண்டிஷன்டு' அறையை நோக்கிச் சென்றார்கள். அந்த அறைக்கு எதிர் அறை இப்போது பூட்டப் பட்டுத்தான் கிடந்தது. சீனனுக்கு அது வரையில் திருப்திதான்.

''ஷங்கங்! இங்கே சாபரைக் காவல் வைத்துவிட்டு, அதற்குப் பிறகு நீ உள்ளே வா!'' என்று சீனன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போய், விளக்குகளைப் போட்டான். அது வரையில் அவனுக்கு உள்ளூறப் பயம்தான். ஆனால் நல்ல வேளையாக அங்கும் எல்லாம் வைத்தது வைத்தபடியேதான் இருந்தன. முதல் காரியமாக அவன் பீரோவைத் திறந்து சாவியை எடுத்து, நடு அறையிலிருந்த அந்த வெல்வெட் பெட்டியை எடுத்துக் கொண்டான்.

இதற்குப் பிறகு ஷங்கங் உள்ளே வந்தான். நடுவில் யாரும் வந்ததாகவோ போனதாகவோ தெரியவில்லை:

''சாபர்! யாராவது எதிர் அறைக்கு வந்தார்களா?''

''இல்லை, மாஸ்டர்!''

''அப்ப சரி; போய் நமக்கெல்லாம் சாப்பாடு வேண்டாம் என்று மானேஜரிடம் சொல்லிவிட்டு வண்டிக்கு வா!'' என்று ஷங்கங் தோளில் கை போட்டுக்கொண்டு வண்டியில் போய் ஏறிக்கொண்டான்.

ஷங்கங்குக்கு இப்பொழுது எடுத்ததற்கெல்லாம் சந்தேகம் வந்திருந்தது. அவன் வண்டியினுள் ஏறிய சீனனைத் தடுத்துவிட்டு அதற்குள் இருந்த சுவிச்சைப் போட்டுப் பார்த்தான். அதற்குப் பிறகு, ''சரி; ஏறு. நான் பின்னாலும் பார்த்துவிட்டு ஏறிக்கொள்கிறேன்'' என்று பின்னெல்லாம் சுற்றிப் பார்த் தான். சாபர் போய்ச் சொல்லிவிட்டு வந்துவிடவே, வண்டி பறங்கி மலையை நோக்கி. விசாலமான மவுன்ட் ரோடிலே ஓடத் தொடங்கியது.

ஸ்பென்சர் கட்டடம் நெருங்கும்போது சீனன் சாலையிலே யாரையோ பார்த்துவிட்டுக் கூவினான்.



"டேய்! அந்தச் சப்பை மூக்கன் அதோ நிக்கிறாண்டா! நம்ப வண்டியைத்தாண்டா பார்க்கிறான்!"

"எங்கே? ஆமாண்டா! இந்தாப்பா, டிரைவர்! கொஞ்சம் வண்டியை வேகமாக மிதி, பார்க்கலாம்! உம்.." என்றான் ஷங்கங்.

"நம்ம வண்டின்னு தெரிஞ்சிண்டிருப்பானுடா இந்த வெளிச்சத்திலே?" என்று கேட்டான் சீனன்.

"சொல்ல முடியாதுடா, தெரிஞ்சிண்டும் இருக்கலாம்; தெரிஞ்சிக்காமலும் இருக்கலாம். ஆனால் நமக்கேன் வம்பு! வண்டியை எழும்பூர்ப் பக்கம் திருப்பி, அங்கிருந்து நுங்கம்பாக்கம் வந்து, மாம்பலத்துக்குப் பக்க



மாய் விட்டு, சைதாப்பேட்டைக்கிட்டே வந்து மவுன்ட்ரோடிலே ஏறுவோம். டிரைவர்! ரைட்டிலே திரும்பிப் போ!'' என்று சீனன் மாதிரியே அதிகாரம் செய்து பார்த்தான் ஷங்கங்.

டிரைவர் உடனே சொன்னபடி செய்ததைப் பார்த்தபோது, அவனுக்கே கொஞ்சம் பெருமையாகத்தான் இருந்தது. சீனன் பணக்காரனுகிவிட்டான் என்ருல் தானும் அதற்குப் பங்காளியாகிவிட்டோம் என்றுதான் அவனுக்குப் பெருமையாக இருந்தது. இனி, தட்டுத் தூக்கி, 'ஒன்றீணு - இரண்டிறீணு' கத்தல் எல்லாம் கத்தாமல், ஓரணுவுக்கும் அரையணுவுக்கும் நடையாக நடக்காமல் ஜம்மென்று இந்த வருஷத்துப் புது மாடல் காரில் போகலாம் என்று பெருமிதமாகவும் இருந்தது

அவன் சொன்னபடியெல்லாம் அந்த வண்டி போய்ப் போய், கடைசியாகச் சைதாப்பேட்டை டோல்கேட்டுக்கு அருகில் போய்க் கொண்டிருந்தது. வளைவு திரும்பியபோது பின்னுல் வேறு ஒரு கார் வருவதுபோல் அதன் வெளிச்சம் பளீரென்று அடித்தது. சீனனுக்குச் சொரக்கென்று ஆகிவிட்டது. திரும்பிப் பார்த்தான். ஒரு பேபி டாக்ஸி அவர்கள் வண்டியைச் சற்றுத் தள்ளியே பின்பற்றி வந்துகொண் டிருந்தது.

''வண்டியை ஒரு நிமிஷம் நிறுத்து!'' என்ருன் ஷங்கங்.

வண்டி நின்றது. அது நின்றதும் பின்னுல் வந்துகொண் டிருந்த டாக்ஸியும் சரக்கென்று நின்றது.

''ஓட்டு!''

அவர்கள் வண்டி ஓடத் தொடங்கியதும் பின்னுல் வந்த டாக்ஸியும் துரத்திக்கொண்டு வந்தது.

''நிச்சயம் இதில் சந்தேகமில்லை. அந்தக் கிங்கிங் வரும் வண்டிதான் அது!'' என்ருன் ஷங்கங்.

சீனனும் ஷங்கங்கும் ஏறிச் சென்ற வண்டி காற்றினும் கடிய வேகத்தில்தான் சென்றது. ஆனுல் அதே சமயத்தில் பின்னுல் தொடர்ந்து வந்த வண்டியும் அந்த ஓட்டத்துக்கு ஏற்ப வந்து கொண்டிருந்தது.

எனவே பின்னுல் வந்த வண்டி அவர்களுடைய வண்டியைத் தொடர்ந்து வந்ததுதான் என்பதில் சந்தேகமேயில்லை. வீணுக எழும்பூர், நுங்கம்பாக்கம் என்று சுற்றி, பெட்ரோலைச் செலவழித்ததுதான் கண்ட பலன். முதலிலேயே வழியோடு போயிருந்தால் கிங்கிங் இன்னெரு டாக்ஸியைத் தேடி, ஏறி உட்கார்ந்து, பின்பற்றி வருவதற்குள் கண்ணில் படாமல் போயே போய் இருக்கலாம்.

சீனன் பார்த்தான். ''சரி; டிரைவர்! வண்டியை எங்க சாபரிடம் கொடு!'' என்ருன். பிறகு சாபரைப் பார்த்து, ''நீ போய் ஓட்டப்பா! பின்னுல் துரத்திக்கொண்டு வரும் காருக்கு எப்படி

டிமிக்கி கொடுப்பாயோ, எனக்குத் தெரியாது. ஷங்கங்! உன் மூளைக்குக் கொஞ்சம் வேலை கொடுத்து, சாபருக்கு யோசனை சொல், பார்க்கலாம்!'' என்றான்.

ஏதாவது உடனே செய்தாக வேண்டிய அவசியம் எல்லாருக்கும் புலப்பட்டது. வண்டி, கிண்டி மேம்பாலத்தின் ஏற்றத்தில் போய்க்கொண் டிருந்தது. வண்டியை நிறுத்தாமலே டிரைவர் ஸ்டியரிங் வளையத்தைச் சாபரிடம் விட்டு விட்டு நகர்ந்தான்.

திடீரென்று ஷங்கங்குக்கு ஒரு யோசனை உதித்தது. ''சாபர்! வண்டியை 'லெப்டு'லே ஓடிச்சுத் திருப்பு!'' என்றான். சாலை அங்கே இரண்டு பிரிவுகளாகச் சென்றது. ஒன்று பெரிய சாலை. மற்றொன்று, ராஜபவனம் செல்வது. அந்த இரண்டாவது பிரிவில் வண்டி திரும்பியது. அந்த இடம் வளைவாக இருந்ததால், அவன் எதிர்பார்த்தபடியே பின்னால் வந்த வண்டி அவர்கள் வண்டியைத் தொடரவில்லை. அது நேராகப் பெரிய சாலையிலேயே ஓடத் தொடங்கியது. இறக்கத்தில் இவர்களுடைய முன் வண்டி எந்தப் பக்கமாகப் போயிற்று என்பதைப் பின்னால் வந்த டாக்ஸி டிரைவரால் தெரிந்துகொண் டிருக்க முடியாது. ஆகவே அது வளைந்து சென்ற சாலையிலே மேம்பாலத்தைத் தாண்டிச் சென்றது.

''எப்படிச் சீனு, நம்ப பிளான்?'' என்றான் ஷங்கங்.

''அதுக்குள்ளேயே சர்டிபிகேட்டை எதிர்பார்க்கிறாயா? முந்தி ஊரைச் சுற்றிக்கொண்டு வரச் சொல்லி யோசனை சொன்னேன்! ஆனால் அது நடக்கல்லே. இப்ப எப்படி ஆகப்போகிறதோ, பார்க்கலாம் அப்புறம்!'' என்றான் சீனன்.

சீனனுக்கு நாலு நாளைக்குள் பெரிய மனிதப் பேச்செல்லாம் - அகப்பட்டுக் கொள்ளாதபடி பாராட்டுவதற்கெல்லாம் - வந்து விட்டதாக ஷங்கங் எண்ணினான்.

இந்தத் தடவை அவர்கள் சமாளித்து விட்டதாகவே தோன்றியது. அவர்களைக் கடந்து சென்ற வண்டி வெகுதூரம் முன்னால் போய்விட்டது. அதனுடைய சிவப்பு விளக்கு, பறங்கிமலை செல்லும் அந்த வளைந்த ரஸ்தாவில் அதுவும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது.

இவர்களுடைய வண்டி நிதானமாகத் திரும்பி, குறித்த இடத்தை நோக்கிப் போய்க்கொண் டிருந்தது. இவர்களுடன் வந்த டிரைவர் அந்தப் பங்களாவுக்குச் செல்லும் வழியைச் சொல்லிக்கொண்டு வந்தான். பங்களா, மலைக்குச் செல்லும் அழகிய சாலையில், தூரத்தில் வரும்போதே பார்வையில் படும்படி அமைந்திருந்தது. தூரத்திலிருந்து பார்த்தால் மலையின் இடைப் பாகத்தில், உயரத்தில் இருப்பதுபோல் காட்சியளித்தது அது. ஆனால் போகப் போகத்தான் ஊரும், அதிலுள்ள வீடுகளும் மலையின் மேட்டுப் பாங்கான சரிவில் இருப்பது தெரிந்தது.

## 9

## குழாய் வழியே

கிழவருடைய பறங்கிமலைப் பங்களா தனியாகவும், மற்றப் பங்களாக்களைவிடப் பெரிதாகவும் அழகாகவும் தோற்றமளித்தது. மேல் உச்சியில் இருந்த செயின்ட் தாமஸ் மாதாகோயிலும், கீழ்ப் பகுதியில் கிழவருடைய பங்களாவும் அந்த மலைக்கே ஓர் அழகைக் கொடுத்துக்கொண் டிருந்தன.

இதையெல்லாம் பார்த்ததும் சீனனுக்கு ஒன்றும் உண்மையில் நடப்பதுபோலவே தோன்றவில்லை. ஏதோ ஓர் அதிசயக் கனவில் நிகழ்வதுமாதிரிதான் தோன்றியது. அந்த வெள்ளை மாளிகைக்கு அவன்தான் எஜமானன் என்று பதினைந்து நாட்களுக்கு முன் எவனாவது ஜோஸ்யம் சொல்லியிருந்தால் அவனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் அனுப்பியிருப்பார்கள். ஆனால் இன்று அதுவே நடந்திருக்கும்போது, இந்த அதிசயத்தை எப்படி நம்புவது? நினைக்க நினைக்க அவனாலேயே நம்ப முடியவில்லை. ஷங்கங்குக்கூடத் தெரியாமல் இது நிஜமா, சொப்பனமா என்று தன்னுடைய தொடையில் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டான்.

வண்டி வெகு சொகுசாக நிலவில் ஏரியிலே மிதந்து வரும் படகைப்போல, நளினமாகச் சென்றுகொண் டிருந்தது. ஆயிற்று, அந்த வளைவு திரும்பி மேல்புறமாக ஏறினால் பறங்கிமலைப் பங்களாவின் முன் கிராதி தெரியும். ஆனால் அதற்குள் சுற்றிலும் இருக்கும் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு வந்த சீனனுடைய கண்களில் பங்களாவின் வெளி மதில் பக்கத்திலே, இடதுபுறத்து மறைவில் இருந்த மரங்களும் அதன் நிழலிருட்டிலே நின்ற ஒரு சிறிய வண்டியும் கண்களில் பட்டன.

ரோடு ஏற்றமாக இருந்ததால் வண்டி மெதுவாகத்தான் வந்து கொண்டிருந்தது. அதனால் சீனன் கதவு ஓரமாக வெளியில் தலையை நீட்டி, அந்த வண்டியில் யார் வந்திருக்கிறார்கள் என்று பார்த்தான். அதனுள் ஓர் ஆள் இருப்பது தெரிந்தது. இந்த வண்டியைக் கண்டதும் அந்த வண்டி, 'குர்' என்று புறப்படும் சத்தங்கூட அந்த அமைதி சூழ்ந்த இரவில் கேட்டது. 'யாரோ, என்னவோ, நமக்கு என்ன?' என்று திரும்ப நினைத்த சீனனுடைய கண்களில்-ஆம்; திகைப்பையும் வியப்பையும் கலந்து ஊட்டும்-அந்தக் காட்சி தென்பட்டது.

பறங்கிமலைப் பங்களாவில் உயர்ந்த வெள்ளைச் சுவரில், அதன் உயரத்துக்குப் பொருந்தியிருந்த கறுப்பு இரும்புக் குழாயைப் பிடித்துகொண்டு யாரோ ஓர் ஆள், கிளைக்குக் கிளை தாவும்



குரங்கின் பயமற்ற லாகவத்தோடு ஏறிக்கொண் டிருந்தான். அவனைத் தவிர மற்றவர்கள் அந்தக் காட்சியைக் கவனித்ததாகத் தெரியவில்லை. பக்கத்தில் இருந்த ஷங்கங்கூட, 'சலாம் பாபு, சலாம் பாபு!' என்று ஷோக்காகப் பாடிக்கொண் டிருந்தான். அவனுக்கு எப்போதுமே இந்தச் சினிமாப் பைத்தியம் எல்லாம் உண்டு. எப்படியாவது ஒரு தடவையாவது, ஒரு நாளாவது அந்தச் சினிமாவில் சேர்ந்து, ஒரு நிமிஷமாவது நடித்துவிட வேண்டும் என்று அவனுக்கு ஓர் ஆசை இருந்தது. அந்த ஆசை இன்றில்லாவிட்டால் என்றுவது ஒரு நாள் நிறைவேறத்தான் போகிறது என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது. காரணம், அவனுக்கு இருந்த இனிய சாரீரந்தான். அந்த இனிமையை யெல்லாம் அவன் இவ்வளவு நாளும் பிளாட்பாரத்தில் பாடியே வீணாக அடித்துவிட்டான். இனி அவனுக்கு என்ன கவலை? அவனுடைய உயிரினும் மேலான தோழனுக்கு அடித்திருக்கிற யோகம் அவனுக்கே அடித்த யோகம் மாதிரித் தானே! அந்தக் குதூகலத்தில் அவன், 'சலாம் பாபு!' பாடிக்கொண் டிருந்தான். அவனைக் கூப்பிட்டு, "அதோ பாரடா!" என்று சீனன் சொல்லிக் காட்டுவதற்குள் வண்டி பங்களாவின் பக்கத்து மதிலைக் கடந்து முகப்பை நெருங்கிவிட்டது. வாசலில் அந்தக் காவற்காரன் தயாராக, விறைப்பாக, கையில் சிறு தடியுடன் புது எஜமானை வரவேற்கக் காத்திருந்தான்.

அலுமினியப் பெயின்ட் அடித்த

இரும்புக் கிராதி வெள்ளிக் கம்பிகளை வைத்துக் கட்டியதுபோல் பளபளத்தது. பங்களாவின் முன்புறமெங்கும் தேஜோமயமாக விளக்குகள் எரிந்து, பங்களாவின் தோற்றத்தை மிகைப்படுத்திக் காட்டின. வெளி மதிலுக்கும் உள்ளே யிருந்த முகப்புக்கும் இடையிலே அழகழகான செடிகள், மரங்கள் பூத்துக் குலுங்கின. நடுநடுவே நீல நிற விளக்குகள், குளிர்ந்த நிலவுபோல ஒளி வீசிக் கொண்டிருந்தன.

சலவைக் கல் மேடைகளும், சாய்மானங்களும் வெல்வெட் மெத்தை விரித்ததுபோன்ற மரகதப் பச்சைப் பசும்புல் தரையும் செயற்கை ஊற்றும், வர்ண ஜாலம் புரியும் பல வண்ணக் கதிர்களும் இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கலாம்போல இருந்தன. பூலோகத்திலிருந்து திடீரென்று அமரலோகத்தினுள் வந்து நுழைந்துவிட்ட திக்பிரமைதான் யாருக்கும் உடனே உண்டாகும். ஷங்கங்குக்கு அப்படித்தான் இருந்தது. சட்டென்று அவன் பாட்டு ஒலி பரப்புவதை நிறுத்தியதிலிருந்தே அது மிக நன்ருகத் தெரிந்தது;

ஆனல் வண்டி முகப்பு மண்டபத்தினுள் வந்து ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டு நின்றதுமே, சீனன் ஒரே பாய்ச்சலில் கதவைத் திறந்துகொண்டு வெளியில் பாய்ந்தான். காவல் பார்த்து வந்த அந்த ஆளைப் பார்த்து அவன், "இந்தாப்பா! சட்டுனு பாரிஸ்டருக்குப் போன் போடு!" என்று அவனுக்கு முன்னல் போகத் தொடங்கினன்.

நல்ல காலம்; போன் கீழே உள்ள அறை ஒன்றில்தான் இருந்தது. இரண்டு நிமிஷங்கள்கூட ஆகியிருக்காது. பாரிஸ்டரோடு தொடர்பு கிடைத்துவிட்டது. அவனுடைய சுறுசுறுப்பையும் அழகான தோற்றத்தையும் பார்த்து ரசித்துக்கொண் டிருந்த வாட்சுமேனை அவன் ஒரு விரலால் சைகை காட்டி வெளியில் காத்திருக்கச் சொன்னன்.

மேலும் அவன் இரண்டு நிமிஷங்கள்தான் டெலிபோனில் பேசியிருப்பான்! சட்டென்று வெளியில் வந்து, இந்தாப்பா வாட்சுமான்! நேரே வண்டியிலேறி, பக்கத்திலிருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்குப் போ!" என்று உத்தரவு கொடுத்தான்.

ஷங்கங்குக்கூட இந்த விசித்திரமான நடத்தைக்குப் பொருள் விளங்கவில்லை. வண்டியை அனுப்பிவிட்டு அவன் ஷங்கங்கோடு நீரூற்றுப் படிக்கட்டில் வந்து உட்கார்ந்தான். விவரம் புரியாது விழிக்கும் ஷங்கங்கைப் பார்த்து, "ஒண்ணும் புரியல்லியா, உனக்கு? உனக்கு எப்படிப் புரியும்? நீதான் பாபுவுக்குச் சலாம் போட்டுக்கொண் டிருந்தாயே!" என்ருன்.

அப்பொழுது ஷங்கங் எதுவும் விளங்காமல் திகைக்கவே, "உன் பிளான் எப்படி என்று கேட்டாயே, அதைவிட அவன் பிளான் ஒரு படி மேலேயே போய்விட்டது!" என்ருன்.

"எது, எது?"

"அதான் அந்தச் சப்பை மூக்குச் சீனுக்காரன் பிளானைச் சொல்றேன்!"

"யாரு, கிங்கிங்கையா சொல்றே?"

"உஸ்; சத்தம் போடாதே! அவனை ஏய்த்துவிட்டு வந்ததாக நாம் எண்ணிச் சந்தோஷப்பட்டுக்கொண்டு வந்தோமே, அவன் நம்மை டபாய்த்துவிட்டு, நமக்கு முன்னே இங்கே வந்து, நம்மை விட ரொம்பத் தூரம் உயரவே போய்விட்டான்!" என்று மேலே கையைத் தூக்கிக் காட்டினான். சீனன் அவனுக்கு, தான் சற்று முன் கண்டதை, விளக்கி விரிவாகச் சொல்லவேண்டியிருந்தது.

"அதான் போலீஸுக்குப் போன் பண்ணினியா?" என்று அடித்தொண்டையில் ரகசியமாகக் கேட்டான் ஷங்கங்.

"இல்லே; பாரிஸ்டர் வேதாசலத்துக்குப் போன் பண்ணினேன். அவர் அங்கிருந்து போலீசுக்குத் தகவல் கொடுப்பார். பிறகு இந்த ஊர்ப் போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனே தகவல் கிடைத்துவிடும். எதற்கும் வண்டியை அனுப்பினால் அங்கிருந்து உடனே உதவி ஏதாவது கிடைக்குமாம். அதற்குத்தான் வண்டி போயிருக்கிறது!" என்று கூறினான் சீனன்.

"டேய் சீனு!"

"என்ன?"

"நீ திடீர்னு பணக்காரனு ஆயிட்டேன்னு மட்டுமே நினைச் சேன்-"

"உம்....."

"ஆகா, நீ திடீர்னு பெரிய மேதாவியாகவும் ஆயிட்டேடா!"

"ஓகோ!" என்று அவன் சொல்வதற்குள் ஷங்கங் அவனைக் கட்டிக்கொண்டு, முதுகில் ஓங்கி ஓங்கித் தட்டினான்.

# 10

## போலீஸ் வந்தது

"சர்ர்.....ர்....."

போன வண்டி நீருற்றைச் சுற்றிக்கொண்டு சத்தப்படாமல் வந்து 'சர்'ரென்று அவர்களுக்கு எதிரே நின்றது. தொப தொப வென்று நாலைந்து போலீஸ் வீரர்கள் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக இறங்கினுர்கள். சீனன் உடனே அவர்கள் எதிரில் போய், "இடது புறத்துக் குழாய் வழியாக!" என்று கையைக் காட்டிக் கூறினுன்.

அவர்களில் தலைமையாக இருந்தவன் இரண்டு பேரை உள் பக்கமாகப் போகச் சொல்லிவிட்டு, இன்னும் இரண்டு பேரை அழைத்துக்கொண்டு, சீனன் காட்டிய திசையில் சென்ருன்.

அரை மணிக்கெல்லாம் ஒரு போலீஸ் வானே வாசலில் நுழைந்து வந்தது. "மாஸ்டர் சீனன் யாரு, தம்பி? எங்கே இருக்கார் அவர்?" என்ருர் அதில் வந்த இன்ஸ்பெக்டர்.

சீனன் எழுந்து நின்று, "நான்தான்!" என்ருன்.

"நீங்களா? ரொம்பச் சந்தோஷம்! எல்லாம் தகவல் கிடைச்சுது. ஆனுல் ஒன்றுமே கவலைப்படாதீங்க. ஆளைப் அப்படியே பிடிச்சுக் கொண்டாந்து உள்ளே தள்ளிடறேன். முந்தி வந்த வங்கள்ளாம் எங்கே?" என்று படபடப்போடு கேட்டார்.

"உள்ளேதான் போயிருக்காங்க. அரைமணி ஆச்சு. தகவல் தெரியல்லே. நாங்க அவங்களுக்காகத்தான் இங்கே காத்திருக்கோம்" என்ருன் ஷங்கங்.

அந்தச் சமயத்தில் தலைமைப் போலீஸ்காரன் வேர்க்க விறுவிறுக்க வெளியில் வந்தான். இன்ஸ்பெக்டரைக் கண்டு, தடால் என்று காலை இடித்துக்கொண்டு ஒரு போலீஸ் சல்யூட் அடித்தான். பிறகு கிட்டே வந்து, "ஓரிடம் பாக்கியில்லாமெ 'ஸர்ச்' போட்டுப் புட்டோம்! யாரையும் காணேம்! தம்பி சும்மா ஏதோ நிழலைப் பார்த்துப்புட்டு அருண்டுட்டுதுபோல் இருக்கு!" என்ருன்.

"இல்லை; ஆள் ஏறினதை என் கண்ணுல் பார்த்தேன்!"

"இன்னும் யார் யார் பார்த்தீங்க?" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"வேறே யாரும் கவனிக்கல்லே."

"அப்ப சரிதான்; ஏதோ ஒரு பிரமையாகத்தான்...." என்று சிரிக்கத் தொடங்கிய இன்ஸ்பெக்டர் பேச்சை முடிக்கவில்லை

"மதிலுக்கு வெளியிலேதான் அந்த டாக்ஸி நின்றது!" என்ருன் சீனன்.

எல்லாரும் அவசர அவசரமாக டாக்ஸி நின்ற மரத்தடியை, மதில் ஏறிப் பார்த்தார்கள். இன்ஸ்பெக்டர் டார்ச்சு விளக்கை அடித்துக் கூடப் பார்த்தார். மரங்கள்தான் இருந்தன. டாக்ஸியைக் காணேம்.

மரம் இருந்த பகுதியைத் தவிர மற்றப் பகுதியெல்லாம் செம்பூருங் கல்லாக, பாறையாக இருந்ததால், டாக்ஸி நின்ற சோடே தெரியவில்லை. சாலை வரையில் போய்ப் பார்த்தபோது, டயரின் சுவடு தெரிந்தது. ஆனுல் அதைக்கொண்டு டாக்ஸி வந்தது என்பதை ஏற்றுக்கொள்ள இன்ஸ்பெக்டர் தயாராக இல்லை. "சாலையில் எத்தனையோ கார்கள் வருகின்றன, போகின்றன! அதனுல் அது மரத்தடியில் நின்ற வண்டியின் சுவடுதான் என்று எப்படிச் சொல்வது?" என்று அவர் பிடிவாதமாக, முயலுக்குக் கொம்பு உண்டு என்கிற ரீதியில் பேசிக்கொண் டிருந்தார்.

சீனனுக்கு அதற்குமேல் என்ன சொல்வது என்று புரியவில்லை. கோபம் கோபமாக வந்தது. ஆனுல் இன்ஸ்பெக்டரிடம் கோபம் கொள்ளத் தைரியமும் இல்லை.

எல்லாருமாகப் பங்களாவின் முன் ஹாலுக்கு வருவதும் அப்போது டெலிபோன் மணி கிணுகிணு என்று ஒலிப்பதும் சரியாக இருந்தன.

சீனன் ஓடிப்போய் ரிஸீவரைக் கையில் எடுத்தான்.

"ஹலோ! யாரு?"

"யார் பேசறது?"

"நான்தான் சீனன். நீங்க!"

"சீனன்தானே நீ?"

"ஆமாம். நீங்க யாரு, தெரியலியே!"

"தெரியாது; தெரியவும் கூடாது. மரியாதையாப் போலீஸையெல்லாம் போகச் சொல்லிட்டு இருந்தே, பொழச்சே! இல்லே, ஏதாவது வாலாட்டினியோ, தொலைஞ்சே! நீ எங்கே போனுலும் உன் தலை போயிடும். என்ன? பதிலைக் காணேம்? காதிலே விழலியா?"

சீனன் மூச்சு முட்டப் பதில் சொல்லாமல் நின்ருன். இப்படிப்பட்ட ஒரு செய்தியை டெலிபோனில் கேட்க நேரும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. கடைசியாக அந்தக் குரல், "என்ன, சொன்னபடி செய்வியா?" என்று கேட்டது. அவன் தன்னையறியாமல், "ஆகட்டும்" என்ருன்.



“நான் சொல்றபடி கேட்டே, நீ உயிர் பிழைக்கலாம்; சொத்து, எஸ்டேட் எல்லாவற்றையுங்கூட அநுபவிக்கலாம். “இல்லேயோ, அல்பாயுசாக உன் வாழ்வு முடிந்துவிடும். இன்றைக்கே முடிந்துவிடும். உன்னை எவ்வளவு பேர் காவல்காத்த போதிலும் சரிதான்!”

“நீ யாருன்னு மட்டும்...”

“ஹஹ்ஹஹ்ஹா!”

அடுத்த நிமிஷம் டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைக்கும் ஓசை கேட்டது சீனனுக்கு. அவனும் விக்கிப்போய் டெலிபோனைக் கீழே வைத்துவிட்டு, மற்றவர்களிடம் வந்தான்.

இதை இன்ஸ்பெக்டரிடம் சொல்வோமா, வேண்டாமா என்று மூளை குழம்பியது. கண்ணால் கண்டதையே அவர் நம்ப மறுக்கும்போது, காதால் கேட்டதைச் சொன்னால் எங்கே காது கொடுத்துக் கேட்கப் போகிறார்? சீனன் ஒரு முடிவுக்கு வருவதற்குள் மீண்டும் டெலிபோன் மணி ஒலித்தது. அவனுக்கு அதைப் போய் எடுத்துக் கேட்க விருப்பமில்லை; தைரியமுமில்லை. எனவே அவன், “ஸார்! உங்களுக்குத்தான் போல் இருக்கு!” என்று மெதுவாக இன்ஸ்பெக்டரிடம் சொன்னான். அவர் போய் எடுத்துப் பேச ஆரம்பித்ததுமே அவர் யாரோடு பேசுகிறார் என்பது புரிந்துவிட்டது. அந்தப் பக்கத்தில் பேசியவர் பாரிஸ்டர் வேதாசலம் என்பதை அவன் ஊகித்துவிட்டான்.

“எஸ் ஸார்! நான்தான் மவுன்ட் இன்ஸ்பெக்டர்! ஆமாம்.. சும்மா எதையோ இருட்டிலே வெள்ளையாகத் தெரிஞ்சதைப் பார்த்துட்டு, தம்பி பயந்திட்டுது. வேறே ஒண்ணுமில்லே...எஸ் ஸார்! எதுக்கும் நான் இரண்டு ஆளுங்களைக் காவல் போட்டுட்டுப் போறேன். ஆங்...என்ன சொல்றீங்க! எஸ். எஸ்...அப்படி ஏதாவது ஆபத்து கீபத்துன்னு ஒரு ரிங் கொடுத்தால் போதும்; உடனே நான் ரெயிடு பண்ணிடமாட்டேன்? ஆமா ஸார்! எம் பேரு துரை சிங்கம்..எஸ் ஸார்; தாங்க்யூ..குட் நைட்!”

இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் பிறகு பல்லை இளித்துக் கொண்டே, “டேய் தர்ட்டி தர்ட்டி, நீயும் இன்னும் மூணுபேரும் இங்கேயே டியூட்டி பாருங்க! என்ன?” என்றார்.



"ஆகட்டும் ஸார்!" என்று காலை உதைத்துக்கொண்டு சலாம் அடித்தான் தர்ட்டி தர்ட்டி.

"பயப்படாமெ இருங்க, தம்பிங்களா. துரைசிங்கம் இருக்கிற ஊரிலே ஒரு பயல் மூச்சுக் காட்டிப்புடுவானா. துணிச்சலா? ஹெஹ் ஹேன்னானும்! அப்புறம் அவன் இருக்கிறதா, இல்லே, அப்படியே போயிடறதா? சும்மா, தைரியமா இருங்க!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் இன்ஸ்பெக்டர்.

தர்ட்டி தர்ட்டி என்ற போலீஸ்காரனும் மற்ற மூன்று பேரும், சீனனுக்கு முன்னால் வந்து நின்று ஏதோ பெரிய காரியம் ஒன்றைச் செய்துவிட்டதுபோலப் பல்லைக் காட்டினார்கள்.

சீனன் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை வீசி எறிந்து, "இன்ஸ்பெக்டர் சொன்னதெல்லாம் நினைவுலே இருக்குமா?" என்றான்.

உடனே அவர்கள் முகமெல்லாம் மலர்ந்துவிட்டன.

"என்னாங்க தம்பி! நைட்டெல்லாம் இப்படியே முளிச்சிக்கினு இருக்கமாட்டோம்? ஏதாவது துளிச் சத்தம் கேட்டுது..டுப்புத் தான்! சுட்டுப்புடுவோம் சுட்டு!" என்றான் தர்ட்டி தர்ட்டி.

"நம்பளைச் சுடாமெ இருங்க; போதும்" என்றான் ஷங்கங்.

பேசாமல், டிரைவரோடு பாரிஸ்டர் வீட்டுக்கே திரும்பிவிட லாமா என்றுகூட நினைத்தான் சீனன். யாருக்குப் பயந்துகொண்டு, அவன் பறங்கிமலையில் வந்து இருக்க எண்ணினானோ அவனை அவன் தன் கண்ணால் கண்டது உண்மை! அவன் சாக்கடைக் குழாயைப் பற்றிக்கொண்டு பங்களாவில் ஏறியதும் உண்மை. ஆனால் அதைத் தான் ஒருவரும் நம்பவில்லையே! அப்படி ஏறியவன் இவ்வளவு பேர் தேடியும் கிடைக்காமல் எங்கே போய் மறைந்திருப்பான்? ஒருகால் அதற்குள் தப்பிப் பறந்திருப்பானோ? டெலிபோனில் கூப்பிட்டு மிரட்டியவன் யார்? எங்கேயோ, அடிக்கடி கேட்ட குரல் மாதிரி இருந்ததே!

அந்தக் கிழவர் உபயோகித்த அந்தப் பெரிய குஷன் தைத்த மஞ்சத்தில் அவன் படுத்துக்கொண்டான். வாட்சுமேன் பங்களா வைச் சுற்றிப் பார்வையிடப் போய்விட்டான்.

அந்த மஞ்சம் மட்டுமே எத்தனையோ ஆயிரம் ரூபாய் பெறு மானமுள்ளது. ஒரு சுவிச்சைப் போட்டால் அறையில் நீல ஒளி ஒன்று பரவியது. அடுத்த சுவிச்சைப் போட்டால், அந்த நீல விளக்கு அணைந்து, ஊதாவும் சிவப்பும் கலந்த கருஞ்சிவப்பு ஒளி பரவியது, அடுத்ததைப் போட்டால், நிலவொளிபோல் வீசியது. அடுத்தது நல்ல வெயில் போல ஒளி வீசியது.

சீனன் குருட்டு யோசனை செய்தவாறே படுத்திருந்தான். தலையணைகளுக்கும் திண்டுகளுக்கும் நடுவே அந்தச் சிறு தோல் பெட்டியை வைத்துவிட்டு, அதை அணைத்தாற்போல் படுத்திருந் தான். மெல்ல மெல்ல அந்தக் குளிர்ச்சி நிலை பொருந்திய அறையில் அவன் சுகமாகத் துயிலில் ஆழ்ந்து போனான்.

## 11

## பயங்கர உருவம்

'டண் டண் டண்' என்று கடிகாரம் பாட்டுப் பாடுவது போல் அடித்து ஓய்ந்தது. மணி பன்னிரண்டு. ஆனால் சீனனுக்கு ஒன்றுமே தெரியாது. அவன் களைத்துப் போயிருந்தான்.

"டுர்..டுர்.." என்று ஷங்கங் குறட்டையே விட்டுக் கொண்டிருந்தான்.

சற்றைக்கெல்லாம் மறமற வென்று வெளியே ஏதோ முறிந்துவிழும் ஓசை ஒன்று கேட்டது. அப்போதுதான் சீனன் கண்ணை விழித்துக்கொண்டு பார்த்தான். அந்த இடத்திலிருந்து பார்த்தால் கருநீலத் திரையிலே வைரப் பொட்டுகளைப் பொறித் ததுபோல இருளில் சென்னை நகரத்தின் விளக்குகள் எல்லாம் தென்கோடியிலிருந்து வடகோடி வரையில் மினு மினு என்று மின்னிக்கொண் டிருந்தன.

சீனன் சட்டென்று விளக்கின் சுவிச்சைப் போட்டபோது யாரோ எழுந்து ஓடுவதுபோல இருந்தது. அறையில் நீல விளக் கின் ஒளி பரவியதால் ஓடியது மனிதனா, பூனையா என்று புரிய வில்லை. ஷங்கங் காடாந்தகாரமாகத் தூங்கிக்கொண் டிருந்தான். சட்டென்று சீனனுக்குத் தோல் பையின் ஞாபகந்தான் வந்தது. நல்ல வேளை! அது இருந்த இடத்திலேயே பத்திரமாக இருந்தது.

"தர்ட்டி தர்ட்டி!" என்று இரைந்து கூப்பிட்டான் சீனன்.

யாரையும் காணோம்.

"அடேய் ஜவான்!"

சத்தமே இல்லை.

"ஏய், வாட்சுமேன்!"

இதற்கும் பதில் வரவில்லை. இதற்கு மேல்தான் சீனனுக்குப் பயம் பிடித்துக்கொள்ளத் தொடங்கியது. எல்லாரும் எங்கே தொலைந்துவிட்டார்கள்! ஐந்து ரூபாயையும் வாங்கிக்கொண்டு, கொஞ்சமும் நன்றியில்லாமல் எங்கே போய்விட்டார்கள்?

சற்றைக்கெல்லாம் மெல்லிய சீட்டி ஒலி ஒன்று கேட்கவே, சீனன் தன் ஆபத்தை நன்றாக உணர்ந்துகொண்டு விட்டான். தன் தைரியம் அனைத்தையும் ஒன்று சேர்த்துக்கொண்டு டெலி போன் இருக்கும் சிறு அறைக்குள் பதுங்கிப் பதுங்கி நடந்தான்.

'கர்ர், கர்ர், சர்ர், சர்ர்!'

"ஹலோ! இன்ஸ்பெக்டர், சார்!"

MADURAI UNIVERSITY LIB

"ஆமாம்."

"ஆபத்து; உடனே போலீஸ் வானை எடுத்துக்கொண்டு புறப்பட்டு வாருங்கள். அவசரம்!"

"என்ன ஆபத்து!"

"வரப்போறீங்களா. இல்லையா, ஸார்!

"சரி; இதோ வருகிறோம்!"

சீனன் டெலிபோனைக் கீழே வைத்துவிட்டுத் திரும்பிய போது புலியின் கண்கள்போல, நெருப்புப் பந்தென இரு கண்கள் அவன் அருகே விழித்தன. கைகள் இரண்டு அவன் மென்னி யைப் பிடிக்க வருவதுபோல நெருங்கி வந்தன.

அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில் கீழே போலீஸ் வான் ஒன்று பாம், பாம் என்று அலறியது.

ஆனால் பாதையில் வெட்டி விழுந்து கிடந்த மரத்தைத் தாண்டி எப்படி வர முடியும்?

இதற்குள் சீனனுக்குப் பின்புறத் தில் நின்ற உருவம் மெல்ல நெருங்கி வரத் தொடங்கியது. அவனுக்கு வாயை விட்டுக் கூச்சல்போடக்கூடத் தோன்ற வில்லை. தொண்டையில் இரும்புக் கட்டை ஒன்று அடைத்துக்கொண்டதுபோல் இருந் தது.

அந்த உருவம் பேசவில்லை;



மிரட்டவில்லை; தலையிலிருந்து கால்வரை பெரிய கம்பளியால் மூடிப் போர்த்திக்கொண்டதுபோல் நெடிய தோற்றத்துடன் அது அவனுடைய வேகத்திற்கு இசைய முன்னேறி வந்தது.

சின்ன அறை; எவ்வளவுதான் பின்னுல் போக முடியும்? சீனன் திரும்பிப் பார்க்காமலேயே சுற்றிச் சுற்றி வந்தான். இனி, அதற்கும் வழியில்லை. அந்தப் பயங்கர உருவம் அவனை அசைய முடியாதபடி மூலையில் மடக்கிக்கொண்டுவிட்டது. இரும்பு போன்ற அதன் கைகள் இரண்டும் அவன் கழுத்தை....

"கிரீச்—"

உயிருக்குப் பயந்து ஓலமிட்டுக் கதறியது அவன் குரல். கழுத்தைப் பிடிக்க வந்த கை அவன் வாயை அடைத்துவிட்டது.

அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும். அடுத்த விநாடி அவன் வெட்டிச் சாய்ந்த மரமெனக் கீழே விழுந்துவிட்டான்.

# 12
## பெட்டியைக் காணோம்

அரை மணி நேரம் கழிந்திருக்கலாம். பறங்கிமலைப் பங்களாவின் கீழ்ப்புறத்தில் ஒவ்வொரு விளக்காகப் பொக்குப் பொக்கென்று எரியத் தொடங்கியது. சில விநாடிகளில் பகல்போல் எங்கும் பிரகாசமாகிவிட்டது.

தடதடவென்று ஐந்தாறு பேர் கையில் தயாராகத் தடி-துப்பாக்கிகளுடன் மாடிப்படி ஏறி வந்தார்கள்.

''தம்பி! குறட்டை! ஏ குறட்டை!'' என்று வந்தவர்களில் ஒருவர் ஷங்கங்கைக் குலுக்கி எழுப்பினார்.

பன்முறை மன்றாடிய பிறகும் அவன் எழுந்திருக்கும் வழியாகத் தோன்றாததால் அவர் சட்டென்று எதிரே இருந்த பீங்கான் குழாயில் கொஞ்சம் குளிர்ந்த தண்ணீராகப் பிடித்துவந்து, அவன் முகத்திலே 'சுள்'ளென்று அடித்தார்.

அவர் செய்த வேலை பலித்துவிட்டது. உளறியடித்துக் கொண்டு, ஷங்கங் எழுந்துவிட்டான்.

''என்ன தம்பி! ஒண்ணும் தெரியாததுபோலப் பாசாங்கு செய்கிறாய்? மாஸ்டர் எங்கே?'' என்று அதட்டினார் வந்த மனிதர்.

இதற்குள் வேறு விளக்குகளும் எரியத் தொடங்கின. கூசிய கண்களைச் சுருக்கிக்கொண்டு ஷங்கங் அங்கிருந்தவர்களைப் பார்த்தான். அவர்கள் எல்லாரும் யார் என்று தெரிந்துவிட்டது. இன்ஸ்பெக்டர் துரைசிங்கமும் இன்னும் நாலைந்து போலீஸ்காரர்களும் அவனைச் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் அவர்களையெல்லாம் அங்கே கண்டதும் அவனுக்கு ''பே பே பே பே'' என்று வாய் குளறத் தொடங்கியது. பேந்தப் பேந்த விழித்தான்.

''எங்கே, மாஸ்டர் சீனன்?''

அங்கே...தானே...ப...பப...ப...'' தந்தி யடித்தது உதடு.

''யாருகிட்டே தம்பீ, இந்த வேலை யெல்லாம்? மரியாதையாக உண்மையைக் கக்கிவிடு. இல்லே. முட்டி நொறுங்கிப் போகும். ஆமாம்!'' என்று அவர் அவனை மீண்டும் அதட்டினார்.

பாவம்! ஷங்கங் ஒன்றும் புரியாமல் விழித்தான். சீனனைக் காணவில்லை என்பது ஒரு புறமும் இன்ஸ்பெக்டரின் மிரட்டல் மறுபுறமும் அவனைக் கலங்க வைத்தன.

'ஸார்! எனக்கு ஒண்ணும் தெரியாது, ஸார்! நான் அப்போ படுத்தவன்தான், ஸார்! அப்புறம் என்ன நடந்தது என்று ஒன்றுமே தெரியாது, ஸார்!' என்று சொல்ல விரும்பினான். ஆனால் வார்த்தைகள் வந்தால்தானே?

இன்ஸ்பெக்டரோடு வந்த போலீஸ்காரர்கள் இதற்குள் மூலைக்கு ஒருவராக மாடியை ஆராய்ந்துகொண்டிருந்தார்கள்.

"என்ன தம்பீ, கேட்கிறேன். முழிக்கிறியே!" என்று துரைசிங்கம் ஷங்கங்கின் கையைப் பிடித்துக்கொண்டு கைத்தடியால் அவன் முட்டியில் ஒன்று மாதிரிக்காகப் போட்டார்.

"ஐயோ!" என்று தாங்கமுடியாமல் கத்தினான் ஷங்கங்.

"உம்..சொல்லு.."

"எனக்குத் தெரியாது, ஸார்."

"டேய், பொய்யா சொல்றே? உனக்குத் தெரியாமெயா இங்கே இவ்வளவும் நடந்திருக்கும்? மரத்தையே வெட்டி வழியிலே போட்டிருக்காங்க. அதுவரையிலேயா நீ தூங்கிக்கிட்டு இருந்திருக்கே! பொய் சொன்னியோ...."

இன்ஸ்பெக்டர் தம் வார்த்தையை முடிப்பதற்குள் டெலிபோன் அறையின் உள்ளிருந்து ஒரு ஜவானின் குரல் கேட்டது. "இதோ! மயக்கமா அடிச்சு விழுந்து கிடக்குது. ஸார்!" என்றான் அந்த அறையைச் சோதனை போடச் சென்ற போலீஸ்காரன்.

எல்லாரும் ஓடிப்போய்ப் பார்த்தார்கள். சீனன் அங்கே ஒரு மூலையில் பிரக்ஞையின்றிச் சுருண்டு விழுந்து கிடந்தான். பேச்சு மூச்சு இல்லை; நினைவு, விழிப்பு இல்லை. துளிக் காயங்கூடப் படவில்லை. ஏதோ மயக்கமாக விழுந்துவிட்டான் என்று மட்டும் தெரிந்தது. எதனால் விழுந்தான்? என்ன நடந்திருக்கும் என்பது ஒன்றும் தெரியவில்லை. உடனே டாக்டருக்குப் போன் செய்தார்கள். டாக்டர் வருவதற்குள் முதல் உதவி சிகிச்சை செய்ய முடியுமா என்று பார்க்க அவனைத் தூக்கி வந்து அந்தப் பெரிய மஞ்சத்தில் கிடத்தினார்கள். ஷங்கங், சீனன் இருந்த நிலையைப் பார்த்து விட்டு, 'ஹோ-ஹோ!' என்று பயந்துபோய் அழுதான்.

"டேய்! சும்மா இரு. கலாட்டா செய்தாயோ, புடிச்சு வெளியிலே தள்ளச் சொல்லிவிடுவேன். துணைக்கு ஆள் வேணுமானா உன்னைப் போன்ற ஆளைத்தான் கொண்டுவந்து வைத்துக்கொள்ளணும்! தூங்கு மூஞ்சி" என்றார் இன்ஸ்பெக்டர்.

"மாடி அறையில் எல்லாம் வைத்தது வைத்தபடியேதான் இருக்குது" என்று வாட்சுமேன் கூறினான்.

"ஆமாம்; நீ இதுவரையில் எங்கே இருந்தே!" என்றார் இன்ஸ்பெக்டர் அவனைப் பார்த்து.

“கீழேதான் டியூட்டி பார்த்துக்கிட் டிருந்தேன். அப்புறம் என்ன ஆச்சோ தெரியல்லே. அப்படியே படுத்துத் தூங்கிட்டேன். நீங்க வந்தப்போதான் முழிச்சுக்கிட்டேன்!” என்றான் வாட்சுமேன்.

“சரியான ஆளுங்களாக வந்து சேர்ந்தீங்க, அப்பா! ஒரே தூங்கு மூஞ்சிப் பட்டாளமாக! இதுதான் நீ பங்களா காவல் பாக்கற லட்சணமா?” என்றார் துரைசிங்கம்.

வாட்சுமேன் பொன்னுரங்கம் பதில் சொல்ல வழியில்லாமல் மலங்க, மலங்க விழித்தான். இத்தனை நாளாக அவன் இந்த மாதிரி ஒரு நாளும் ஏமாந்துபோய்த் தூங்கியதில்லை. இன்று இருந்த அஜாக்கிரதையால் தன் வேலைக்கே மோசம் வந்துவிடுமோ என்றும் அவனுக்குப் பயமாக இருந்தது.

மரம் விழுந்து கிடந்ததால் காரைச் சாலையிலேயே விட்டு விட்டு டாக்டர் நடந்து வந்தார். கைச் சுருக்காக அவர் சீனனுக்கு முதலில் செய்ய வேண்டிய வைத்திய உபசாரங்களைச் செய்தார். விடியற்காலை நாலு மணிவரையிலும் அவனுக்கு மூர்ச்சை தெளியவேயில்லை. அதற்குமேல்தான் அவன் உடலில் ஒரு சலனம் உண்டாயிற்று. ஷங்கங் சீனனுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். அவன் எத்தனையோ தைரியசாலிதான். ஆனால் தெருவில் பிளாட்பாரத்தில் கிடந்த வரையில்தான் அந்தத் துணிச்சல் எல்லாம் இருந்தது. இப்போது, எதற்கெடுத்தாலும்



பயந்தான் அவனுக்கு முன்னல் வந்து நின்றது. பணம் வந்துவிட்டால் பயமும் எங்கே என்று காத்திருக்குமோ, என்னவோ!

அயர்ந்து தூங்கி விழித்தவன்போல் சீனன் கண்களை மெல்லத் திறந்து பார்த்தான். தலை ஏதோ கனமாக இருப்பது போல் இருந்தது. விளக்குகளின் பிரகாசம் அவன் கண்களைக் கூச வைத்தது. எங்கே இருக்கிறேம் என்ற நினைவின்றி அவன் தன்னைச்சுற்றி ஆவலுடன் நிற்கும் போலீஸ்காரர்களையும் டாக்டரையும் பார்த்தான். ஷங்கங் கண்களில் கண்ணீர் வடிய, ஆனந்தம் தாங்காமல், "சீனு! சீனு!" என்று முணுமுணுத்தான்.

டாக்டர் கண்டிப்பாக எச்சரித்திருந்தார், ஒருவரும் அநாவசியமாகச் சீனனிடம் பேச்சுக் கொடுக்கப்படாது என்று.

அதனுல் ஒருவரும் பேசவில்லை. சீனன் சற்றுப் பொறுத்துக் கட்டிலில் எதையோ பார்க்க முயன்ருன். அவன் பார்க்க விரும்பிய பொருள் அவன் கண்ணில் படவில்லை. திடீரென்று தன் பலவீனத்தையும் மறந்து தலையணைக்குக் கீழே, பக்கத்தில், எங்கும் கையை விட்டுத் துழாவினுன். வர வர அவன் முகத்தில் பீதி ஒன்று பரவத் தொடங்கியது.

டாக்டர் மட்டும் மெல்ல, "தம்பி, என்ன தேடுகிருய்?" என்று பக்குவமாக விசாரித்தார்.

"என் சு- சூ பெட்டி! தோல் பெட்டி! எங்கே அது?" என்று கேட்டான் அவன்.

எல்லாரும் தேடினுர்கள். எங்கும் தேடினுர்கள் - ஓரிடம் பாக்கியின்றித் தேடினுர்கள்: அது கிடைக்கவே யில்லை. படுக்கை, கட்டில், டெலிபோன் அறை எங்கும் ஆராய்ந்து பார்த்துவிட்டார்கள். அது பறந்தோடிப் போனதுபோல் மறைந்துவிட்டது.

இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் சந்தேகக் கண்களோடு காவற்காரனையும், பாரா போட்டிருந்த போலீஸ்காரனையும் பார்த்தார். அவர்கள் இருவரையும் அறியாமல் ஒன்றும் நடந்திருக்காது என்று அவருக்குத் தோன்றியது.

## 13
# மீண்டும் டெலிபோன்

சீனன் தவிக்கிற தவிப்பைப் பார்த்து ஒருவருக்கும் தைரியமாகப் பேசத் தோன்றவில்லை. அவனுக்கு வேண்டுமானால் தன்னுடைய உயர்ந்த அந்தஸ்து ஞாபகத்தில் இல்லையே தவிர, மற்றவர்கள் எல்லாரும் அதே நினைவுடன்தான் இருந்தார்கள். பெரிய கோடீசுவரன் அவன் இப்போது. பொதியமலைச் சாரலிலும் உதகையிலும் அவன் பங்குக்கு இப்பொழுது எத்தனையோ தேயிலை, காபித் தோட்டங்கள் இருந்தன. முக்கியமான சுகவாச ஸ்தலங்களில் அவனுக்குப் பங்களாக்கள் இருந்தன.

பாங்கியிலே லட்சம் லட்சமாகப் பணமும் ஏராளமான பங்குகளும் இருந்தன. இது தவிர, சிங்கப்பூரிலும் பல சுரங்கங்களிலும் ரப்பர்த் தோட்டங்களிலும் அவன் முதல் பெரிய அளவில் இருந்தது. ஆம்; அவ்வளவும் கிழவர் வைத்திருந்த சொத்துத்தான். சீனனுக்கு அதன் அளவைக் கூட்டிப் பார்க்கக்கூடத் தெரியாது. இன்ஸ்பெக்டர் துரைசிங்கத்துக்குக் கிழவரைப் பற்றித் தெரியும், ஒரு சுதேச ராஜா மாதிரி அவர். நினைத்தால் ஓர் ஊரையே அவரால் விலைக்கு வாங்க முடியும் என்று அவர் கேள்விப்பட்டிருக்கிறார். அவருடைய சொத்துக்கு இந்தப் பையன்தான் இன்று புதிய எஜமான் என்றால் அவன் தயவு அவருக்கு வேண்டாமா? அவனுக்கு எதிர்த்தாற்போல் இல்லாத அட்டகாசமெல்லாம் செய்தார். அங்கே ஓடினார்; இங்கே ஓடினார். "எங்கே?" என்று கத்தினார். "கொண்டு வா!" என்று உறுமினார். இல்லாத ஆர்ப்பாட்டம் எல்லாம் செய்தார்.

"எனக்கு இந்த வாட்சுமேன் பேரில் நம்பிக்கை யில்லை. உத்தரவு கொடுங்க, தம்பி! அவனைப் பிடிச்சு ரிமாண்டிலே அடச்சு வைக்கிறேன்" என்றார்.

வாட்சுமேன் வெடவெடவென்று குளிரில் நடுங்குபவன் போல் நடுங்கிக்கொண் டிருந்தான். சீனன் ஒன்றையும் மனத்தில் வாங்கிக்கொள்ளாமல் தயங்குவதைப் பார்த்து, "டேய், டு நாட் எயிட்! அந்த ஆளுக்கு நம்ப காப்பை மாட்டி வை!" என்றார். பிறகு, தர்ட்டி தர்ட்டி என்ற ஜவானைப் பார்த்து "யாரு மேன், இந்த மாடியிலே பாரா இருந்தது?" என்று அதட்டினார்.

"நான் இல்லீங்க!" என்று உளறினான் தர்ட்டி தர்ட்டி.

"பின்னே நீயில்லாட்டி வேறு யாரு?"

"இவன்தாங்க! ஹன்டிரட் அண்டு லெவன்!" என்று ஒருவனைச் சுட்டிக் காட்டினான்.

"டேய்! டேய்! என்ன அப்பாய், டபாய்க்கிறே! நானு இருந்தேன்?.. இல்லீங்க ஸார்! இவனும் இருந்தான், ஸார்!"

"நான்தான் உனக்கு முந்தியே தூங்கிட்டேனேடா!" என்று தர்ட்டி தர்ட்டி முந்திக்கொண்டு சமாளிக்கப் பார்த்தான்.

"நானுந்தான் உன்னுேடேயே தூங்கிட்டேனே, அப்பாய்!" என்முன் நூற்றுப் பதினென்று.

'இல்லே, நீ முளிச்சிக்கிட்டு இருந்தே?"

"இல்லே நீதான்?"

"இல்லவே இல்லே, நீயேதான்!"

"ஷட்டப்! டேய், டூ நாட் எயிட்! இரண்டு பேருக்கும் காப்புச் சங்கிலியைச் சேர்த்து மாட்டு. இங்கே வந்து போட்டி போட்டுக்கிட்டுத் தூங்கவா உங்களேப் பாரா போட்டது? ஹைங்?" என்று இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் துள்ளிக் குதித்தார்.

துரைசிங்கத்தின் உத்தரவுப்படியே வாட்சுமேன் பொன்னு ரங்கமும், போலீஸ் ஜவான்கள் இருவரும் காவல் போடப் பட்டார்கள். தர்ட்டி தர்ட்டியும் ஹன்டிரடண்ட் லெவனும், 'உன்னுலே நான் கெட்டேன். என்னுலே நீ கெட்டாய்' என்கிற மாதிரி விழித்துக்கொண்டு நின்முர்கள்.

அந்தச் சமயத்தில் டெலிபோன் மணி கிணு கிணுத்தது. சீனன் ஷங்கங்கைப் பார்த்தான். அந்தக் குறிப்பை உணர்ந்து கொண்டு ஷங்கங் எழுந்து சென்று, டெலிபோன் ரிஸீவரைக் கையில் எடுத்தான்.

"ஹலோ, யாரு சீனனு?" என்ற கேள்வி வந்தது.

"இல்லே. ஷங்கங்! அவன் கூட்டாளி."

"பேப்பர் விற்கிற பயலா?"

ஷங்கங்கின் முகம் இதைக் கேட்டதும் குன்றிப் போனது.

"என்னடா, கேட்கிறேன்; பதிலேக் காணலே?"

"ம்—"

"ஷங்கங்தானேடா?"

"ஆமாம்."

"பின்னெ முளிக்கிறியே! பேப்பர் விற்கிறவன்னு சொன்னு உன் கௌரவம் போயிட்டுதோ?"

ஷங்கங் இதற்குப் பதில் சொல்லவில்லே. பேசிய குரல் எங்கோ கேட்ட குரல் மாதிரி இருந்தது. அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லே.

"போலீஸ் புலிகள் எல்லாம் இருக்குதா, போயிட்டுதாடா?"

"ம்..வந்து..ஆமாம்..இல்லே.." என்று ஷங்கங் மென்று விழுங்கினன்.

"ம்..மென்ஞ முழுங்கறே? உனக்கும் சரியான வழி வைக்க வேண்டியதுதான்! மரியாதையா இருந்தே-பொழைச்சே! இல்லே, அந்தப் பய தைரியத்திலே கொஞ்சம் துளுத்துப் போனே, தலே போயிடும்! என்ன?"

"நான் ஒண்ணும்.."

"இன்னிக்கே சீனனே விட்டுட்டு நீ உன் பேப்பர் விற்கிற வேலேக்குப் போயிடணும்..என்ன?"

"ம்...சரி.."

"என்னடா முழுங்கறே? போயிடுவியா?"

"போயிடறேன்.."

"எப்ப?"

"இன்னிக்கேதானே?"

"இன்னிக்கு என்னடா இன்னிக்கு! இப்பவே, இந்த நிமிஷமே. சொல்லிவிட்டுத்தான் போவியோ, சொல்லாமெத் தான் போவியோ, ஓடிடணும்."

"........"

"டேய்!"

"ம்—"

"காதிலே விழுந்துதா?"

"விழுந்தது."

"போறியா?"

"போயிடறேன்."

"எப்ப?"

"இப்பவே-"

"ஏதாவது வேற மாதிரியா வாயைத் திறந்தீன்ஞ உன்னே என்ஞ செய்யறது?"

"அதெல்லாம் ஒன்றும் சொல்ல மாட்டேன்."

"நீயாப் போறதுமாதிரிப் போவியா?"

"போறேன்—"

"ஆமா-போயிடணும். மரியாதையாப் போயிட்டீன்ஞ உனக்கும் ஏதாவது சில்லறை கிடைக்கும். இல்லியோ, தலேயே போயிடும்."

"சரி."

"என் குரல் தெரியுதா?"

"ம்...தெரியுது..ஆனு தெரியல்லே!"

"தெரியுதா, தெரியல்லியா?"

"சரியாகத் தெரியல்லே!"

"அதான் கேட்டேன்!"—அடுத்த கணம் அந்தப் பக்கத்து ரிஸீவர் டக்கென்ற ஓசையோடு நின்றது. ஷங்கங் விளக்கெண் ணெய் குடித்ததுபோல் முகத்தைக் கடுத்துக்கொண்டு சீனனிடம் வந்தான். அவன் காதோடு சுருக்கமாக டெலிபோனில் நடந்த உரையாடலைக் கூறினுன். சிறிது நேரம் ஒன்றும் சொல்லத் தெரியாமல் யோசித்த சீனன் ஒரு முடிவுக்கு வந்தவன் போல, "டேய், நாம்ப இப்படியே பயந்தா எதுவும் நடக்காது. எதுக்கும் துணிஞ்சுதான் நடக்கணும். நீ இப்பவே போவதுபோல் போயிடு. நாம்ப சு-சூ ஹோட்டல்லே இரவு பத்து மணிக்குச் சந்திப்போம். வேண்டிய பணத்தை எடுத்துக்கொள்...ஆனுல் உடனேயே, சந்தேகப்படும்படி போகாதே..இவர்கள் எல்லாரும் போன பிறகு போ!" என்ருன்.

அவன் சொல்லி முடிப்பதற்குள் மீண்டும் டெலிபோன் மணி ஒலித்தது. இப்பொழுது யார் போய்க் கேட்பது என்று தெரிய வில்லை. "சும்மா நீயே போய்க் கேள்!" என்ருன் சீனன்.

டெலிபோன் என்ருலே இப்பொழுது அவர்களுக்குத் திகி லாகத்தான் இருந்தது. அதில் எந்தச் சமயம் யார் கூப்பிட்டு, யாரை மிரட்டுவார்களோ என்று பயப்பட்டார்கள். ஆனுல் இந்தத் தடவை கூப்பிட்டவர் பாரிஸ்டர்தான். பங்களாவில் இரவில் நடந்ததையெல்லாம் சுருக்கமாகக் கேட்டுக் கொண்டதும் அவர், "சரி, உடனே நீங்கள் எல்லாரும் இங்கே புறப்பட்டு வாருங்கள். நான் வர முடியவில்லை. கலந்து பேசின பிறகு ஒரு முடிவுக்கு வரலாம்" என்ருர்.

சீனனும் ஷங்கங்கும் புறப்படுவதைப் பார்த்து இன்ஸ்பெக் டர் துரைசிங்கம் தாமும் வருவதாகச் சொன்னுர்.

# 14

## மூளை குழம்பியது

அடுத்த அரை மணி நேரத்தில் அனைவரும் பாரிஸ்டர் வேதாசலத்தின் அறையில் காணப்பட்டார்கள். அங்கே அவர்களுக்கு முன்னதாகவே அந்தக் கிழவரின் தம்பி மகனான கிங்கிங் உட்கார்ந்திருந்தான். இவர்களைக் கண்டதும் அவன் எழுந்து வராந்தா ஜன்னலருகில் போய் நின்றுகொண்டான். பாரிஸ்டர் ஒவ்வொன்றாக விசாரித்துக்கொண்டே வந்தார். ஷங்கங்கும் சீனனும் மாறி மாறிப் பதில் சொல்லிக்கொண்டே வந்தார்கள். ஆனால் சு-சூ பெட்டியைப்பற்றி மட்டும் அவன் குறிப்பிடவேயில்லை. வாய் தவறிச் சொல்ல இருந்த சமயத்தில், நல்ல வேளையாக அந்தக் கிங்கிங் நிற்பது நினைவுக்கு வந்துவிட்டது. அவன் தங்கள் பேச்சைக் கவனிக்காததுபோல் இருந்தாலும், தமிழ் அவனுக்குப் புரியாததுபோல இருந்தாலும், சீனனுக்கு நம்பிக்கையில்லை.



அவனைத் திரும்பப் பார்த்தான். அவன் திரும்பிப் பார்த்த அதே சமயத்தில் கிங்கிங்கும் அவனைப் பார்த்ததுதான் ஆச்சரியமாக இருந்தது. இருவர் கண்களும் விசித்திரமாகச் சந்தித்துக் கொண்டன. புலியின் கண்களும் பசுவின் கண்களும்போல அவை ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டன. அந்தப் பார்வையிலே எல்லாம் நிறைந்திருந்தன. முன்பு துறைமுகத்திலே கண்ட காட்சி சீனனுக்கு நினைவுக்கு வந்தது. கிழவரைக் கழுத்தை நெறித்து, கல்முட்டுக்குள்ளே உருட்டித் தள்ளியவன் இவனாகத்தான் இருக்க வேண்டும் என்பதில் அவனுக்குச் சந்தேகமே இப்போது உண்டாகவில்லை.

இவ்வளவு நாள் என்னவோ அந்தச் சந்தேகம் தீராமலே இருந்தது. ஆனால் இன்று திடீரென்று அவனைப் பக்கவாட்டில் பார்த்தபோது, அவன் ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்ற காட்சி, அந்தக் கிழவருடைய கழுத்தைப் பிடித்த மாதிரியே இருந்தது. அன்று நடந்த சம்பவங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவன் நினைவிலே திரைப்படம்போல் ஓடத் தொடங்கின. அந்தச் சண்டை இந்தச் சு-சூ பெட்டிக்காகவே நடந்திருக்க வேண்டும் என்று அவனுக்குத் தீர்மானமாகத் தோன்றியது. பெட்டி அவன் கையில் கிடைக்காதது; கிழவர் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது; அவன் போய் அவருக்கு உதவி செய்தது; இருவரும் சைனீஸ் ரெஸ்டாரண்டுக்கு வந்தது; இரவில் உயில் எழுதியது; அதற்குப் பிறகு இந்தக் கிங்கிங்கை பாரிஸ்டரோடு ஹைகோர்ட்டில் பார்த்தது; அவன் இவர்களையே வேட்டை நாய்போல் சுற்றிக் கொண்டு திரிவது; இரவில் டெலிபோன் பேசியபோது பயங்கர உருவத்தில் தோன்றியது; அவன் விழித்த போது சு-சூ பெட்டி காணமல் போனது—எல்லாவற்றிற்கும் ஒரு நெருங்கிய சம்பந்தமும் சாத்தியமும் இருப்பதுபோல் அவனுக்கு வெகு தெளிவாகப் பட்டது. வாயை விட்டே, 'இவன்தான் இவனைப் பிடியுங்கள்!' என்று கத்தலாமா என்று அவன் மனம் படபடத்தது.



சீனனுடைய மனப்போக்கைப் பாரிஸ்டர் ஒருவாறு உணர்ந்து கொண்டு விட்டார். எதுவும் விபரீதமாகப் போவதற்கு முன், "தம்பி! இப்படிக் கொஞ்சம் வாங்க!" என்று அவனை மட்டும் தனியே அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றார். அப்போது அந்தக் கிங்கிங் விழித்து முறைத்துப் பார்த்த பார்வை!

சீனனுடைய படபடப்பைக் கண்ட பாரிஸ்டர், "தம்பி! பதறாமல் இருங்க. எல்லாம் நான் இருக்கிற வரையில் ஒன்றும் பயமில்லை!" என்றார்.

"இல்லை பாரிஸ்டர் ஸார்! இவன்தான் எல்லாவற்றுக்கும் காரணம். முன்பு கிழவரைத் தாக்கியவன் இவன்தான்! நேற்று என் மென்னியைப் பிடித்து இறுக்கியவனும் இவனாகத்தான் இருக்க வேண்டும்! சந்தேகமில்லை. எங்கே வேண்டுமானாலும் நான் சொல்லத் தயார்!' என்றான் சீனன்.

"நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன், தம்பி! ஆனால் வேறு யார் இதை ஒப்புக்கொள்வார்கள்? சாட்சி ஏது?"

"சாட்சியா? சாட்சி எதற்கு? நான்தான் சொல்கிறேனே?"

"நீங்கள் வேண்டும் என்று விரோதத்தினால் சொல்கிறீர்கள்!"

"எனக்கு என்ன அவன் பேரில் விரோதம்?"

"அவனுக்குச் சேர வேண்டிய சொத்து உங்களிடம் இருக்கிறது. உங்களுக்கு அவன் போட்டியாக வருகிறான் என்று தெரியும். அதனால்தான் உங்களுக்கு அவனைக் கண்டால் ஆகவில்லை என்று யாரும் சொல்லமாட்டார்களா?"

சீனன் இதற்குப் பேசாமல் இருந்தான். "சரி; ஷங்கர் இருக்கிறானே, சாட்சி. அவனைக் கேட்போமே!" என்றான் பிறகு.

"அவன் பேச்சையும் யாரும் நம்பமாட்டார்கள். அவன் உங்கள் நண்பன். உங்களுக்காகவே பொய் சொல்லுகிறான் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்?"

"அப்ப இதெல்லாம் நடந்தது பொய்யா? இவன் வேறு எதற்காக எங்களையே சுற்றிக்கொண்டு திரிகிறான்? இப்பொழுது இவனைச் சோதனை போட்டால் போதும். இவனிடம் என்னுடைய சு-சூ பெட்டி நிச்சயமாக அகப்பட்டுவிடும்.."

பாரிஸ்டர் சிரித்தார்.

"நடந்ததெல்லாம் உண்மையாக இருக்கலாம், தம்பி! ஆனால் பிறர் இதை நம்ப வேண்டாமா! அதையும் தவிர, நேற்று இவன் பறங்கிமலைப் பங்களாவுக்கு வரவேயில்லை. எனக்குத் தெரியும். அப்படியே வந்திருந்தாலும் அவனுக்கும் அந்தப் பெட்டி காணாமல் போனதற்கும் சம்பந்தமே இல்லை என்பதும் எனக்குத் தெரியும்.

எப்படி என்கிறீர்களா? நேற்று இரவு முழுவதும், அதாவது இரவு பதினொரு மணியிலிருந்து அவன் இங்கேதான் சாப்பிட்டான். இங்கேயேதான் படுத்துக்கொண்டும் தூங்கினான். நான் கூட முதலில் பறங்கிமலைப் பங்களாவிலிருந்து போன் வந்ததும் சந்தேகப்பட்டேன். ஆனால் சற்றைக்கெல்லாம் இவனே இங்கு வந்துவிட்டான். அதற்குப் பிறகுதான் சந்தேகம் விலகியது" என்றார்.

சீனனுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. ஒரு சமயம் இவரும் அவனோடு சேர்ந்துகொண்டு சதி செய்கிறாரோ என்று முதலில் அவனுக்கு ஒரு சந்தேகம் தட்டியது. ஆனால் மறு கணம், 'சேசே! அப்படியெல்லாம் இருந்தால் என்னை இவர் முதலிலேயே மோசம் செய்திருக்கலாமே!' என்று அந்தச் சந்தேகம் விலகிவிட்டது. மேலும் பாரிஸ்டர் முகத்தைப் பார்த்தாலே இந்தப் பழியெல்லாம் வீண் அபாண்டம் என்பது தெரிந்துவிடும். தெரியாமலா 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்கிறார்கள்! ஆனால் இரவு அந்தக் கிங்கிங்கை அவன் கண் கூடாகப் பார்த்திருக்கிறானே! பின்னால் ஒரு டாக்ஸியில் துரத்திக்கொண்டு வந்திருக்கிறானே! அது பொய்யா, பாரிஸ்டர் சொல்வது பொய்யா?

அவன்தான் ஒரு சமயம் வேறு யாரையோ பார்த்துவிட்டு, கிங்கிங் என்று எண்ணிவிட்டானோ? அப்படியானால் ஒரு வண்டி, பங்களாவின் மதிலுக்குப் பக்கத்தில் நின்றதே, அது ஏது? ஓர் ஆள் சாக்கடைக் குழாயைப் பிடித்துக்கொண்டு ஏறினானே, அவன் யார்? பாதையில் மரம் வெட்டிக் கிடந்ததே, அது எதனால்? டெலிபோனில் யாரோ மிரட்டினானே, அவன் எங்கிருந்து மிரட்டினான்?

சீனனுக்கு மூளையே குழம்பிவிடும்போல் இருந்தது.

பாரிஸ்டர், இன்ஸ்பெக்டர் துரைசிங்கத்துக்கு வேண்டிய யோசனைகளைச் சொல்ல வெளியில் வந்தார். சீனனும் வெளியில் வந்தான். "எப்படியும் இந்தத் திருட்டை நான் கண்டு பிடிக்காமல் போகமாட்டேன்" என்று வீரம் பேசிவிட்டு விடைபெற்றுக்கொண்டார் துரைசிங்கம்.

## 15

## மண்டை ஓடு

அன்று இரவு சீனனும் ஷங்கங்கும் முன்பே பேசிக்கொண்டபடி தனியே பிரிந்துவிட்டார்கள். சீனனுக்குச் சைனீஸ் ஹோட்டலுக்குத் தனியாகச் செல்லப் பயமாகத்தான் இருந்தது. ஆயினும் அவன் தைரியத்தோடு தனக்கு நேரும் எதிர்ப்புக்களைச் சமாளிப்பது என்று துணிந்துவிட்டான். துணிந்தவன் வாழ முடியும். பயந்தவன் வாழ்வது வாழ்க்கையேயில்லை என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. அன்று முழுவதும் அவன் தனியாகவே பல இடங்களுக்குப் போனான்: பல காரியங்களைச் செய்தான். அவசரமாக இருந்தால் பாரிஸ்டரிடம் போகலாம் என்கிற எண்ணத்தோடு அவன் சாப்பாட்டையெல்லாம் வெளியில் முடித்துக்கொண்டு, தன் காரில் ஹோட்டலுக்குத் திரும்பி வந்தான்.

ஹோட்டலில் மாறுதல் எதுவும் இல்லை. எல்லா மரியாதைகளும் வழக்கம்போலத்தான் நடைபெற்றன. கிங்கிங் இருந்த எதிர் அறை பூட்டப்பட்டுக் கிடந்தது.

"சாபர்! நீ எல்லாவற்றிற்கும் நம் அறையின் வாசலில் படுத்திரு! கூப்பிட்டால் ஏனென்று வந்து கேட்கலாம்!" என்று எச்சரித்துவிட்டுச் சீனன் உள்ளே நுழைந்தான்.

அங்கும் எல்லாம் வைத்தது வைத்தபடியேதான் இருந்தன. அவன் இல்லாதபோது யாரும் வந்து திருட்டுத்தனமாக ஆராய்ந்திருப்பார்களோ என்று அவன் கவனமாகப் பார்த்தான். ஒன்றும் நேர்ந்ததாகத் தெரியவில்லை.

கதவுகளை இறுகத் தாழிட்டுக்கொண்டு, கிழவரின் கைத்துப்பாக்கியை எடுத்துத் தற்காப்புக்காக வைத்துக்கொள்ள எண்ணிப் பீரோவைப் திறந்தான்.

அப்படியே அவன் மூச்சு நின்றுவிடும்போல் இருந்தது. முன்பு கிழவர் மூர்ச்சையாகி விழுந்ததற்குக் காரணமாக இருந்த மண்டையோடு அங்கே மேலே காணப்பட்டது.

சிலைபோல் அதையே பார்த்துக்கொண்டு நின்ற சீனன், அதற்குமேல் மிரளவில்லை. நடப்பது நடக்கட்டும் என்கிற துணிவோடு டிராயரைத் திறந்து கைத்துப்பாக்கியை எடுத்து வைத்துக்கொண்டான்.

அந்த மண்டை ஓட்டை என்ன செய்வது? அது எப்படி இங்கே யாரும் இல்லாதபோது வந்தது? சீனன் அதுபற்றியே யோசித்துக்கொண்டு நின்றான்.



அந்த அறையில் அதற்குமேல் தனியாக நிற்கவே சீனனுக்கு யோசனையாக இருந்தது. என்னதான் துணிச்சலோடு இருந்தாலும் தனியாக இருப்பதென்றால் யோசனையாகத்தானே இருக்கும்? யார், எதற்காக இப்படித் தன் விஷயங்களில் தலையிடுகிறார்கள் என்பது தெரிந்தால் தேவலைபோல் இருந்தது அவனுக்கு. அது தெரிந்து விட்டால் அதற்குத் தகுந்ததுபோல எச்சரிக்கையாக இருக்கலாம். அல்லது அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து, 'இனி என் வம்புக்கு வராதே' என்று சொல்லிச் சரிப்படுத்தி விடலாம். இரண்டும் இல்லாதது அவனுக்குப் பெரிய தொந்தரவாக இருந்தது.

பீரோவிலிருந்து எடுத்த கைத்துப்பாக்கியை அவன் ஒரு முறை கையில் எடுத்து நன்றாகக் கவனித்துப் பார்த்தான். அது சிறியதாக இருந்தாலும் நல்ல கனமாக இருந்தது. அதற்குமுன் அவன் அதைச் சரிவரப் பார்த்ததில்லை. அதை எப்படி உபயோகிப்பது என்பதும் அவனுக்குத் தெரியாது. அதனுள் ரவைகள் இருக்கின்றனவா, இல்லாவிட்டால் கெட்டிக்க வேண்டுமா என்பதும் தெரியாது. ஆனால் அவன் கேப் வைத்துச் சுடும் தீபாவளித் துப்பாக்கியைப் பார்த்திருக்கிறான். அதைச் சுட்டுப் பார்த்ததில்லை என்றாலும் எப்படி அதைச் சுடுவது என்று அவனுக்குத் தெரியும். அதேபோல இதிலும் கீழே ஒரு நாக்கு நீட்டிக்கொண்டு இருந்தது. அதைப் பிடித்து இழுக்க வேண்டும்போல் இருக்கிறது என்று தீர்மானித்துக்கொண்டான். ஸினிமாக்களில்கூட அப்படித்தான் துப்பாக்கியால் சுட்டார்கள். இதே மாதிரிதான் ஸினிமாவில் காட்டும் துப்பாக்கிகளும் இருந்தன. எனவே அதைத் தன்னுடைய கால் சட்டைப்பையினுள் பத்திரமாக வைத்துக் கொண்டான்.

இரண்டு நிமிஷங்கள்தான் அவனுக்குத் தயக்கமும் யோசனையுமாக இருந்தன. இந்தச் சமயத்தில் தைரியமாக இருப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. 'பயப்படுபவன் நிமிஷத்துக்கு ஒரு தடவை பயந்து பயந்தே சாகிறான். ஆனால் தைரியசாலி ஒரு முறைதான் சாகிறான்' என்று சொல்வார்கள். சீனனும் அந்த முடிவுக்குத்தான் வந்தான். அவன் ஒருவருக்குத் தீங்கு நினைக்கவில்லை. ஒருவருடைய பொருளை அவன் திருட்டுத்தனமாக அபகரிக்கவில்லை. பொய் சொல்லி, மோசம் செய்து அவன் இந்த நிலைமைக்கு வரவில்லை. அப்படியிருக்கும்போது அவன் எதற்காகப் பயப்பட வேண்டும்? பயப்படுவது சுத்தப் பைத்தியக்காரத்தனம் என்று அவனுக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. 'அவசியமானால் தற்காப்புக்காக இந்தத் துப்பாக்கியை உபயோகிக்கவும் தயங்கக் கூடாது' என்று அவன் முடிவு செய்துவிட்டான்.

அப்படி முடிவுக்கு வந்த மறு கணமே பீரோவைச் சாத்தி மூடிவிட்டு, படுக்கப் போகலாம் என்று எண்ணினான் மீண்டும் அந்த மண்டை ஓடு நினைவு வந்தது. 'அதை என்ன செய்வது? அதை எடுத்து வெளியில் விட்டெறிந்துவிட்டால் என்ன?' என்று தோன்றியது. அது இங்கே இருந்தால், அதன் நினைவினாலேயே தூக்கம் வராதுபோல் இருந்தது. அதனால் வருவது வரட்டும் என்று துணிந்து அதைக் கையில் எடுத்துக்கொண்டான். அதைத் தூக்கும்போது அவன் கைகள் நடுங்கின. நடுக்கத்தைப் பார்த்தால் பரிதாபமாகத்தான் இருந்திருக்கும். மலேரியா குளிர் ஜுரத்தில் உதறுவதுபோல் அவன் கைகள் நடுங்கின.

எப்படியோ சமாளித்துக்கொண்டு அவன் அதைக் கையிலே தூக்கிவிட்டான். ஜன்னல் வழியாக அதை வெளிப்புறத்திலே விட்டெறிந்து விடலாம் என்று எண்ணினான். ஆனால் அதே சமயத்தில் ஜன்னல் புறத்தில் ஏதோ ஒரு வெளிச்சம் மின்னல் போல் தோன்றி மறைந்தது தெரிந்தது அவனுக்கு. அதைக் கண்டதும் அவனுடைய கலவரம் கொஞ்சம் அதிகமாகியது. கையில் எடுத்ததைப் பழையபடியே வைத்துவிட்டு அவன் ஜன்னல் ஓரமாக வந்து நின்றான். அங்கே தொங்கிய திரையை விலக்கி, யார் வெளிச்சம் அடித்துப் பார்த்திருப்பார்கள் என்று வெளியே பார்த்தான். ஜன்னலுக்கு வெளிப்புறம் ஒன்றும் இல்லை. ஒரே இருட்டு. கீழே தரையிலிருந்து ஜன்னல் முப்பது அடி உயரமாவது இருக்கும்போல் இருந்தது. ஏனென்றால் ஜன்னலுக்கு அருகே மரத்தின் கிளை ஒன்று வளைந்து வந்திருந்தது. அந்தக் கிளை அவன் அறைக்கு நேர்மேலே போயிற்று. கீழே மரத்தின் அடிப்பாகம் இருந்தது. இரண்டொரு கார்கள் இருந்தன. சீனன் எட்டிப் பார்த்தபோது முதலில் ஒன்றும் அந்த இருட்டில் தெரியவில்லை. இருட்டிலிருந்து வெளிச்சத்தை நன்றாகப் பார்க்கலாம். ஆனால் வெளிச்சத்திலிருந்து இருட்டில் நடப்பதைப் பார்க்க முடியுமா?

அதனல் உடனே சீனன் தன்னுடைய அறை விளக்குகளை அணைத்துவிட்டு, மீண்டும் தைரியமாக ஜன்னலருகே போய் நின்று பார்த்தான். இப்போது கீழே நின்றிருந்த கார்கள் புறப்பட்டுப் போய்விட்டன. அந்த மரத்தடிப் பிரதேசமெல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. கீழே யிருந்த அறைகளின் வெளிச்சம் ஆங்காங்கே கோடுகள் போலத் தெரிந்தன. அதைத் தவிர அங்கே ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. 'பின்னே, வெளிச்சம் அடித்து யார் பார்த்திருப்பார்கள்? ஒரு சமயம் மோட்டாரின் வெளிச்சம் அடித்ததைக் கண்டு ஏமாந்திருப்பேனே?' என்று அவன் கால்மணி நேரம்போல் அங்கே நின்றுகொண் டிருந்தான்.

இதுதான் சரியான சமயமாகப் பட்டது. அவன் வேகமாக அந்த ஓட்டை எடுத்துவந்து ஜன்னல் வழியே கீழே போடப் போனன். கீழே யார் தலையிலாவது போய் விழப் போகிறது என்று பார்த்துவிட்டுப் போட எண்ணிச் சிறிது தயங்கினன். ஒருவரையும் காணுததால் தைரியத்தோடு அதைத் தூக்கிக் கீழே போட்டான்.

ஆனல், என்ன ஆச்சரியம்! அந்த மண்டை ஓடு கீழே விழவே யில்லை. கொஞ்ச தூரத்திலேயே அது நின்றுவிட்டது. அவன் எடுத்துக் கொடுத்தது போலவும் அதை யாரோ இரு கைகளாலும் குந்திஞற்போல வாங்கிக்கொண்டது போலவும் ஆகிவிட்டது. இரண்டு முரட்டுக் கரங்கள் மட்டும் அந்த இருளிலே முளைத்து வந்து அதைக் கீழே விழாதபடி வாங்கிக்கொண்டுவிட்டன. வாங்கிக்கொண்ட மறு கணமே அந்தக் கைகளும் மறைந்துவிட்டன; ஓடும் மறைந்துவிட்டது.

இதைக் கண்டதும் உண்மையாகவே சீனனுக்குக் 'காபரா' ஆகிவிட்டது. உடல் வெலவெலத்துவிட்டது. இதெல்லாம் பெரிய மந்திரவாதியின் மாயஜாலம் போல இருந்தது. மனிதர்கள் எதிரிகளாக இருந்து எதிர்த்தால் தைரியமாகச் சமாளித்துக் கொள்ளலாம். ஆனல் மந்திர வேலையாக இருந்தால் அவனல் என்ன செய்ய முடியும்? இது ஏதோ யட்சிணி வேலைதான் என்று அவனுக்கு நிச்சயமாகப் பட்டுவிட்டது. அதில் சந்தேகமில்லை. அந்த மண்டை ஓட்டிலே ஏதோ பெரிய மர்மம் ஒன்று இருக்கும் போல் இருந்தது. ஆணி அடித்ததுபோல் அவனல் அந்த ஜன்னலை விட்டு அசையவே முடியவில்லை. ஓரடி முன்னல் வைக்கவே கால் எழும்பவில்லை. இந்தப் பயத்தோடு இருட்டிலே எத்தனை நேரம் நிற்க முடியும்?

ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து நிமிஷங்கள் ஆகிவிட்டன.

அவன் தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு விளக்கைப் போட நகரும் சமயத்தில்,—

கீழே ஜன்னலுக்கு எதிரே, மரத்தடியில் ஏதோ ஓர் அசைவு தெரிந்தது. நிச்சயமாக அது பிரமையில்லை. ஏதோ ஓர் உருவம்! முன்பு பறங்கிமலைப் பங்களாவில் டெலிபோன் செய்யப்போன போது, சீனனுடைய கழுத்தைப் பிடித்து நெரிக்க வந்ததே, அதே போன்ற உருவந்தான்! அதேபோன்ற என்ன, அதே உருவந்தான்!

தலை முதல் கால்வரையில் கறுத்த கம்பளி ஒன்றை அது போர்த்துக்கொண் டிருந்ததோ, என்னவோ! அத்தனை மொந்தா காரமாக, பார்க்கப் பயங்கரமாக அது அங்கே மரத்தைச் சுற்றி உலவியது.

சீனனுக்குச் சொரேர் என்று ஆகிவிட்டது. அடிமேல் அடி கொடுத்துக் கொண்டேயிருந்தால் அதன் வலியை, அதிர்ச்சியை எவ்வளவுதான் தாங்கமுடியும்? அவன் இவ்வளவு தாங்கியதே பெரிய காரியம். இன்னொரு பையனாக இருந்தால், 'இந்தப் பணமும் வேண்டாம், இந்தப் பயமும் வேண்டாம்' என்று எங்கேயாவது சொல்லாமல் கொள்ளாமல் ஓடியே போயிருப்பான். அல்லது பயத் தினால் உளறிக் கொட்டி, படுத்த படுக்கை யாகியிருப்பான். சீனன் இவ்வளவு தைரியத்துடன் இருந்ததே பெரிய காரியம், அவன் உளறியடிக்காமல், நடுங்கிச் சாகாமல், எதிர்ப்பை எதிர்க்கிற துணிவோடு நின்றதை யாருமே பாராட்ட வேண்டியதுதான்.



சீனன் அத்துடன் நிற்க வில்லை. அந்த உருவம் என்னதான் செய்கிறது என்பதைக் கவனிக்க விரும்பினான். அதனால் இருட்டிலே உடலை யெல்லாம் திரையோடு சுருட்டிக்கொண்டு நின்றான். எதற் கும் முன் ஜாக்கிரதையாகக் கையில் துப்பாக்கியை எடுத்து வைத்துக்கொள்வது நல்லது என்று கருதினான்.

அந்த உருவம் மரத்தைச் சுற்றி வருவது தெரிந்தது. அண் ணாந்து தன் அறையைப் பார்ப்பது தெரிந்தது. பிறகு பளிச்சென்று பாட்டரி விளக்கு வெளிச்சத்தை அடித்துப் பார்ப்பது தெரிந்தது. சட்டென்று சீனன் திரையி னுள்ளே தன்னைச் சுருட்டிக் கொண்டு விட்டான்.

பிறகு அவனுக்கு வேறு யோசனை ஒன்று தோன்றியது.

கீழே நிற்கும் கரிய உருவம் பாட்டரி விளக்கு அடித்துப் பார்க்கும் ஒரு முரட்டு மனிதன் என்பதில் இப்போது அவனுக்குச் சந்தேகம் ஏற்படவில்லை. ஒருகால் அவனே பெரிய மந்திரவாதியாக இருக்கலாம். இந்தக் காலத்தில்கூட மந்திரவேலை செய்து எத்தனையோ வித்தைகள் - வேடிக்கைகள் காட்டுகிறார்கள். அவனே மோடி எடுக்கும் குறக்களி வித்தையைப் பார்த்திருக்கிறான். ஆகவே மந்திரவாதி என்றால் அவனுக்கு அவநம்பிக்கை ஒன்றும் கிடையாது. அவன் தனக்குத் தீங்கு செய்யுமுன் அவன் முழங்காலுக்குக் கீழ் அவனைச் சுட்டு வீழ்த்திவிட்டால் என்ன என்று தான் அவனுக்குத் தோன்றிற்று.

அப்படியானால் அதற்கு ஏற்ற இடம் இது அல்ல. இன்னும் கிட்டே இருக்கக்கூடிய ஜன்னலாக இருந்தால் தேவலை என்று ஆடைகள் அணிந்துகொள்ளும் அறையினுள்ளே நுழைந்தான். ஒரு சமயம் தப்பித்துக்கொண்டு ஓடும்படியாக இருந்தால் என்ன



செய்வது என்று தன் அறைக் கதவின் தாழ்ப்பாளைமட்டும் 'லைசா'கத் திறந்து வைத்துவிட்டுப் போனுன்.

அந்த அறையின் ஜன்னல் வாட்டமாகத்தான் இருந்தது. நேர் கீழே அந்தக் கரிய உருவம் கரடியைப் போல உலாவிக் கொண்டிருந்தது. கரடி என்முல் அசல் கரடியேதான். அதன் மேல் தோலைப்போட்டு மூடிக்கொண்டு நிற்பது நன்ருகத் தெரிந்தது. அந்த இருட்டில் யாராவது பார்த்தால் அலறிக் கொண்டு போக வேண்டியதுதான். இருந்தாலும் சீனன் ஏமாற வில்லை. அந்தக் கரடித் தோலினுள்ளே ஒரு முரட்டு மனிதன் ஒளிந்துகொண்டு இங்கே உலாவுகிருன் என்பதில் அவனுக்குக் குழப்பமே இல்லை. எந்த நிமிஷத்திலும் சுட்டுத் தள்ளத் தயாராக அவன் கையில் துப்பாக்கியுடன் நின்று கவனித்துக்கொண்டே யிருந்தான்.

அந்த உருவம் மீண்டும் அவன் முன்பு நின்ற ஜன்னலில் வெளிச்சத்தை அடித்துப் பார்த்தது. ஒருவரும் இல்லை என்று அது திருப்திப் பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அது சட்டென்று விளக்கை அணைத்து விடவில்லை. அரை நிமிஷம், ஒரு நிமிஷத் துக்குப் பிறகு அது பாட்டரி விளக்கை அணைத்துவிட்டு, மரத்தின்மீது ஏறத் தொடங்கியது. அப்பொழுதும் சீனன் பேசாமல் பார்த்துக் கொண்டுதான் இருந்தான். ஆனுல் என்ன காரணமோ பாதி உயரம் ஏறிய அந்த உருவம் அவசரமாகக் கீழே இறங்கியது.

எங்கிருந்தோ ஒரு சீட்டிச் சத்தம் கேட்டது. எங்கிருந்து என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனுல் தனக்கு வெகு சமீபத்திலிருந்து புறப்பட்ட சீட்டிச் சப்தமாக அவன் உணர்ந்தான்.

அந்த உருவம் இப்போது ஒவ்வொரு ஜன்னலாக விளக்கை அடித்துப் பார்க்கத் தொடங்கியது. அவனுடைய ஜன்னலைப் பார்க்கப் போகிற சமயம்.

சீனன் சிறிதும் தயங்காமல் தன் கைத்துப்பாக்கியைக் கையில் ஏந்திக்கொண்டான். அதன் குதிரையில் ஆள்காட்டி விரலை வைத்து இழுக்க வேண்டியதுதான்,—

"சீனு! சீனு!" - என்று அவனுடைய பெரிய அறையிலிருந்து ஒரு குரல் வந்தது. கதவைத்தான் திறந்து வைத்திருக்கிருனே!

ஷங்கந்தான் அங்கே பதற்றக் குரலில் அவனை அழைத்துக் கொண்டிருந்தான்.

கண் இமைக்கும் நேரம்தான்; சீனன் உள்பக்கம் திரும்பி ஷங்கங்கைப் பார்த்தான். "இதோ வந்துவிட்டேன்!" என்று சொல்லி விட்டு, மீண்டும் வெளியே பார்த்தால், மரத்தடியில்

நின்ற நெடிய கரிய உருவத்தைக் காணவில்லை. அதற்குள் அது எங்கேயோ மறைந்துவிட்டது. கைக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் நொடியிலே நழுவிவிட்டது.

''போடா! உன்னாலே எல்லாம் கெட்டுப் போச்சு!'' என்று சொல்லிக்கொண்டே சீனன் அவனருகில் வந்தான்.

ஷங்கங் இரைக்க இரைக்க ஓடி வந்திருந்தான். ஏதோ தலை போகிற காரியமாகத்தான் இருக்கவேண்டும் என்று சீனனுக்குத் தோன்றியது.

''சீனா! உடனே புறப்படு! ஆபத்து!'' என்றான் ஷங்கங்.

''எங்கே, யாருக்கு, எப்போது?'' என்று தடுமாற்றமாகக் கேட்டான் சீனன்.

''முதல்லே புறப்படேன்; பிறகு பேசிக்கொள்ளலாம்! எல்லாம் போகும்போது பேசிக்கலாம்.''

அதற்குப் பிறகு சீனன் கொஞ்சங்கூடத் தாமதிக்கவில்லை. மளமளவென்று ஓடிப்போய்ப் பீரோவைப் பூட்டினான். விளக்கை அணைத்தான். வெளியில் வந்து இருவருமாகக் கதவைப் பூட்டினார்கள். அப்போது சீனன் எதிர் அறையைப் பார்த்தான். அது உள் பக்கமாகத் தாழிடப்பட் டிருந்தது. வெளியில் படுத் திருந்த சாபரைக் காணவில்லை.

''சாபரைக் காணோமே!'' என்றான் சீனன்.

''நான்தான் போய் வண்டியை எடுக்கச் சொன்னேன்; வாசலில் காத்திருப்பான்!'' என்றான் ஷங்கங்.

இருவரும் ஓட்டமும் நடையுமாகவே ஓடி, வெளியில் வந்தனர். ஹோட்டல் அநேகமாக நித்திரையில் ஆழ்ந்து விட்டது. வேலைக்காரர்கள் சோர்ந்து ஓய்ந்து, மூலைக்கு மூலை உட்கார்ந்து தூங்குகிற நிலையில் இருந்தார்கள். ஹோட்டல் மானேஜரைக் காணவில்லை. அவருடைய துணையாள் மட்டும் மேஜை அடியில் கணக்குகளை முடித்துக்கொண் டிருந்தான். ஓடிவரும் சீனனைக் கண்டதும் அவன் எழுந்திருக்க முயன்றான். ஆனால் அதற்குள் சீனன் வாசலுக்கு வந்துவிட்டான். சாபர் மோட்டார் வண்டியோடு போர்ட்டிகோவில் காத்திருந்தான். இவர்கள் இருவரும் ஏறிக்கொண்டதும் வண்டி புறப்பட்டு விட்டது.

## 16

# கறுப்புக் கம்பளி

"எங்கே போகிறோம்?" என்றான் சீனன்.

"நம்ப பாரிஸ்டர் வீட்டுக்கு!" என்றான் ஷங்கங்.

"என்ன நடந்தது? அங்கே என்ன இப்போது?"

"அங்கே என்ன நடக்கப் போகிறதோ, தெரியாது. ஆனால் நாம் அங்கேதான் முதலில் போக வேண்டும்."

"அதுதான் என்ன என்கிறேன்!"

"நாளைக் காலையில் சிங்கப்பூர்க் கப்பல் புறப்படுகிறதாம்! அதற்குள் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது!"

"உனக்கு எப்படித் தெரியும்?"

"முழுவதும் தெரியாது. ஆனால் கொஞ்சம் தெரியும். போகும் போது உன்னிடம் கைச் செலவுக்கு எதுவும் வாங்கிக் கொள்ளாமல் போனேனா? இரவு சாப்பாட்டுக்குக் காசு இல்லை. உன்னை ரகசியமாகப் பார்த்து, ஏதாவது பணம் வாங்கிக் கொண்டு போகலாம் என்று வெளியிலிருந்த மரத்தடியில் காத்திருந்தேன். யாருடைய கண்ணிலும் படவேண்டாம் என்றுதான் அங்கே நின்றேன்...."

"எந்த மரத்தடியில், எப்போது?"

"அதுதான் இடது பக்கமாக இருக்கிறதே, அதே மரத்தடியில்!"

"என் அறைப் பக்கத்திலிருந்து பார்த்தால் தெரிகிறதே, அதனடியிலா?"

"ஆமாம்."

"எப்போது—?"

"நான் ஏழுமணியிலிருந்து நிற்கிறேன். அப்புறம் எட்டு எட்டரை மணி இருக்கும். அந்தச் சீனாக்காரன் வந்து மரத்தடியில் நின்றான்..."

"ம்..? உன்னைப் பார்த்தானா?"

"இல்லை. அவன் பார்க்கும் வரையில் நான் எதிரே நின்றால் தானே? அவனைக் கண்டதுமே நான் போய் ஒளிந்துகொண்டு விட்டேன்?"

"உம், அப்புறம் சொல்லு!"



"சிறிது நேரம் அவன் அங்கே நின்ருன். பிறகு அப்படியும் இப்படியும் உலாவினுன். அதற்கப்புறம் வாசல் வரையில் போய்விட்டு வந்தான். அப்படி இரண்டு மூன்று தடவை போய் விட்டு வந்து, என்ன நினைத்துக்கொண்டானே என்னமோ, உள்ளே போய்விட்டான். நான் அப்பவே அவனுக்குத் தெரியாமல் உன் அறைக்குப் போய்விடலாமா என்று பார்த்தேன் அப்போது திடீரென்று உன் அறையில் ஜன்னல்-வழியாக வெளிச்சம் தெரிந்தது. 'சரி; நீ உன் அறையில்தான் இருக்கிருய்' என்று நிச்சயம் பண்ணிக் கொண்டேன்..."

"அப்போ உடனே வருவதுதானே?"

"வரத்தானே நினைச்சேன். ஆனல் வராததே நல்லதாகப் போச்சு என்று வை. நான் வேறுமாதிரியாக யோசனை பண்ணினேன். அதாவது மரத்தின்மேலே ஏறி, கிளை வழியாக வந்து உன் அறைக்கு இறங்கி வந்து விடலாம் என்று ஒரு நினைப்பு வந்தது. சட்டென்று ஏறிவிட்டேன்..."

"யாரு நீயா? நீயா அப்படி இட்போது சற்று முன்பு ஏறினது?..."

"சற்று முன்பா? இரேன்; கேளேன் முழுவதையும்! கீழே இருக்கும் பெரிய கிளை வரையில் ஏறினேன். அதுக்குள்ளே மரத்தடியிலே யிருந்து ஒரு பெரிய சீட்டிச் சத்தம் கேட்டது.

"உம்...".

"கீழே எட்டிப் பார்த்தேன். அப்பா! எனக்குக் குலை நடுக்க மாகப் போச்சு..."

"ஏன்?"

"ஏன்னு, அங்கே பூதம்போல ஒருத்தன் வந்து, கறுப்புக் கம்பளியாலே உடம்பு, மூஞ்சியெல்லாம் மூடிண்டு நின்றுன்.

"அதை இப்ப நினைச்சாலும் பயமாக இருக்கு. மரத்தடியிலே இருட்டா? அதிலே அவன் வேறே கறுப்புப் பூதம் மாதிரி நிற்கிருனு? என் கால் கையெல்லாம் வெடவெடத்துப் போச்சு, போயேன்... முதல்லே அது மனித உருவம்னே எனக்குத் தோணல்லே. ஏதோ பேயோ பிசாசோ என்றுதான் நினைச்சுட்டேன். அவன் மறுபடியும் சீட்டிச் சப்தம் கொடுத்தப்புறம் தான் எனக்கு அது மனித உருவம்னு தைரியம் வந்தது. இருந்தாலும் படபடப்பு அடங்கல்லே! கீழே விழுந்துவிடாமெ இருந்ததே பெரிசுன்னு வையேன்."

"சரி; அப்புறம்; சட்டுனு சொல்லு" என்று அவசரப்படுத்தினுன் சீனன். ஏனெனில் வண்டி பாரிஸ்டர் இருந்த சாலைக்குச் சமீபமாக வந்துவிட்டது. இன்னும் ஒரு திருப்பந்தான் பாக்கி.

"அப்புறம், ஹோட்டலுக்குள்ளேயிருந்து அந்தச் சைனுக்காரன் இருக்கிருனே—அதான் நம்ப எதிரி கிங்கிங்—அவன் மறுபடியும் வந்துவிட்டான். சீட்டிச் சத்தம் கேட்டுத்தான் வந்தானே, இல்லே, அவனுகத்தான் வந்தானே! வந்துவிட்டான். அந்தக் கறுப்புக் கம்பளிக்காரங்கிட்டே வந்து, 'ஏன் இத்தனை நாழி?'ன்னு கேட்டான். நான் கிளையோடு கிளையாக அப்படியே பதுங்கிக்கொண்டு படுத்திருந்தேன். நல்ல வேளையாக என்னை அவனுக ரெண்டு பேருமே பார்க்கவில்லை. பதிலுக்கு அந்தக் கறுப்புக் கம்பளி, 'பறங்கிமலை பங்களாவுக்குப் போயிட்டு வர நாழியாயிட்டுது' என்றுன்."

"பறங்கிமலைப் பங்களாவா? அதாவது நம்ப பங்களாவுக்கா?"

"ஆமாம். 'போன காரியம் என்ன ஆச்சு?' என்றுன் கிங்கிங்..."

"தமிழிலேயா கேட்டான்?"

"ஆமாம்; அசல் தமிழிலே, நம்பளைப்போல் பேசற தமிழிலேதான் கேட்டான். அவனுக்குத் தமிழ் நன்னுத் தெரியும் போல் இருக்கு! ஜோராகப் பேசருன். நாம்கூட அப்படிப் பேச மாட்டோம். ஆச்சா? அப்படிக் கேட்டானு? அதுக்கு வந்து

அந்தக் கறுப்புக் கம்பளி, 'போன காரியம் பழம்தான்; இல்லாட்டித் திரும்பிடுவேனு, எத்தனை நாழியானலும்?' என்ருன். அப்படிச் சொல்லிவிட்டு எதையோ கம்பளிக்குள்ளேயிருந்து எடுத்து அந்தச் சைனுக்காரன்கிட்டே கொடுத்தான். நான் கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தேன். அது அந்தத் தோல் பெட்டிதான்!''

''ஹாங்.... தோல் பெட்டியா? அதாவது நேற்றுக் காணுமல் போனதா?'' என்று சத்தமே போட்டுவிட்டான் சீனன்.

''அது, அதே தோல் பெட்டி மாதிரிதான் இருந்தது. அதுவே தான்! நேற்றுக் காணுமல் போனதேதான்! கிழவர் உயிர் போனுலும் விடாமல் வைத்திருக்கச் சொன்னரே, அதே தோல் பெட்டி தான். நீ முதல்லே ஹார்பரிலே கற்பாறைகளுக்கு இடுக்கிலேருந்து எடுத்தியே, அதுவேதான்!''

சீனன் விக்கித்துப் போனுன். வண்டி பாரிஸ்டர் வீட்டுக்கு அருகில் வந்துவிட்டது.

''சாபர்! வண்டியைக் கொஞ்சம் மெதுவாக விட்டுச் சத்தம் போடாமல், இருட்டு ஓரமாக நிறுத்து. பாக்கியையும் இவனுக்குச் சொல்லிவிடுகிறேன். அப்புறம் உள்ளே போகலாம்'' என்ருன் ஷங்கங்.

வண்டி அவன் சொன்னது போலவே மெதுவாகப் போய், பாரிஸ்டர் வீட்டு வெளிச் சுவர் ஓரமாக, மரங்களின் இருட்டிலே போய் நின்றது.

ஷங்கங் மீண்டும் பேச்சைத் தொடங்கி, ''ஆச்சா? அந்தப் பெட்டியை வாங்கிக்கொண்டதும், 'நல்ல காலம்; காலையிலே கப்பல் புறப்படுகிறது. மற்றக் காரியங்களையும் ராத்திரிக்குள்ளே முடிச்சிடணும். நான் நேரே முதல்லே அங்கே போறேன். நீ இங்கே ஆகவேண்டியதை முடிச்சிட்டு அங்கே வந்துவிடு. எல்லாம் சரியாகக் குளோஸ் ஆயிட்டா நான் சொன்னபடி பாக்கிப் பாதியைக் கையிலேயே கொடுத்திடறேன். சரிதானு?' என்ருன். அதற்குக் கறுப்புக் கம்பளி, 'பாத்தியா, நான் சொன்னது மாதிரி கொடுக்கிறேன்னுகூடச் சொல்லமாட்டேங்கறியே. முதல்லே இந்தப் பெட்டியைக் கொண்டாந்ததுக்கே நீ கொடுக்கணுமே!' என்ருன். 'சரி! பாக்கியையும் அதே போல முடிச்சுட்டேன்னு, அதாவது பொழுது விடியறதுக்குள்ளே தீர்த்துக் கட்டிப்பிட்டேன்னு, நீ கேட்டது என்ன? அதுக்கு மேலேயே தர்றேனு, இல்லையா பாரு!'' என்ருன்.

''எதைத் தீர்த்துக் கட்டறதுன்னு சொல்லலியா? முதல்லே அங்கே போறேன்னுனே, எங்கே போகிருனும்!''

''அதான், பாரிஸ்டர் வீட்டுக்கு. அதாவது இங்கே!''

"ஆனுல் அவன் அறை பூட்டவில்லையே; உள் பக்கம் தாழ்ப் பாள் போட்டிருக்கிருப் போல இருக்கிறதே!"

"ஒரு சமயம் இனிமேல்தான் வருவானே, என்னமோ? அப் புறம் கேளேன். அப்புறம் அந்தக் கிங்கிங் உள்ளே போய் விட்டான். கறுப்புக் கம்பளியின் கையிலே கத்தியையும், ஒரு பாட்டரி விளக்கையும் கொடுத்திட்டுத்தான் போனுன். உடனே கறுப்புக் கம்பளி, மரத்து மேலே இருட்டிலே ஏறத் தொடங் கினுன். எனக்கா வந்த உசிரு மறுபடியும் போயிடும்போல இருந்தது. ஆனுல் யார் செய்த நல்ல காலமோ, என்னை அவன் கவனிக்கவே யில்லை. கிளையோடு கிளையாக எண்ணிப்பிட்டான். மரத்திலே அவன் ஏறின வேகத்தைப் பார்த்தான்னு தெரியும்! அடேயப்பா! வாலில்லாக் குரங்கு மாதிரிதான் சரசரவென்று ஏறினுன். உன் அறை இருக்கற பக்கமா ஒரு கிளை வளைஞ்சு வருது, பாரு. அங்கே போனுன். நான் பார்த்தேன். இதுதான் சரியான சமயம்; அப்புறம் என்ருல் வம்பு என்று வேறு பக்கமா மறைவாக மரத்திலிருந்து கீழே குதிச்சேன். அந்தக் கறுப்புக் கம்பளி, கண்ணிலே படாமெ இருக்கணுமே? மெது வாக ஒரே ஓட்டமாக ஓடி, சுவர் ஓரத்திலே இருந்த கட்டை மறைவிலே போய் மூச்சுக்கூடக் காட்டாமல் நின்றேன். உன் அறைக்குப் போவதற்கு ஏற்ற சமயம் அதுதான். ஆனுல் மயி ரிழையில் அகப்பட்டுக்கொள்ள இருந்தேன். மேலே ஏறியிருந்த கறுப்புக் கம்பளி மரத்திலிருந்து, சிறிது நாழிகைக்கெல்லாம் எதையோ ஒன்றைத் தூக்கிப்போட்டான். நல்லகாலம்; துளி தவறியிருந்தால் என் மண்டை பிளந்திருக்கும். அவ்வளவு கனமான பொருள். அது என்னவாக இருக்கும் என்று தான் என் யோசனை ஓடியது. எதுவாக இருந்தாலும் இருக் கட்டும் என்று அதைத் தூக்கி, பக்கத்திலிருந்த குப்பைத் தொட் டிக்குள் கையில் சட்டென்று அகப்படாதபடி ஆழப் புதைத்து விட்டு, உடனே ஓடியே வந்து விட்டேன். அப்போதுதான் சாபர் தூங்கப்போகிற சமயம். அவனைக் கண்டதுந்தான் எனக்கு இந்த யோசனையே வந்தது. என் பசி, தாகம் எல்லாம் போன இடம் தெரியவில்லை. ராத்திரிக்குள்ளே இவர்கள் ரெண்டு பேரும் எதையெல்லாம் தீர்த்துக் கட்டிக் குளோஸ் செய்துவிடுவார்களோ என்ற பயந்தான் முதலில் இருந்தது. எப்படியாவது உன்னையும் அழைத்துக்கொண்டுபோய் இந்தப் பாரிஸ்டரிடம் எச்சரித்து விடவேண்டும் என்று எண்ணி விட்டேன். அதனுல்தான் இவனை உடனே போய் வண்டியையும் எடுக்கச் சொன்னேன். உன்னையும் அழைத்துக்கொண்டு இங்கே வந்தேன். இவ்வளவுதான் சங்கதி!" என்று கூறி முடித்தான் ஷங்கங்.

## 17

## ஷங்கங் கட்டுண்டான்

சீனன் இதையெல்லாம் கேட்டு வாயடைத்து உட்கார்ந்திருந்தான். ஆனால் அவன் மூளை தீவிரமாக வேலை செய்தது. ஷங்கங் பொறுமையிழந்து, "சீனு! வா, எழுந்திரு! அந்தச் சைனுக்காரன் வந்தால் இனிமேல்தானே வரப் போகிறன்! நாம அதுக்குள்ளே அவரைப் பார்த்து எச்சரிக்கை செய்துவிட்டுத் திரும்பி விடலாம். உம்...கிளம்பு" என்றான்.

"ஹோட்டல்லே கிங்கிங் ரூம் திறந்தா இருக்கிறது?" என்று கேட்டான் சீனன்.

"இல்லை. திறக்காவிட்டாலும் உள் பக்கமாகத் தாழிடப்பட்டிருந்தது. வெளியில் பூட்டவில்லை!"

"அதனால் என்ன? பின்புற வழியாக வெளியில் வர முடியாதோ?"

"அதெப்படி முடியும்? பின்னால் காம்பவுண்டுச சுவர் அல்லவா? அதன் மேலே ஏறிக் குதித்தால் அடுத்த எஸ்டேட் கட்டடத்தில் கொண்டுபோய் விடும். அதையும் தவிர அதில் எப்படி ஏறிக் குதிக்க முடியும்?"

"ஏறிக் குதிக்க முடியுமா முடியாதா, அதைச் சொல் போதும். எப்படி, ஏன் என்றெல்லாம் உனக்கு ஏன் கவலை?"

"ஏறிக் குதிக்க முடியும்."

"குதித்தால் அடுத்த எஸ்டேட் திறந்தவெளி வழியாக மௌன்ட்ரோடுக்கு வரமுடியுமா, முடியாதா?"

"முடியும். வாசலில் காவல்காரன் இருப்பானே, விடுவானு?"

"த்ஸ¬. மறுபடியும் பாரேன். எப்படியோ வருவதானல் வெளியிலே வர முடியும்; இல்லையா?"

"ஆமாம்; முடியும்."

"அப்படி முடியாததை யெல்லாம் சாதித்துக்கொண்டு, அவன் இந்நேரம் இங்கே வந்திருந்தாலும் வந்திருக்கலாம்."

"இதெல்லாம் அதிகக் கற்பனை!" என்றான் ஷங்கங், வேறு பதில் சொல்ல வழியில்லாமல்.

"கற்பனையோ கற்பனையில்லையோ, நாம் ஒரு காரியத்தைப் பற்றி யோசித்தால், நடந்தாலும் நடக்காவிட்டாலும் நாலையும்



எண்ணிப் பார்த்துத்தானே ஒரு முடிவுக்கு வர வேண்டும்! அப்படி ஒருகால் அவன் வந்திருந்தால்—?''

"வந்திருந்தால்—?''

"வராமல் இருந்திருந்தாலும் வந்திருந்தால் என்று வைத்துக்கொண்டு தான் நாம் இப்போது வேலை செய்ய வேண்டும், இல்லையா?''

"சரி!''

"இப்ப, அதனாலே நாம்ப ரெண்டு பேருமே உள்ளே சேர்ந்து போகணுமா, இல்லே யாராவது ஒருத்தர் போனால் போருதா என்று பார்ப்போம். நீ மட்டும் போ; அல்லது நான் மட்டும் போகிறேன். யாராவது ஒருவன் வண்டியிலே இருப்போம். ஏதாவது விபரீதமாக இருந்தாலும் ஒருவன் வெளியிலே இருப்பது நல்லதில்லையா?''

"ஆமாம்; அப்ப நீயே போ! பாரிஸ்டர் ஒரு சமயம் என்னைக்கூட நம்ப மறுக்கலாம்.

"அதுவும் சரிதான்; முதலில் நானே போகிறேன். உள்ளே ஏதாவது விபரீதமாக இருந்தால் எப்படியோ உனக்குத் தெரிவிக்க முயல்கிறேன். நீ வண்டியில் இருப்பது தெரியாமல் இரு. தூங்கிப் போய்விடாதீர்கள்!'' என்று ஷங்கங்கையும் சாபரையும் ஜாக்கிரதைப் படுத்திவிட்டு, சீனன் வண்டியை விட்டு இறங்கி, பாரிஸ்டரைப் பார்க்கப் போனான்.

அவன் படியேறி உள்ளே போயிருப்பானோ மாட்டானோ, அதற்குள் இரண்டு முரட்டுக் கரங்கள் ஷங்கங்கின் வாயை இறுகப் பொத்தி அவனைச் சத்தம் போடவிடாமல் பிடித்துக்கொண்டன. இருட்டில் வேறு ஒன்றும் ஷங்கங்குக்குப் புலப்படவில்லை. கையையும் காலையும் பிணைத்துக் கட்டி, வண்டியிலிருந்து தன்னையும், முன்பக்கத்திலிருந்த சாபரையும் இருவர் தூக்கி, தோட்டத்திலுள்ள புதருக்கருகில் போடுவதை அவன் உணர்ந்தான். என்ன செய்வது? வாயைத் திறக்க முடிந்தால்தானே?



எல்லாம் ஒரு நொடிக்குள் நடந்தேறி விட்டன.

அந்தப் புதருக்கடியில் விழுந்த ஷங்கங், அதிர்ச்சி நீங்கி, கண்ணைத் திறந்து பார்த்தான். இருளாயினும் அந்த இருவருடைய வரி வடிவங் களும் சுமாராகத் தெரிந்தன. ஒருவன் அந்தச் சைனாக்காரக் கிங்கிங்தான். மற்றொருவன் அந்தக் கம்பளிப் போர்வைக்காரன்.

'அட, இவர்கள் நமக்கு முன்னால் இங்கே வந்துவிட்டார்களே! நானும் சீனனும் பேசிய வற்றில் பின் பகுதியை இவர்கள் இங்கிருந்து கேட்டிருப்பார்கள்போல் இருக்கிறதே! அப்படி யானால் இவர்கள் முன் ஜாக்கிரதையாக இருப்ப தோடு, சீனனுக்கும் ஆபத்தை விளைவிக்கப் போகிறார்களே!' என்று எண்ணினான்.

அவனால் வாயைத் திறந்து பேச முடியவில்லை. காரணம் அவர்கள் வாயிலே கட்டைபோல் ஏதோ அடைத்திருந்தார்கள். அந்த இருட்டில் சாபர் எங்கே விழுந்து கிடக்கிறான் என்பதும் தெரியவில்லை. ஆனால் அவனுடைய முனகலிலிருந்து சமீபத்தில் தான் அவன் இருக்கவேண்டும் என்று தெரிந்தது. கையைப் பின் புறமாகக் கட்டியிருந்தார்கள். காலையும் சேர்த்துப் பிணைத்திருந்

தார்கள். ஆனால் உள்ளம் மட்டும் ஏதாவது செய்யவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தது. என்ன செய்வது? சாபரின் முனகல் வந்த பக்கமாக அப்படியே புரள நினைத்தான்.

இந்தச் சமயத்திலே மாடியில் பளிச்சென்று வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் மின்சார விசிறி சுழல்வதும் தெரிந்தது. ஷங்கங்குக்குத் தெரியும்; அதுதான் பாரிஸ்டரின் அலுவல் அறை. அந்த அறையில்தான் அவர் சுவரோடு பதித்த அலமாரிகளில் சட்ட புத்தகங்களும் தஸ்தாவேஜிகளும் வைத்திருந்தார். 'சரி; சீனன் அவரை இந்தக் கிங்கிங்குக்கு முன்னால் சந்தித்திருப்பான்' என்று அவன் எண்ணிக்கொண்டான்.

ஷங்கங்குக்கு இப்போது ஒரே வேகந்தான் இருந்தது. மெதுவாகக் கட்டை அவிழ்த்துக்கொண்டு, தப்பிவிட வேண்டும். கட்டை அவிழ்த்துக்கொண்டு விட்டால் பார்த்து விடலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. மோட்டார்ப் பக்கமாகப் புரண்டு போய்விட்டால், பம்பரிலாவது கட்டுப் போட்ட கயிற்றைக் கொடுத்து அறுத்துவிடலாம் என்று எண்ணித்தான் புரண்டான். ஆனால் அது இடுப்பளவுப் பள்ளமாகவா இருக்கவேண்டும்! விழுந்த அதிர்ச்சியில் அவனால் கத்தவும் முடியவில்லை. ஆனால் எதிர்பாராதபடி சட்டென்று வாயினின்று அந்தக் கட்டை விழுந்துவிட்டது. துப்ப முடியாதபடி அடைத்துக்கொண்டிருந்த அந்தக் கட்டை விழுந்தவுடனே அவனுக்குப் பாதித் தெம்பு மீண்டுவிட்டது.

"அப்பா!" என்று வலி தீரப் பெருமூச்சுவிட்டான்.

அந்த வலி தீருவதற்குள் மற்றோர் அடி விழுந்துவிட்டது. அதாவது அவனால் தாங்க முடியாத அளவுக்குப் பளுவான பொருள் ஒன்று அவன்மேல் உருண்டுவிழுந்தது.

"ஐயோ!" என்று அவன் கத்தினான்.

அப்புறம் கொஞ்ச நேரம் சென்ற பிறகுதான் உருண்டு விழுந்தது மரக்கட்டையல்ல; சாபர் என்று புலப்பட்டது. துன்பத்திலும் துயரத்திலும் ஒரே மாதிரிக் கஷ்டப்படுபவர்களுடைய மனநிலையை வர்ணிப்பது கஷ்டம். எப்படியாவது ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்தாவது மற்றவரைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் ஒவ்வொருவருடைய உள்ளமும் நினைக்கும். அப்படித்தான் சாபரும் நினைத்தான். ஷங்கங்கும் நினைத்தான். அரை மணி நேரம் போல் போராடி, கட்டை அவிழ்க்காமலேயே விரல்களாலேயே சாபரின் வாயிலிருந்த துணியை எடுத்தான் ஷங்கங். அதேபோல் சாபர் பல்லாலேயே கடித்துக் கயிற்றை அறுக்க முயன்றான். வேலை எளிதில் முடியும் போல் தோன்றவில்லை. இருந்தாலும் அவர்கள் நம்பிக்கையைத் தளர விடவில்லை.

# 18

## மயக்க மருந்து

சீனன் உள்ளே நுழைந்தபோது வீட்டின் முன் பகுதியெல்லாம் ஒரே இருளடர்ந்து கிடந்தது. வாசலில் மணியடிக்கும் பொத்தானை அழுத்தியதும் வேலைக்காரன் மெதுவாக வந்து கதவைத் திறந்துவிட்டான்.

"பாரிஸ்டர் என்ன செய்கிறார்? தூங்குகிறாரா, விழித்துக் கொண்டிருக்கிறாரா?" என்று கேட்டான் சீனன்.

அந்த வேலைக்காரன் உடனே பதில் சொல்லவில்லை. காதில் விழுந்திராது என்று அவன் மீண்டும் வலுவாகக் கேட்டான்.

அவன் மென்று விழுங்கியபடி, "வந்து .. இல்லே .. அவரு .. தூங்கல்லே!" என்றான்.

"அப்போ மேலேதானே இருக்கார்?"

"இல்லே .."

"கீழேயே சாப்பிடுகிறாரா?"

"இல்லே .. வந்து .."

"என்ன வந்து, போய் என்கிறாயே, எங்கே இருக்கிறார்? ஜல்தியாகச் சொல்லு! அவரை நான் அவசரமாகப் பார்க்க வேண்டும். எங்கேயிருந்தாலும் போய்ச் சொல்லும் . . .! உடனே போ!" என்று சீனன் அவரப்படுத்தினான்.

"அவரு வந்து இங்கேயெல்லாம் இல்லீங்களே!"

"ஏண்டா பாவி! இதைச் சொல்லவா இத்தனை நேரம்? எங்கே போயிருக்கிறார்? அதையாவது சொல்லு!"

"தெரியாதுங்களே—"

"சாப்பிடத் தெரியுமா உனக்கு?"

வேலைக்காரன் பேசாமல் இருந்தான். பதிலே சொல்லவில்லை.

"சரி; தள்ளிப் போ, அந்தண்டை. நான் போய் அவருக்காக மேலே காத்திருக்கிறேன். வந்தால் நான் மேலே இருக்கேன் என்று சொல்லு! கதவை நன்றாகத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, தூங்கிப் போகாமல் பத்திரமாக இரு. நகர்ந்து போ!"

அவன் வழி விடவே முதலில் தயங்கினான். ஆனால் சீனனிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொள்ள முடியாததால்

வழியைவிட்டு விலகிக்கொண்டான். அப்பொழுதுதான் சீனனுக்கு ஏதோ 'சொரக்' என்று சந்தேகம் தட்டியது. இரண்டொரு படி ஏறிப் போனவன் உடனே திரும்பி, கதவைத் தாழிட்டுவிட்டு, வேலைக்காரனின் சட்டையை ஒரு கையால் பிடித்துக்கொண்டு, "டேய் உண்மையைச் சொல்! மரியாதையாகச் சொல்! இங்கே என்ன நடந்தது? அல்லது நடக்கப் போகிறது? பாரிஸ்டர் எங்கே? ம்...சொல்லு, சட்டென்று.. இல்லையோ, இதோ பார்த்தாயா?" என்று தன் டிராயர்ப் பையிலிருந்த துப்பாக்கியை மற்றொரு கையால் எடுத்துக் காட்டினான்.

"பாரிஸ்டர் மேலேதான் படுத்திருக்கிறாரு தூங்கறாரு!" என்று வாய் குழறக் கூறினான் அந்த வேலையாள்.

"பின்னே, ஏன் அவர் வீட்டிலே இல்லை என்று சொன்னே?"

"அவரு தூக்கத்தைக் கெடுக்க வேண்டாம்னுதான் . ."

"டேய் .. மரியாதையாகச் சொல்கிறாயா, மண்டையில் ஓங்கி ஒன்று போடட்டுமா?" என்று துப்பாக்கியின் அடிப்பாகத்தால் அவன் தலையை நோக்கி மெல்ல அடித்தான்.

"ஐயையோ, எனக்கு ஒண்ணும் தெரியாது. அவரு நல்லாத் தூங்கறாரு. கூப்பிட்டாக்கூட எளுந்திருக்க மாட்டாரு!"

"அவர் எப்பவும் இவ்வளவு சீக்கிரமாகத் தூங்கமாட்டாரே. இன்றைக்கு மட்டும் என்ன? சரி; எனக்கு முன்னால் நீ மேலே போ. ம்..நட. இல்லையோ உன்னை இப்போதே தொலைச்சிப் புடுவேன். போடா, அவர் எங்கே படுத்திருக்கார் என்று வந்து காட்டு!"

சீனன் பின்னால் விரட்டிக்கொண்டே வர, அந்த வேலையாள் படியேறி, பாரிஸ்டருடைய படுக்கையறைக்குள் நுழைந்தான். அதனுள் காலடி எடுத்து வைத்ததுமே சீனன் திடுக்கிட்டுப் போனான். பாரிஸ்டர் வாயைப் பிளந்தபடி சோபாவில் படுத்திருந்தார். ஆனால் சீனன் பயந்ததுபோல் அவருக்கு வேறு ஆபத்து ஒன்றும் நேர்ந்ததாகத் தெரியவில்லை.

அந்த வேலையாள் இதற்குள் பயந்து, 'ஹோ ஹோ' என்று சின்னக் குழந்தை மாதிரி தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டான். ஏதோ செய்ய விரும்பாத காரியத்தைத் துர்ப்புத்தியைக் கேட்டுச் செய்தவன்போல் அவன் அழுதான்.

"டேய், மூடுடா வாயை! என்னடா நடந்தது?" என்றான் சீனன்.

"ஒண்ணும் நடக்கலீங்க!"

"பின்னே, ஏண்டா இவர் இப்படிப் படுத்திருக்கார்?"

"அதான் தெரியல்லே.....பால் கேட்டாரு. கொண்டு வந்து கொடுத்தேன். குடிச்சிட்டு அப்படியே படுத்தவர்தான். அப்புறம் கண்ணை முழிக்கவே இல்லை!"

பாரிஸ்டருக்கு மூச்சு இருந்தது என்னவோ சீனனுக்குப் பார்த்ததுமே விளங்கிவிட்டது. ஆனால் அவர் மயங்கிய தூக்க நிலையில் கிடக்கிருர் என்பதில் சந்தேகமில்லை. தூக்கம் இயற்கை யான தூக்கமாக இருந்தால் அவர் இவ்வளவு சந்தடியில் எழுந்து விடுவார். ஆகவே இது செயற்கையாகச் செய்த தூக்கம். அந்தத் தூக்கத்திற்கு காரணம் அந்த வேலையாள் கொடுத்த பசும்பால். அப்படியானல் அந்தப் பால் பாத்திரம் எங்கே?

சீனன் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, "எங்கே பால் கொடுத்த குவளை?'' என்று கேட்டான்.

''அதைக் கொண்டுபோய்த் தேய்ச்சுக் கழுவி வச்சிட்டேன்!''

சீனன் அவன் முகத்தையே நன்ருகக் கவனித்தான். இந்தக் குற்றத்தை தெரிந்து செய்தானு, தெரியாமல் செய்திருப்பானு என்று அவனைப் பார்த்தே தெரிந்துகொண்டுவிட முயன்ருன்.

பாரிஸ்டருக்குப் பக்கத்திலே டெலிபோன் இருந்தது அவன் சட்டென்று ஏதோ ஒரு நினைப்பில் அதன் ரிஸீவரைப் போய்த் தூக்கினுன். இரண்டு எண்ணுள்ள நம்பர் ஒன்றைச் சுற்றி விட்டு அதைக் காதில் வைத்துக்கொண்டான். அதில் இயக்கமே யில்லை எல்லாம் முன்னேற்பாடாகவே நடந்திருப்பதை அறிந்த தும் அவனுக்கு உள்ளூற நடுக்கமாக இருந்தது. அவன் டெலி போனைக் கீழே வைத்துவிட்டு அந்த வேலையாளை மீண்டும் சட்டையோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டான்.

"உள்ளத்தைச் சொன்னுயோ தப்புவாய் இல்லையோ, நீ இத்துடன் தொலைந்து போவாய். இதெல்லாம் யாருடைய வேலை? உனக்கு இந்தச் சதிகளுக்காக எத்தனை ரூபாய்?"

"ஐயையோ, நான் ஒரு பாவத்தையும் அறியேன், தம்பி. எனக்கு ஒண்ணுமே தெரியாது!''

"ஒண்ணும் தெரியாதவன், ஏண்டா நீ பொய் சொன்னே?"

"நான் ஒண்ணும் சொல்லலீங்களே!''

''டேய், பாரிஸ்டர் வீட்டிலேயே இல்லை என்று நீ சொல்லல்லே?''

''நீங்க வந்து பார்த்து ஏதாவது சொல்வீங்களோன்னு பயந்துபோய்த்தான் அப்படிச் சொன்னேன். இல்லாட்டி...என் னைத் தெரியாதுங்களா உங்களுக்கு?''

''சரி; இங்கே என்ன நடந்தது? விவரமாகச் சொல்லு..''

''அதாங்க தெரியல்லே..ஏழு மணி இருக்கும். ஐயா அறை யிலே யாரோ பேசிக்கிட் டிருந்தாங்க.''

"உம்...அப்புறம்..''

''அவர் போயிட்டாருபோல் இருக்கு. ஐயா என்னைக் கூப் பிட்டு, 'பாலு கொண்டு வாடா'ன்னுரு..பாலைக் காய்ச்சிக்

கொண்டுபோறதுக்குள்ளே ஐயா எழுந்திருந்து இந்த அறைக்கு வந்துட்டாரு. அப்புறம் நான் பாலேக் கொண்டாந்து கொடுத் தேன். குடிச்சவருதான். சித்தைக்கெல்லாம் அப்படியே தூங் கிட்டாரு. நான் உசுப்பி உசுப்பிப் பார்த்தேன். எளுந்திருக் கல்லே! உடனே பயந்துபோய் டெலிபோன் பண்ணலாம்னு பார்த்தா, அது பேசவே இல்லீங்க. அதான் பயந்துபோய் மேலேயே அவருகிட்டேயே உட்கார்ந்திருந்தேன். இப்ப நீங் களும் வந்திட்டீங்க!'' என்ருன்.

''ஏண்டா, ஏழு மணியிலிருந்து இத்தனை நேரம் என்னடா பண்ணினே? நூறுதரம் ஓடிப்போய் டாக்டரைக் கூட்டி வந்திருக்கலாமே!''

''யாரைங்க வச்சிட்டுப் போறது? பூட்டிக்கிட்டுப் போனு, ஐயா நடுவிலே முழிச்சுக்கிட்டுக் கூப்பிடமாட்டாரா? அப்படிப் பூட்டிட்டுப் போகமுடியுமா? அம்மா, கொளந்தைங்க ஊரிலே இல்லாதப்போ இப்படி ஆயிட்டுதேன்னு பயந்து போய்த்தான் உக்காந்துக்கிட்டு இருக்கேன்'' என்ருன் அவன்.

சீனனுக்கு அவன் சொல்வது அவ்வளவும் நியாயமாகப் பட்டது. அதற்குமேல் அவனிடம் அவநம்பிக்கைப்பட அவன் தயாராக இல்லை. கொஞ்சம் சந்தேகப் படும்படியான ஆளாக இருந்தால் பாரிஸ்டரிடம் இத்தனை நாள் இருந்திருக்க முடியுமா? ஏதோ தவறு நடந்திருக்கிறது!

''அது சரி; நீ சொல்வதை நான் அப்படியே நம்புகிறேன். ஆனுல் ஏழு மணிக்கு யாரோ ஐயா அறையிலே பேசிக்கொண் டிருந்தாருன்னியே, அவர் யாரு?''

''அவுருதான் போயிட்டாரே. அதுக்கு அப்புறந்தானே இப்படி—''

''டேய், யாருடா வந்தது என்ருல் கதை அளக்கிருயே!''

''அது...வந்து...''

''உனக்குத் தெரியாது; இல்லே? உண்மையா நீ பயந்தவனு இருந்தின்னு, நான் வந்ததும் உண்மையைச் சொல்லியிருப்பியா, மாட்டியா?''

''சொல்லத்தாங்க வந்தேன். அதுக்குள்ளே நீங்க மிரட்டவே பயந்துப்புட்டேன்...ஆனுல்...ஆனு யாரோ புதுசா இருந்தது. நிசமாவே எனக்குத் தெரியலீங்க. நான் முந்திப் பிந்தி அந்த மனிசனைப் பாத்ததில்லிங்க! ஆங்...முதல்லே பறங்கிமலேப் பங்களா வாட்சுமேன் இல்லிங்க, அவன் வந்தான். ஐயாகிட்டேப் பேசிக்கிட் டிருந்திட்டுப் போனுன் அவன் போய் அரைமணிக் கெல்லாந்தான் அந்தப் புது ஆளு வந்தான். வந்து என்ன பேசி னுங்களோ, என்னவோ! என் காதிலே விளுவல்லே. அவன் இருக் கறப்பவே ஐயா கூப்பிட்டுப் பாலு கொண்டுவரச் சொன்னுரு.

நான் கொண்டு வந்தேன். அப்புறம் அவனும் போயிட்டான். ஐயாவும் வந்து படுத்துக்கிட்டாரு....."

"பாலே வச்சிட்டு நீ எங்கேயாவது போனியா?"

அந்த வேலேயாள் நன்ருக ஞாபகப்படுத்திக்கொள்பவன் போல் பார்த்தான். ஏதோ நினேவு வந்தவன்போல, "ஆமாங்க, பாலேக் கொண்டுபோய் ஐயா மேஜையிலே வச்சிட்டுத் திரும்பினேன், அவரு பாத் ரூம் பக்கம் போயிருப்பாருன்னு. அதுக்குள்ளே படுக்கைக்குப் போவாருன்னு நான் கண்டேனு? சித்தே கழிச்சுப் பார்த்தா ஐயா படுக்கைமேலே இருக்காருன்னு தெரிஞ்சுது. ஓடிப்போய்ப் பாலே எடுத்து வந்து கொண்டாந்து கொடுத்தேன்!"

சீனனுக்கு விஷயம் அப்போது தெளிவாகிவிட்டது. அந்த ஆள் பாலில் தூக்க மருந்தைக் கலந்துவிட்டுத்தான் போயிருக்கிருன். அவனுக்கு வசதியாக இந்த முட்டாள் செய்த காரியம் அமைந்துவிட்டது என்று தோன்றியது. ஆனல் அந்த ஆள் யாராக இருக்கும்?

சீனன் இவ்விதம் யோசித்துக்கொண்டிருக்கும்போதே பாரிஸ்டரின் அலுவல் அறையிலே பொக்கென்று வெளிச்சம் பரவுவதைக் கண்டான். வீட்டில் அவனும் அந்த ஆளுந்தான் இருந்தார்கள். கீழே வரும்போதே மாடிக் கதவைத் தாழிட்டுக் கொண்டும் வந்திருந்தான். அப்படி யிருக்கும்போது அங்கே எப்படி வெளிச்சம் வந்தது? மின்சார விசிறிகூடச் சுழல்கிறதே!

சீனன் மெதுவாக அந்த ஆளுக்குச் சைகை காட்டி அமர்த்திவிட்டு, மெல்ல எட்டிப் பார்த்தான். அவனுக்கு உடனே தூக்கி வாரிப் போட்டது.

கிங்கிங் தான் அட்டகாசமாய், துளியும் பயமின்றி அங்கே காணப்பட்டான்.

சீனனுக்குத் தன்னேயறியாமல் கை, டிராயர் பையினுள்ளே சென்றது. அந்த வேலேயாள் சத்தம் போட்டு, கிங்கிங் மீது பாய்ந்துவிடுவான்போல் இருந்தது. ஆனல் சீனன், அவன் காதோடு காதாக, "நீ போய் அவனிடம் மெதுவாகப் பேச்சுக் கொடு. எப்படி, ஏன் வந்தான் என்று கேள். நான் வந்திருப்பதைச் சொல்லாதே!" என்று அவனே அனுப்பினுன்.

## 19

## பலே பாரிஸ்டர்!

அந்த வேலையாளைப் பார்த்ததும் கிங்கிங் துளியும் பயப்படாமல், "என்னடா வேணும் உனக்கு?" என்றான் கன மிடுக்காக.

"அது சரி; நீ எப்படியப்பா ஒருத்தரும் இல்லாதப்போ உள்ளே வந்தே?" என்றான் வேலையாள்.

"எல்லாம் சொல்றேன்! பாரிஸ்டரைத் தீர்த்துக் கட்டறதுக்காகச் சதித் திட்டம் போட்டீங்களே, அந்தக் கூட்டாளி எங்கே என்றான் கிங்கிங்.

சீனன் அப்படியே ஸ்தம்பித்து நின்றான்.

கிங்கிங் மிகவும் மிடுக்காகத்தான் கேட்டான். அவன் கேட்டதைப் பார்த்தாலே சீனனுக்கு வேறு ஒரு சந்தேகம் தட்டியது. ஒருகால் இந்த வேலைக்காரனே வேறு ஒருவனோடு சேர்ந்து பாரிஸ்டரைத் தீர்த்துக் கட்டச் சதி செய்திருப்பானோ என்று தோன்றியது.

ஆனால் அந்த வேலையாள் சீனனிடம் பயந்தது மாதிரி இப்போது அந்தக் கிங்கிங்கிடம் பயப்படவில்லை. சீனன் கையில் துப்பாக்கி இருக்கும் தைரியமோ, அல்லது தான் குற்றவாளி இல்லை என்கிற தைரியமோ, தெரியவில்லை.

"எந்தக் கூட்டாளியைக் கேக்கிறே. ஐயா?" என்றான் அவன், கிங்கிங்கைப் பார்த்து. இருவருக்கும் ஒரு பாக தூரம் இடைவெளி இருந்தது.

"தெரியல்லியா உனக்கு? பாலிலே மயக்க மருந்து போட்டு விட்டுப் போனானே, அவன் தான்!"

"அவன் எனக்கா கூட்டாளி?"

"பின்னே யாருக்கு? உங்க பாட்டனுக்கா?"

"டேய், மூடுடா வாயை! வீட்டுக்குள்ளே கேள்வி முறையில்லாமெ நுழைஞ்சானும்! எப்படி உள்ளே வந்தேன்னு கேட்டா, என்னையே திருப்பிக் கேள்வி கேட்கிறாயா? எப்படியிருக்கு உடம்பு உனக்கு? பாலிலே மயக்கப்பொடி கலந்தவன் என் கூட்டாளியா, உன் கூட்டாளியா? ஊரான் வீட்டிலே உத்தரவு இல்லாமல் நுழைஞ்சதும் இல்லாமெ, தைரியமா எதிர்த்து வேறே பேசறியா?"

கிங்கிங் அவன் வார்த்தைகளைக் காதில் வாங்கிக்கொண்டதாகவே தெரியவில்லை. வீட்டின் சொந்தக்காரன் போல, பாரிஸ்டர் உட்காரும் நாற்காலியில் போய் ஜம்மென்று உட்கார்ந்து கொண்டான். டிராயரைத் திறந்தான்; மூடினான். மேஜை மேலிருந்த வழக்குக் கட்டுகளைத் தூக்கிப் பார்த்தான்: மறுபடியும் வைத்தான். இவ்வளவுக்கும் நடுவிலே அந்த வேலை ஆள்மீது ஒரு கண்ணும் வைத்திருந்தான். அவனுடைய நோக்கம் இன்னதென்று புரியவில்லை.

சீனனுடைய மூளை பரபரவென்று வேலை செய்தது. அவனுக்குப் பின்னால் பாரிஸ்டர் மயக்க நிலையிலேயே கிடந்தார். இந்தச் சமயத்தில் சாமர்த்தியமாக நடந்துகொள்ளாமல் போனால் பெரிய விபரீதமே நேர்ந்துவிடக்கூடும். ஆனால் அவன் என்னதான் நடக்கிறதென்று கதவு மறைவில் சிறிது உட்கார்ந்து கவனித்துக்கொண்டிருந்தான். போலீசுக்குத் தகவல் கொடுப்போம் என்றால் டெலிபோன் கிங்கிங் உட்கார்ந்திருந்த மேஜை மீது இருந்தது. அவன் மெல்ல வெளியில் போய், ஷங்கங் மூலமாகத் தகவல் அனுப்பலாம் என்று எண்ணினான். ஆனால் கீழே இறங்கிப் போவதற்கும் முடியாமல் இருந்தது. அப்படிப் போவது என்றால் முன் அறை வழியாகத்தான் போகவேண்டும். கிங்கிங் கண்ணில் படாமல் போகமுடியாது. என்ன செய்வது என்று அவன் யோசித்துக்கொண்டிருந்தபோது "எங்கேடா அந்தப் பயல்? உள்ளத்தைச் சொல்கிறாயா, இல்லை, உதை கிதை வாங்கப் போகிறாயா?" என்றான் கிங்கிங்.

"எந்தப் பயல்?" என்றான் வேலைக்காரன்.

"எந்தப் பயலா?' பாரிஸ்டரின் கைப்பிரம்பை எடுத்துக்கொண்டு எழுந்தான் கிங்கிங்.

இப்போது சீனனும் விருட்டென்று உஷாராக எழுந்து நின்றான்.

"அந்தப் பயல் வாசலில் வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே வந்ததைப் பார்த்தேன். நான் இங்கே வரும்போது அவனுடன் நீ பேசிக்கொண்டிருந்த குரலும் கேட்டது. அவனை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்? மரியாதையாகச் சொல்லி விடு. இல்லையோ அடி வாங்கிச் சாகாதே!"

வேலைக்காரன் அவனை எதிர்த்து நிற்கத் தயாராக இருந்தான். கிங்கிங் படுக்கையறைப் பக்கம் அடியெடுத்து வைக்கும் முன்பாகக் குறுக்கே நின்று தடுத்தான். அவன் கையை விரித்துக்கொண்டு நிற்பதைக் கண்டு கிங்கிங் பரிகாசமாகச் சிரித்தான். அடுத்த கணம் சுளீரென்று அவனுடைய கைமீது ஓங்கி ஓர் அடி விழுந்தது.

"உஸ், அப்பாடா!" என்று கையைப் பிடித்துக்கொண்டு அவன் உட்கார்ந்துவிட்டான். ஆனால் அதற்குள் சீனன் ஸ்பிரிங்

துள்ளி எழுவது போல் எழுந்து, டிராயரிலிருந்த பைக்குள் கையைவிடப் போனன். கண் இமைக்கும் நேரத்துக்குள் கிங்கிங் சீனன்மீது பாய்ந்து. அவனை அசையமுடியாதபடி பிடித்துக் கொண்டு விட்டான்.

“உன்னைத்தான் தேடினேன்.... முதலில் உனக்கு ஒரு வழி செய்து விட்டுத்தான் மற்ற வேலைகளைக் கவனிக்கவேண்டும்” என்று சீனனைப் பின்கட்டாகக் கட்டி. கைக்குட்டையால் பிணைத்தான்.

சீனன் சத்தம் போட்டுக் கூவியிருக்கலாம். ஆனல் அவன் அப்படிச் செய்யவில்லை. செய்திருந்தாலும் பலன் கிடைத்திருக்குமா என்பது வேறு விஷயம். இதன் நடுவே கையில் அடிபட்ட வேலைக்காரன் அதை லட்சியம் செய்யாமல் கிங்கிங் மீது பாய்ந்தான்.



இதற்குள் மாடிப் படியினருகே மற்றொரு பெரிய உருவம். உடம்பெல்லாம் கறுப்புக் கம்பளி போர்த்த உருவம் தோன்றி, அவர்களைப் பார்த்து ஒரு கனைப்புக் கனைத்தது. சீனன் அதைப் பார்த்ததும் வெல வெலத்து விட்டான்.

பாரிஸ்டர் படுத்த படுக்கையாகக் கிடந்தார். காடாந்தகார மான தூக்கம்: அப்படி இப்படி அசையக்கூட இல்லை.

கறுப்புக் கம்பளி வந்ததும் கிங்கிங், "அவர்களை அந்த அறையில் தள்ளிவிட்டு நீ பார்த்துக்கொள். நான் அதற்குள் வந்த வேலையை முடித்துக்கொள்கிறேன்" என்றான்.

பாரிஸ்டருடைய அறையில் சீனனும் வேலைக்காரனும் நின்றார்கள். கதவைச் சாத்திவிட்டு வெளியில் கறுப்புக் கம்பளி நின்றான். சீனனுக்குப் பயத்திலும் மூளை தெளிவாக இருந்தது. அவன் உடனே வேலைக்காரனைப் பார்த்து. "டேய்! ஒரு கிளாஸில் தண்ணீர் எடு. பாரிஸ்டர் முகத்தில் தெளிப்போம்!" என்றான்.



வேலைக்காரன் அவன் அறையை ஒட்டியிருந்த பாத் ரூமுக்குள் நுழைந்து ஒரு துணியைத் தண்ணீரில் நனைத்து வந்தான். சீனன் அதை வாங்கி அந்தப் பாரிஸ்டர் முகத்தில் துடைத்த போது. இரண்டு கைகள் அவன் கையைப் பிடித்துக் கொண்டன. சீனன் வாயை விட்டுக் கத்துவதற்கு இருந்தான். சட்டென்று பாரிஸ்டருடைய ஒரு கை அவன் வாயைப் போத்தியது.

"சத்தம் போடாதே!" என்றார் பாரிஸ்டர் மெல்லிய குரலில்.

"நீங்கள் மயக்கமாக... மயக்கம் தெளிந்து விட்டதா?"

பாரிஸ்டர் தலையை ஆட்டினார். "பேசாமல் இரு. எனக்கு எல்லாம் தெரியும்" என்றார்.

"அப்போது மயக்கம் தெளிந்து விட்டதா?"

"இல்லை. மயக்கமே வர வில்லை."

"பாலில்——"

"நான் அந்தப் பாலைச் சாப்பிடவே யில்லை."

சீனனுக்குப் பேச்சே ஓடவில்லை. "அப்படியானால்...அப்படி யானால்...." என்று பேசமுடியாமல் திணறினான்.

"அப்படியானால் என்ன? எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். இதோ பார்த்தாயா?" என்று முதுகுக்குக் கீழே உடலைப் புரட்டிக் காட்டினார்.

ஒரு காகிதக் கட்டும் கைக் குழல் துப்பாக்கியும் இருந்தன.

"என்ன இது, கட்டு?"

"கிழவர் உன் பேருக்கு எழுதிய உயில்! துப்பாக்கி என் தற்காப்புக்கு!"

"இவர்கள் வருவார்கள் என்று தெரியுமா!"

தெரியும் என்பதுபோல் பாரிஸ்டர் தலையை ஆட்டினார். சீனன் அவரையே வியப்போடு பார்த்தான், வேலைக்காரன் பயபக்தியோடு சற்று எட்டியே நின்றுகொண் டிருந்தான். அடுத்த அறையில் கிங்கிங் மேஜை, டிராயர் எல்லாவற்றையும் புரட்டிக் கொண்டிருந்த சத்தம் கேட்டது. கறுப்புக் கம்பளி என்ன செய்துகொண் டிருந்தானோ தெரியவில்லை.

பாரிஸ்டர் கையாலேயே பேசாமல் இருக்கும்படி சொல்லி விட்டு மீண்டும் தூங்குவதுபோல் கண்களை மூடிக்கொண்டார். சீனனுக்கு ஒருவிதமாக உண்மை விளங்கி விட்டது. பாரிஸ்டரை ஏமாற்றி மயக்க மருந்தைக் கலந்துவிட்டுச் சென்றவன்தான் உண்மையில் ஏமாந்து போனான். பாரிஸ்டர் பாலையும் குடிக்க வில்லை; ஏமாந்தும் போகவில்லை. அத்துடன் மட்டுமா? முன் யோசனையோடு தற்காப்பாகவும் இருந்திருக்கிறார். சீனன் தைரியத்தோடு உட்கார்ந்திருந்தான். அதற்குமேல் என்ன நடக்கப்போகிறதோ என்ன செய்ய வேண்டுமோ என்று அவனுக்குக் கிலியாக இருந்தது. கிங்கிங்கை அவன் இன்றுதான் இத்தனை அருகில் பார்த்திருக்கிறான். பூனைக் கண்ணும் புலிப் பாய்ச்சலும் படைத்த அவன் எந்தக் கொடுமையும் செய்யப் பின்வாங்காதவன் என்பது நிச்சயமாகத் தெரிந்தது.

அடுத்த அறையில் அவர்கள் இருவரும் ஏதோ பேசிக்கொண் டார்கள் என்று தெரிந்தது. அரை மணி நேரம் வரையில் ஏதோ புரட்டுவதும் தள்ளுவதுமாக இருப்பதுபோல் சத்தம் கேட்டது. சொந்த வீட்டுக்காரன்கூட இத்தனை கவலையில்லாமல் தேட மாட்டான்.

'டிரிண், டிரிண்' என்று அழைப்பு மணி கீழேயிருந்து வந்தது. அப்போதுதான் சீனனுக்கு ஷங்கங்கின் ஞாபகம் வந்தது. அவனுக்குத் தகவல் எதுவும் கொடுக்க முடியாதபடி மாட்டிக்

கொண்டு விட்டோமே என்று அவன் கவலைப்பட்டான். பாரிஸ்டரின் அந்தச் சயன அறையிலிருந்து வெளியில் போக வேறு வழி எதுவும் இல்லை. ஆனால் பாத்ரூம் பக்கம் போனால் ஜன்னல் வழியாகக் கீழே பார்க்கலாம். அதுவும் கம்பி போட்ட ஜன்னல். ஆதலால் குனிந்து பார்க்க முடியாது.

'டிரிண்—' என்று அழைப்பு மணி காதைத் துளைப்பதுபோல் விடாமல் ஒலிக்கவே, பக்கத்து அறையில் சந்தடி நின்றதுடன், சற்றைக்கெல்லாம் யாரோ மாடிப் படியில் இறங்கிப் போவதும் காதில் விழுந்தது. சீனன் சட்டென்று ஓடி, சாவித்துவாரத்தின் வழியாக அடுத்த அறையைப் பார்த்தான். பிரகாசமாக எரிந்த விளக்குகள் அணைந்து, அந்த அறை இருள் மூடிக் கிடந்தது. எதுவும் தெரியவில்லை.

பாரிஸ்டர் சமிக்ஞை மூலம் வேலைக்காரனைப் பார்த்து, கதவைத் தட்டச் சொன்னார். அதற்கும் பதில் ஒன்றும் வரவில்லை. விட்டுவிட்டு அழைப்பு மணி கேட்டது. பத்து நிமிஷம்போல் மணி அடிப்பதும் கதவைத் தட்டுவதும் தவிர வேறு ஒன்றும் நடப்பதாகத் தெரியவில்லை. அடுத்த அறையில் சந்தடி இல்லை என்று நிச்சயமாகத் தெரிந்ததால் சீனன் தைரியத்தோடு கதவை இழுத்துத் திறக்க முயன்றான். முடியாமல் போகவே அந்தக் கட்டிடமே அதிரும்படி ஓங்கி ஓங்கி இரண்டு கைகளாலும் கதவை இடிக்கத் தொடங்கினான். கைதான் வலி கண்டதே தவிர, கதவு திறக்கப்படும் வழியாக இல்லை.

## 20

## பட்சி பறந்துவிட்டது

சைனு ரெஸ்டாரண்டின் வாட்சுமேன் தூங்கி விழுந்து கொண்டிருந்தான். அவனுக்குத் திடீரென்று தூக்கிவாரிப் போட்டது. உள் பக்கத்து அறை ஒன்றில் கைத்துப்பாக்கி வெடித்திருக்கவேண்டும். வெலவெலத்துப் போய் எழுந்து நின்முன். ஒரு சமயம் தூக்கக் கலக்கத்தில் சொப்பனம் கண்டிருப் போமோ என்று சுற்று முற்றும் பார்த்துத் 'திருக் புருக்'கென்று விழித்தான்.

அப்போது யாரோ மாடி வழியாக நிதானமாக, ஆனால் வேகமாக நடந்துவருவது தெரிந்தது.

"வாட்சுமேன், யாராவது பையன் இருந்தால் கூப்பிடு!" என்று படியில் இறங்கி வந்தவன் அழைத்தான்.

"பையன் இல்லீங்களே!"

"அப்ப நீதான் இந்தப் பெட்டியைத் தூக்கி டாக்ஸியில் கொண்டு போய் வையேன்!" என்முன் அவன்.

வாட்சுமேனுக்கு அந்த ஆள் யார் என்று தெரிந்துவிட்டது. சீனன் அறைக்கு எதிர் அறையிலிருந்த கிங்கிங்தான் என்பதை அறிந்ததும் அவன் மரியாதையாக அவனேடு போனுன். அவனுடைய அறை பூட்டப்பட் டிருந்தது. வெளியில் இரண்டு பெரிய தோல் பெட்டிகள் பிரயாணத்துக்குச் சித்தமாய் விலாசமெல்லாம் ஒட்டி வைக்கப்பட் டிருந்தன. வாட்சுமேன் அந்த இரண்டு பெட்டிகளையும் தூக்கிக்கொண்டான். கிங்கிங் அந்த அறைச் சாவியையும் ஐம்பது ரூபாய் நோட்டுகளையும் அவனிடம் கொடுத்து, "இந்தா, சாவியை உன் மானேஜரிடம் காலையில் கொடுத்துவிடு. பணத்தை நீ வைத்துக்கொள்! நான் அறையைக் காலி செய்ய வில்லை. நாளைக் காலை வரையில் அது என் பொறுப்பில் இருப்பதாகத்தான் கணக்கு. புரிந்ததா? என்னை இரண்டு பேர் தேடி வருவார்கள். கேட்டால் காலையில் வரும்படி சொல்லியனுப்பி விடு. நான் பெட்டியோடு போய்விட்டேன் என்று யார் கேட்டாலும் சொல்லக்கூடாது. இந்தா, இன்னும் ஒரு பத்து ரூபாய் வேண்டுமானுலும் வைத்துக்கொள்!" என்று சொல்லிவிட்டு அவன் டாக்ஸியை நோக்கி நடந்தான். வாட்சுமேன் பெட்டி இரண்டையும் தூக்கமாட்டாமல் தூக்கிவந்து வாசலில் தயாராக நின்ற டாக்ஸியில் ஏற்றினுன்.

டாக்ஸி புறப்பட்டு விட்டது.

வாட்சுமேன் பணத்தை ஆசையோடு தொட்டுப் பார்த்துக் கொண்டே, கொட்டாவி விட்டான். அவன் உட்கார்ந்திருந்த ஸ்டூலைப் பார்த்தான். பிறகு மெதுவாக அதிலே உட்கார்ந்து கொண்டு, சுவரில் சாய்ந்தான். இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் தூக்கம் கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது. ஒரு தடவை விரலை வாய்க்கு அருகில் கொண்டுபோய் சண்டிகேசுவரருக்குச் சொடுக்கு வதுபோல் சொடுக்கிவிட்டு, அப்படியே கண்ணை மூடிக்கொண் டான். அடுத்த நிமிஷமே அவன் தூக்கத்தில் ஆழ்ந்து போனான். அதற்குமேல் அந்த வழியாக யார் வந்தார்கள், யார் போனார்கள் என்பது அவனுக்குத் தெரியாது.

* * *

பாரிஸ்டர் வீட்டின் அழைப்பு மணி ஒலிப்பதை நிறுத்தியது. காரணம், அழைப்பு மணியை அழுத்துவதை நிறுத்திவிட்டு, வெறு வழியாக உள்ளே நுழையவேண்டியதுதான் என்று வந்தவர்கள் முடிவு செய்ததுதான்.

"கதவுக் கொக்கியைக் கழட்டிப்பிடலாம், சார்!" என்றான் ஒருவன்.

"வேண்டாம்; ஒருவன் மட்டும் வாசல் வழியாகப் பால்கனி மீது ஏறி, உள்ளே வந்து கதவைத் திறந்துவிடட்டும்!" என்றார் மற்றொருவர். அதன்படியே ஒருவன் குரங்குப் பாய்ச்சலாக முன் புறத்து ஜன்னலைப் பிடித்து, அதற்குமேல் மேல்மாடிச் சுவரைப் பிடித்து, எப்படியோ அநாயாசமாக ஏறி முன்முற்றத்தில் போய்க் குதித்தான். அதே சமயத்தில் ஏதோ கறுப்பாக ஓர் உருவம் வாசலைத் தாண்டி ஓடுவது அவனுக்குத் தெரிந்தது. நாயோ, பூனையோ! என்று அவன் பேசாமல் இருந்துவிட்டான். இல்லாவிட் டால் ஒரு சத்தம் போட்டிருந்தால் போதும். கீழே நின்றவர்களில் யாராவது ஒருவர் அந்த உருவத்தைப் பின்பற்றி ஓடியிருப்பார்கள். அவனுக்கு அவ்வளவு தூரத்துக்கு எட்டவில்லை. அவனுக்கு வந்த காரியத்திலேயே நினைப்பு இருந்ததால், முதலில் முன் பக்கத்து அறைக்குள் நுழைந்து, விளக்குகளைப் போட்டு மாடிப் படிக்கட் டைப் பார்த்து, அதன் வழியாக இறங்கி, உள் பக்கமாகத் தாழி டப்பட்டிருந்த கதவைத் திறந்து விட்டான்.

வெளியில் நின்றிருந்த நாலைந்து பேரும் சரக் சரக்கென்று மிதியடிகள் கூச்சலிட மாடியேறி வந்தார்கள். சீனனும் பாரிஸ்ட ரும் வேலையாளும் அடைபட்டிருந்த சயன அறையைத் திறந்து விட்டார்கள்.

பாரிஸ்டர் வந்தவர்கள் யாரென்று தெரிந்ததுமே எழுந்து உட்கார்ந்து கொண்டுவிட்டார்.

"உங்களுக்கு ஆபத்து ஒண்ணும் இல்லையே!" என்றார் வந்த வர்களில் ஒருவர்.

"இல்லே. ஆனல் நீங்கள் இந்தச் சமயத்துக்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள், மிஸ்டர் துரைராஜ்!" என்று கேட்டார் பாரிஸ்டர்.

"டெலிபோன் வந்தது. உடனே இங்கே வரும்படி. அப்ப நீங்க டெலிபோன் செய்யலியா? மாஸ்டர் சீனன் குரல்போல இருந்ததே!"

"நாங்கள் இங்கேயேதான் அடைபட்டுக் கிடக்கிறோம். போன் செய்ய வேண்டும் என்று துடிப்புத்தான். முடியவில்லேயே என்று வருத்தப்பட்டுக்கொண் டிருந்தோம். ஆனல் யார் செய்ததோ? நல்லதாகப் போயிற்று. நாம் அப்புறம் அதைப்பற்றி ஆராயலாம். முதலில் இங்கே வந்திருந்த மோசக்காரர்களேப் பிடிக்க வழி செய்யுங்கள்!" என்றார் பாரிஸ்டர். நடந்ததையெல் லாம் இன்ஸ்பெக்டரிடம் சுருக்கமாகக் கூறினர். பங்களாவைச் சுற்றி இரண்டு ஜவான்கள் யாராவது ஒளிந்துகொண் டிருக்கி ருர்களா என்று தேடினர்கள்.

"இரண்டு பேர் வேண்டுமானல் இங்கே இருக்கட்டும்; பாக் கிப்பேர் உடனே சைஞ சு-சூ ஹோட்டலுக்குப் போய், அவனேக் கையோடு கையாகப் பிடிக்கச் சொல்லுங்கள்!" என்ருன் சீனன்.

வெளியில் ஓடித் தன்னுடைய காரைப் பார்க்கப் போன சீனன் ஏமாற்றத்துடன் திரும்பி வந்து, "ஒரு சமயம் ஷங்கங் போன் செய்திருப்பானே, ஆளே வெளியிலேயே காணவில்லேயே!" என்ருன்.

"இருக்கும் இருக்கும்" என்ருர் இன்ஸ்பெக்டர். குரல் ஒரு பையனுடைய குரல்தான். பெயரைக் கேட்டதற்கு, 'சீனன்' என்றுதான் சொன்னன்."

"அப்போ அது நிச்சயம் ஷங்கங்தான்! சந்தேகமில்லே! முதலில் ஹோட்டலுக்குப் போய்க் கிங்கிங் இருந்தாலும், வந்தாலும் அவனே உடனே பிடிக்க ஏற்பாடு செய்யுங்கள். துராக்கிருதமாக இங்கே நுழைந்து, பாரிஸ்டரின் மேஜை, டிராயர் எல்லாவற்றையும் தேடினவன் அவன்தான். அவனுடைய கையாள்தான் எங்களே இந்த அறையில் அடைத்து வைத்தவன்" என்ருன் சீனன்.

"சரி; இதோ இப்பவே போகிருேம்..." என்று புறப்பட்டார் துரைராஜ்.

"போய்ப் பயனில்லே; பட்சி பறந்தோடி விட்டது!" என்று பின்னல் ஒரு குரல் கேட்டது.

எல்லாரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். ஷங்கங் தான் வண்டியிலிருந்து இறங்கி வந்து நின்ருன்.

## 21

## ஷங்கங்கின் சாகசம்

ஷங்கங் இவ்வளவு நேரம் எங்கே இருந்தான்? என்ன செய்துகொண் டிருந்தான்! இப்போது மட்டும் எப்படி அங்கே வந்தான்? அவனும் சாபரும் கட்டுகளை அவிழ்த்துத் தப்பிய பிறகு என்ன செய்தார்கள்?

இதெல்லாம் சீனனுக்குத் தெரியாது.

முதலில் அவர்கள் இருவரையும் யாரோ கட்டிப் போட்டகர்கள் என்பதே சீனனுக்குத் தெரியாது. அவன் இவ்வளவு நேரம் டிரைவரோடு செடி மறைவில், வண்டியிலேயே உட்கார்ந் திருந்ததாகவே சீனன் எண்ணிக்கொண் டிருந்தான்.

மாடியிலிருந்து கிங்கிங் தப்பிச் சென்றதை அவன் ஒருகால் வண்டியிலிருந்தவாறு பார்த்திருக்கக் கூடும். அதைப் பார்த்து விட்டுத்தான், 'பட்சி பறந்தோடி விட்டது' என்று கூறுவதாகச் சீனன் எண்ணினன்.

ஆனல் ஷங்கங் மயிரிழையில் உயிர் தப்பினன் என்பதும் உபயோகமான பல காரியங்களைச் செய்திருக்கிருன் என்பதும் சீனனுக்குத் தெரிய வழி ஏது?

வெகு நேரம் மன்ருடி, கட்டுகளை அவிழ்த்துக்கொண்ட பிறகு, ஷங்கங்கும் சாபரும் வண்டியினுள் போய் உட்கார்ந் தார்கள். அங்கிருந்து பார்த்தால் பாரிஸ்டர் அறையின் வெளிப் புறம் தெரிந்தது. உள்ளே சற்றுமுன் பரவிய வெளிச்சம் அப் படியே இருந்தது. தங்களைக் கட்டிப் போட்டவர்கள் மேலே போயிருக்கிருர்கள் என்பதில் அவனுக்குச் சந்தேகம் உண்டாக வில்லை. சீனனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தாலும் நேரலாம் என்று தோன்றியபோது அவனுக்கு நடுக்கமாக இருந்தது. அவ னுக்குத் துணையாகப் போகலாமா என்று அவன் முடிவு செய்வ தற்குள் அந்தப் பழைய கறுப்புக் கம்பளி உருவம், படிக்கட்டில் ஏறி, பங்களாவினுள் தனியாக நுழைவதைப் பார்த்தான். கறுப்புக் கம்பளி கீழே காவலாக நிற்பதாக அவனுக்குத் தோன் றியது. ஆகையால் கீழே இறங்கி, பங்களாவுக்குள் செல்லும் யோசனையை அவன் விட்டுவிட்டான். ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகப் போய்க்கொண் டிருந்தது.

அவ்வப்போது நடுவே மாடியில் ஏதோ பேச்சுக் குரல் கேட்பதுபோல் இருந்தது. ஆனல் அது பேச்சுக் குரல்தானு, யாருடைய பேச்சுக் குரல் என்று தெளிவு படுத்திக்கொள்வதற் குள் அதுவும் நின்றுவிட்டது. அப்பொழுது கிங்கிங், பாரிஸ்



டரின் மேஜையையும் டிராயர்களையும் பீரோக்களையும் புரட்டித் தள்ளி ஏதோ குடைந்துகொண் டிருந்தான் என்பதை ஷங்கங் கண்டானு?

இனியும் பொறுத்திருந்து பார்ப்பது பைத்தியக்காரத் தனமாக அவனுக்குத் தோன்றியது. அவன் சாபரைப் பார்த்து, "சாபர்! வண்டியைச் சத்தப் படாமல் எடுக்க முடியுமா?" என்று கேட்டான்.

இரவு நேரம். அந்த வீதியே ஓசை அடங்கிக் கிடந்தது. துளிச் சத்தம் கேட்டாலும் அந்த அமைதியில் வெகு தூரம் கேட்கும். சாபரும் அதைத் தான் கூறினுன்.

"அப்படியானுல் சரி; இரு. நான் கொஞ்சம் வெளியில் போய் விட்டு வந்துவிடுகிறேன். நான் வருவதற்குள் இங்கே ஏதாவது விபரீதம் நடந்தால் கொஞ்சங்கூடத் தயங்காதே. அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் எழுந்து ஓடி வரும்படி சத்தம் போடு. இல்லையோ பேசாமல் இரு. அதற்குள் நான் தகுந்த ஏற்பாட்டுடன் வருகிறேன். கார் ஹாரனை மட்டும் மூன்று முறை அமுத்து" என்று

சொல்லி விட்டு, ஷங்கங் கால் நடையாகவே வண்டியிலிருந்து இறங்கி வெளியே சென்றுன்.

சென்னை மவுன்ட் ரோடு பிரதேசத்தில் அவனுக்குத் தெரியாத சந்து பொந்துகள் இல்லை. மூலை முடுக்குகளில் உள்ள குப்பைத் தொட்டி, சாக்கடைக் கிணறு, நெருப்பணைக்கும் ஆவிப் பெட்டி, குண்டு குழி எல்லாம் கூட அவனுக்கு நன்ருகத் தெரியும். ஆனால் அவன் இப்பொழுது போகவேண்டியதுடெலிபோன் பெட்டி நிறுத்திய இடத்துக்குத்தான். அது மணிக்கூண்டுக்கு அருகில் இருந்தது. பொதுமக்களின் உபயோகத்துக்காக ஏற்பட்டது அது. அங்கே போய், இரண்டணவைப் போட்டால் யார் எங்கே வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் அவர்கள் டெலிபோன் வைத்திருப்பவர்களாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் எப்படி முடியும்?



அவன் யாரோடு பேச விரும்பினுனே அவர்களுக்கு ஒரு நம்பர் உண்டு. அது பக்கத்தில் இருந்த டெலிபோன் குறிப்புப் புத்தகத்தில் இருக்கும். ஷங்கங்குக்குக் காசு போட்டுப் பேச வேண்டும் என்பது தெரியுமே தவிர, அவர்களுக்கு ஒரு நம்பர் உண்டு என்பது நினைவுக்கு வரவில்லை. இரண்டு மூன்று முறை இரண்டணுவைப் போட்டுத் தடுமாறிய பிறகுதான், அந்தப் பக்கத்திலிருந்து ஒரு பெண் குரல் கேட்டது.

"யாரோடு தம்பி, பேச வேண்டும்?"

"பறங்கிமலை இன்ஸ்பெக்டரோடு!"

"அவர் நம்பர் தெரியுமா?"

"தெரியாது."

"இரு. நான் லைன் போட்டுக் கொடுக்கிறேன். பேசு!"

இரண்டு மூன்று நிமிஷங்கள் ஷங்கங் ரிஸீவரைக் காதிலேயே வைத்துக் கொண்டு நின்றுன். "ஹலோ!" என்று ஒரு தடிக் குரல் அழைத்தது.

ஷங்கங் ஒரு கணம் தயங்கினுன். பிறகு சட்டென்று சமாளித்துக்கொண்டு, "நான்தான் ஸார், சீனன் பேசறேன்!" என்றுன்.

"ஓ! மாஸ்டர்! சீனன், சீனன் தி மில்லியனர்! என்ன மாஸ்டர்! என்ன வேணும் உங்களுக்கு?" என்றுர் இன்ஸ்பெக்டர் துரைராஜ்.

"உடனே பாரிஸ்டர் பங்களாவுக்கு வாங்க, ஸார்! தாமதம் செய்திங்களோ மோசம் போய்விடும். யாருடைய உயிருக்காவது ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும்" என்றுன் ஷங்கங்.

"சரி; இதோ ஒரு சின்னப் படையோடு வர்றேன்.."

'கிளிக்'—ஷங்கங் ரிஸீவரைக் கீழே வைத்து விட்டான்.

"ஹலோ, ஹலோ!" என்று டெலிபோனை உலுக்கிய இன்ஸ்பெக்டர், வேறு வழியின்றி, ரிஸீவரைக் கீழே வைத்தார்.

ஷங்கங் வண்டிக்கு வருவதும், மாடியிலிருந்து ஓர் உருவம் இறங்கி வருவதும் சரியாக இருந்தன. அந்த உருவம் வாசலைத் தாண்டும் வரையில் ஷங்கங் பொறுத்திருந்தான். அந்த உருவம் விளக்குக் கம்பத்தருகில் போகும்போது கவனிப்பதற்காக, மதில் பக்கமாகப் போய் எட்டிப் பார்த்தான். முன்னும் பின்னும் பார்த்துக்கொண்டு அங்கே கிங்கிங்தான் வந்துகொண் டிருந்தான்.

அவனுடைய கண்கள் டாக்ஸியைத் தேடின என்று தெளிவாகத் தெரிந்தது. அப்படி ஒன்றும் அந்த நேரத்தில் வரும் என்று தோன்ருததால் அவன் வேகமாக நடக்கத் தொடங்கினுன். கொஞ்ச தூரம் போனதுமே அதிருஷ்டம் அவன் பங்கில் இருப்

பது தெரிந்தது. எதிரே ஒரு டாக்ஸி வந்து விட்டது. அதில் அவசர அவசரமாக ஏறிக்கொண்டான் கிங்கிங். டாக்ஸி வந்த வழியே திரும்பிவிட்டது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஷங்கங் வண்டிக்குத் திரும்பி ஓடிவந்து, "சாபர்! வண்டியை உடனே எடு. நேரே சைனு சு-சூவுக்கு விடு!" என்றான்.

வண்டி புறப்பட்டபோது அதிகமாகச் சத்தம் கேட்கவில்லை. அப்படியே இருந்தாலும் கேட்ட சத்தத்தை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. வண்டி சர்ரென்று திரும்பி, பெரிய சாலையில் ஓடியது.

"நேரே ஹோட்டலுக்குப் பக்கத்து மைதானத்தில் நிறுத்து!" என்றான் ஷங்கங், வண்டி உள்ளே நுழைந்ததும்.

அவர்கள் வண்டி மரத்தடியில் போய் நின்ற சமயத்தில் தான், கிங்கிங் ஏறி வந்த டாக்ஸியும் போய் நின்றது. அவனைப் பின்பற்றிச் சென்று, அவன் என்ன செய்கிறான் என்று அறிந்து கொள்வதுதான் ஷங்கங்குக்கு முக்கியமாகப் பட்டது. ஏனெனில் இப்பொழுது விட்டுவிட்டால் காலையில் அவனைப் பிடிக்க முடியாது. இன்று இரவுக்குள் பாரிஸ்டர் வீட்டுக்குப் போய் ஏதோ ஒன்றை முடித்து விடுவதாக அவனும் கம்பளிப் போர்வையும் முடிவு கட்டிக்கொண்டதை மறக்கவில்லை. பாரிஸ்டர் வீட்டிலிருந்து அவன் திரும்பிவிட்டதால் அந்த முக்கியமான காரியத்தை அவன் முடித்துக்கொண்டு வந்திருப்பான் என்று தோன்றியது. அது என்னவாக இருக்கும்? அதைத் தெரிந்துகொள்வது முக்கியமல்லவா? அதனால்தான் ஷங்கங் அவனைப் பின்பற்றி உளவு பார்ப்பது என்று துணிந்துவிட்டான்.

அவன் எதிர்பார்த்தபடியே அந்தக் கிங்கிங் நேர் வாசல் வழியாகப் போகவில்லை. ஹோட்டலின் பக்கத்துச் சந்து வழியாகப் பின்பக்கம் போனான். மரத்தடியில் நின்ற ஷங்கங் இருட்டோடேயே வந்து பின்பற்றினான். கிங்கிங் திரும்பிப் பார்த்தாலும் பார்க்கலாம் என்று குதிரை விளையாட்டில் முட்டிக்கால் போட்டுக்கொள்வது போல, தரையில் கைகளை ஊன்றிக்கொண்டான். இருட்டில் தப்பித் தவறிப் பார்த்தாலும் நாயோ பூனையோ என்றுதான் எண்ணலாமே தவிர, மனிதன் வருவதாக யாரும் கருதவே முடியாது. சுவர் ஓரமாக ஓர் ஏணி சாத்தியிருந்தது. கிங்கிங் அந்த ஏணி வழியாக ஜன்னலில் ஏறி ஒரு நிமிஷத்தில் மேல் மாடியில் இருந்த தன் பின் பாகத்தை அடைந்துவிட்டான். முன்னதாகவே அவன் அந்தக் கதவுகளைத் திறந்து வைத்திருந்தான் என்று தெரிந்தது. சீனன் குறிப்பிட்டபடியே, முன் பக்கத்தைச் சாத்திவிட்டு, அவன் பின்பக்கத்து வழியாக இவ்வளவும் செய்திருந்தான். முதல் காரியமாக, சுவரில் சாத்தியிருந்த ஏணியை மேலிருந்தவாறே தூக்கினான். அடுத்த நிமிஷம் ஏணியைச் சட்டம் சட்டமாகப் பிரித்து அடுக்கி ஒரு கட்டாகக் கட்டி, சந்தில்

போட்டுவிட்டான். யாராவது பார்த்தால் ஏதோ சட்டங்கள் என்றுதானே நினைப்பார்கள்?

ஷங்கங்குக்கு இது பெரிய ஏமாற்றமாகப் போயிற்று, அவன் எப்படி மேலே ஏறமுடியும்? இருந்தாலும் அவன் தைரியத்தையோ முயற்சியையோ கைவிடவில்லை. அவன் பொறுமையோடு அந்தச் சட்டங்களை எடுத்து, ஏணிபோல் பொருத்த முயன்ருன். அது அத்தனை எளிதாக இல்லை. இருட்டில் எது எதற்குரிய சட்டம் என்று புரியவில்லை. எனவே அதைக் கைவிட்டுவிட்டு வேறு வழி ஏதாவது இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தான். ஆம்; இருந்தது. அதைப் பார்த்த பிறகுதான் அவன் முகம் மலர்ச்சியடைந்தது. மதில் சுவரின்மேல் ஏறிவிட்டால், அடுத்த அறையின் ஜன்னல் அவனுக்கு எட்டும். அதைப் பிடித்துக்கொண்டால் அப்புறம் மேலே ஏறுவதோ, உள்ளே குதிப்பதோ என்ன பிரமாதம்?

எல்லாம் முதலில் சுலபமாக இருக்கும்போலத்தான் இருந்தது. ஜன்னலைப் பற்றியபோது அந்த அடுத்த அறையில் யாராவது இருந்திருந்தால் அவன் தப்பியே இருக்க முடியாது. திருடன் என்று அகப்பட்டுக்கொண்டிருப்பான். அங்கிருந்து கட்டைச் சுவரைப் பற்றிக்கொண்டு நடந்தபோது கால் வழுக்கிவிட்டிருந்தால் ஆளே பைசலாகியிருப்பான். அதையும் எப்படியோ சமாளித்துவிட்டான். எல்லாவற்றுக்கும் மேலாகத் தைரியம் தான் காரணம். எப்படியாவது நினைத்த காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்ற மனேதிடம் இல்லாமல் இருந்திருந்தால் ஒன்றுமே நடந்திருக்காது.

கடைசியாக அந்தக் காரியத்தை அவன் சாதித்தேவிட்டான். மூச்சைப் பிடித்துக்கொண்டு அவன் கிங்கிங் அறையின் பின்பக்கம் போய்க் குதித்துவிட்டான் உள்ளே இருந்த கிங்கிங் தன்னுடைய சாமான்களை எடுத்து வைப்பதில் முனைந்திருந்தான்.

ஷங்கங் வராந்தாவில் கிடந்த ஒரு பீரோவின் மறைவில் பத்திரமாக நின்றுகொண்டு கிங்கிங் எடுத்துவைத்த ஒவ்வொரு பொருளையும் பார்த்துக்கொண்டு நின்ருன். பாரிஸ்டர் வீட்டிலிருந்து என்ன கொண்டு வந்தான் என்பது புரியவில்லை. ஆனல் நீல நிறமாக இருந்த ஒரு பெரிய பிளான் போன்ற படம் பாரிஸ்டரின் மேஜைமேல் இருந்ததை அவன் பார்த்திருந்தான். அது இப்போது இவனுடைய பெட்டிக்குள் அடக்கம் செய்யப்பட்டிருந்தது, பிறகு அந்தத் தோல்பெட்டி, சீனனிடம் இருந்த சு-சூ பெட்டி! அதையும் அவன் பெட்டிக்குள் வைத்தான்.

எல்லாவற்றையும் வைத்துப் பூட்டிய பிறகு, கிங்கிங் பின்புறமாகவே வந்து எட்டிப் பார்த்தான். பிறகு உள்புறம் போய், உள்ளே யிருந்தவனைப்போலவே கொக்கியைத் தள்ளிக் கதவைத் திறந்தான்.

அவன் வெளியில் புறப்படப் போவதை அறிந்து ஷங்கங் சட்டென்று கட்டைப்பிடிச் சுவரை அடைந்தான். ஆனால் என்ன துரதிருஷ்டம்! கிங்கிங் கண்களில் அவனுடைய வெள்ளை ஆடை தென்பட்டு விட்டது.

அடுத்த கணம் 'டுமீல்' என்று துப்பாக்கியை வெடித்தான் கிங்கிங். அது வெடித்ததும் ஷங்கங் சந்தினுள் தொப்பென்று விழுந்ததும் ஏககாலத்தில் ஒலித்தன. துப்பாக்கியால் சுட்டுத் தள்ளிவிட்டோம் என்ற திருப்தியுடனேயே கிங்கிங் போயிருக்க வேண்டும். அப்புறம் கிங்கிங் டாக்ஸியில் ஏறிச் சென்றதைத் தான் அவன் வாசலுக்கு வந்தபோது பார்த்தான். வாட்சுமேன் இன்னும் விழித்துக்கொண் டிருப்பதாகத் தோன்றியதால் ஷங்கங் அங்கேயே நின்றான். கால்மணி நேரம் ஆனதும் வாட்சுமேன் மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்தான். ஷங்கங் சுவரோடு சுவராக ஒண்டிக்கொண்டு, தன்னுடைய கார் நின்ற இடத்துக்கு வர முயன்றான்.

ஆனால் அங்கே ஓர் உருவம் குனிந்து எதையோ தேடிக் கொண்டிருந்தது, ஷங்கங் உற்றுக் கவனித்தான். கறுப்புக் கம்பளி போர்த்த உருவந்தான் அது. அந்த உருவம் மெல்லப் படிக்கட்டில் ஏறி உள்பக்கமாக வந்தது. ஷங்கங்கும் பின் தொடர்ந்தான். அந்த உருவம் யார் என்று தெரிந்துகொண்டுவிட அவன் விரும்பினான். தன் தைரியம் அனைத்தையும் ஒன்று சேர்த்துக் கொண்டான். அங்கே இருந்த பீரோ மறைவில் போய் ஒளிந்துகொண்டான்.

கறுப்புக் கம்பளி மரம் இருந்த பக்கமாக உள்ள வராந்தாவில் எதையோ தேடியது. கைக்கு எட்டும் தூரந்தான். ஷங்கங் துணிந்து விட்டான். அடுத்த கணம் கம்பளியைப் பிடித்து, ஒரு வெட்டாக வெட்டி இழுத்து விட்டான்.

"ஹோ!" என்ற சத்தம் எழுந்தது. ஷங்கங் பயத்தில் கண்ணை மூடிக்கொண்டுவிட்டான்.

## கூவம் நதிக்கரையில்....

ஷங்கங் கம்பளியைப் பிடித்து இழுத்ததும், கறுப்புக் கம்பளி குனிந்து இடறியதும், 'ஹோ' என்ற கூச்சல் எழுந்ததும் எல்லாம் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. ஒரு விநாடிதான்!

ஷங்கங் மூடிய கண்களைத் திறந்தான். அவன் கண்களை அவனுல் நம்பமுடியவில்லை. கறுப்புக் கம்பளிப் போர்வையினுள் மறைந்திருந்த முகத்தைப் பார்த்தவுடனேயே அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆனுல் தன் கண்கள் பார்த்தது உண்மை தானு என்று உறுதிப்படுத்திக்கொண்டு மீண்டும் பார்ப்பதற்குள் அந்த உருவம், கீழே நழுவி விழுந்த கம்பளியை அள்ளிச் சுருட்டிக் கொண்டு, தபதபவென்று வெளியில் ஓடத் தொடங்கியது. அந்தச் சத்தம் மட்டும் கேட்காமல் இருந்திருந்தால் ஷங்கங் பாடு ஆபத்தாகப் போயிருக்கும். பார்த்த கண்ணைத் தோண்டி எடுத்துக்கொண்டுதான் அந்தக் கம்பளி போர்த்திய ஆள் போயிருப்பான்.

அப்படிச் சத்தம் போட்டது யார்? அந்தச் சத்தம் ஷங்கங்குக்குப் பின்னுலிருந்த ஜன்னலிலிருந்து கேட்டது. ஜன்னலுக்கு வெளியே தெரிந்த இரண்டு உருவங்கள்தான், உள்ளே நடந்தவற்றைப் பார்த்துவிட்டுக் கத்தின. அவர்கள் பாராக்காரர்கள். துப்பாக்கி வெடிச் சத்தத்தைக் கேட்டு விழித்துக்கொண்டு வந்தவர்கள். அவர்கள் அடுத்த மோட்டார் எஸ்டேட்டைச் சேர்ந்த காவலாளிகள். அவர்கள் போட்ட பாராச் சத்தத்தில்தான் கறுப்புக் கம்பளிக்குக் கதி கலங்கிவிட்டது. கம்பளியை இழுத்து, ஆளைப் பிடிக்க யாரோ வந்திருக்கிருர்கள் என்று எண்ணி, 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்பதுபோல், கம்பளியை இழுத்தது யார், அங்கே நின்றவன் யார், சத்தம் போட்டவர்கள் யார் யார் என்பது ஒன்றையும் கவனியாமல் அந்த உருவம் ஓட்டமாய் ஓடி விட்டது.

அதுவரையில் ஷங்கங்கின் நல்ல காலந்தான். அவனுக்கும் முதலில் பயமாகத்தான் இருந்தது. கறுப்புக் கம்பளியோடு இன்னும் யாராவது வந்திருக்கிருர்களோ என்று நடுங்கி, சுவர் ஓரமாகச் சிறிது நேரம் ஒண்டிக்கொண்டு நின்றுன். ஜன்னலுக்கு வெளியே சத்தம் போட்டவர்கள், புரியாத மொழியில் பேசிக் கொண்டே வெகு தூரம் போனுர்கள் என்று தெரிந்த பின்னர் தான் ஷங்கங் அந்த இடத்தைவிட்டு வெளியில் வந்தான். வெளிப்புறத்து மரத்தடியில் சீனனுடைய வண்டி தாயாராக நின்றது.

ஷாபர் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, தயாராக இருந்தான்.

ஷங்கங் வந்து வண்டியில் பாய்ந்து ஏறிக்கொண்டதும் வண்டி பாரிஸ்டர் வேதாசலத்தின் வீடு நோக்கிப் புறப்பட்டது. அதன் பின்னர்தான் ஷங்கங் முன்னே குறிப்பிட்டபடி, "பட்சி பறந்துவிட்டது" என்று கூறினுன்.

அவன் சொன்னதை ஒருவரும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

ஷங்கங் மீண்டும், "இங்கிங்கையோ அவனுடைய கையாளேயோ உங்களால் பிடிக்க முடியாது. இந்த இடத்தை விட்டுப் போனவன் இந்நேரம் கப்பல் ஏறியிருப்பான். அவனுடைய கையாள் யாரென்பதை உங்களால் ஊகிக்கவே முடியாது" என்ருன்.

இன்ஸ்பெக்டர் துரைராஜுக்கு இது ரோசமாகப் பட்டது.

"தம்பி, அப்படியெல்லாம் பேசாதே. மாஸ்டர் சீனனுடைய நண்பன் என்பதற்காகப் பேசாமல் இதைப் பொறுக்கிறேன். வேறு யாராக இருந்தாலும் இந்த வார்த்தை சொன்னதற்கு இந்நேரம் நடப்பதே வேருக இருக்கும். எங்களால் கண்டு பிடிக்கமுடியாது என்று சொல்வது எங்களை அவமதிப்பதுபோல்! தெரிகிறதா?" என்ருர்.

"தெரிகிறது. ஆனுல் உங்களை நான் அவமதிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அப்படிச் சொல்லவில்லை. நீங்கள் தேடிக் கண்டுபிடிப்பதற்குள் அந்தக் கப்பல் சிங்கப்பூர் போய்விடும். அப்புறம் நீங்கள் கண்டுபிடித்தாலும் ஒன்றுதான், கண்டு பிடிக்காவிட்டாலும் ஒன்றுதான். அதற்காகத்தான் சொல்கிறேன். கோபித்துக் கொள்ளாதீர்கள்!" என்ருன் ஷங்கங், முகத்தை ஒன்றும் தெரியாத சாதுபோல வைத்துக்கொண்டு.

"அப்படியானுல் அவனுடைய கையாள் யார் என்பதை உன்னுல் சொல்ல முடியுமா?"

"முடியும்?"

"போலீஸ் என்ருல் இப்படித்தான் சில பேருக்குத் தப்பான அபிப்பிராயம். அவர்கள் எல்லாம் முக்காலமும் உணர்ந்த ஞானிகளா? உங்களுடைய நிலையைத் தெரிந்துகொண்டு, நீங்கள் தரும் தகவல்களிலிருந்து உண்மைக் குற்றவாளியை ஊகித்துத் தேடுவதே எங்கள் வேலை. போலீஸ் இலாகாவில் புத்திசாலிகளும் உண்டு; மந்த புத்தியுள்ளவர்களும் உண்டு. உங்கள் கேஸ் வெற்றிகரமாக முடியவேண்டும் என்ருல் எங்களைச் சோதிப்பதில் அர்த்தமில்லை. நீங்கள் உங்களுக்குத் தெரிந்த தகவல்களையெல்லாம் ஒளிவு மறைவு இன்றிச் சொன்னுல்தான் முடியும். இல்லாவிட்டால் எங்களுக்கு என்ன வந்தது?"

"அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். அதனுல் தான் உங்களால் ஊகிக்கக்கூட



முடியாததை நான் சொல்வதாக இப்போதும் சொல்கிறேன்."

"ஷங்கங்! பேச்சை வீணுக வளர்த்துகிருயே, விஷயத்தை உடனே சொல்லாமல். அவர் கோபப்படுகிருர் என்று சொல்லிக்கொண்டே யிருக்



இருயே...சட்டென்று யார் என்பதைச் சொல்!" என்றுன் சீனன்.

"சொல்வது என்ன! இப்போதே நாம் எல்லோருமாக அங்கே புறப்பட்டுப் போக வேண்டியதுதான். நீயும் நானும் உதவிக்கு இரண்டு போலீஸ்காரர்களுடன் போனுல் கையும் மெய்யுமாக உடனே பிடித்துவிடலாம்...உம்; புறப்படு!" என்றுன் ஷங்கங்.

"நீயும் நானுமா? அப்படியானுல் அவன் நமக்குத் தெரிந்தவனு?"

"ஆமாம்."

"யார் அது?"

"போகும்போது வழியில் சொல்கிறேன். போலீசார் அவர்களுடைய வண்டியில் பின்னால் வரட்டும்."

அப்படியே அவர்கள் இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து புறப்பட்டார்கள். பாரிஸ்டர் எழுந்து படுக்கைக்கு அடியிலிருந்த உயில் கட்டுகளைப் பத்திரப்படுத்திவிட்டு, தம் வேலையைக் கவனிப்பதில் ஈடுபட்டார்.

முன்னால் சீனனுடைய வண்டியும் பின்னால் போலீஸ் வானும் மௌன்ட்ரோடில் ஸ்பென்சர் வழியாகப் போய்க்கொண்டிருந்தன. கூவம் ஆற்றுச் சாலை திரும்பியதும், "ஆமாம்; வண்டி ஏன் இங்கே போகிறது?" என்றான் சீனன்.

"முதலில் உன் சிற்றப்பன் சின்னப்பக்கிரியைப் பார்க்க வேண்டும்!"

"எதற்கு?" என்று திகைப்போடு கேட்டான் சீனன்.

ஷங்கங் அவனுடைய காதோடு எதையோ சொல்லவே சீனனுக்கு மண்டையில் ஓங்கித் தாக்கியதுபோல் இருந்தது.

"நிச்சயமாகத்தான்! என் கண்கள் என்னை ஏமாற்றாமல் இருந்தால்?" என்றான் ஷங்கங்.

கூரைக் குடிசைகள் இருந்த இடம் வந்ததும் வண்டிகள் ஓர் ஓரமாக நின்றன. முதலில் சீனனும் ஷங்கங்கும் வீட்டுக்குப் போய்க் கதவை இடிக்கவேண்டும். அதற்குமேல் விபரீதமாக ஏதாவது நடக்கும்போல் இருந்தால் வீட்டைச் சுற்றிலும் மறைந்திருக்கும் போலீசாரைக் கூப்பிட வேண்டும் என்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். சின்னப் பக்கிரியோ பொல்லாதவன்; அவன் மனைவி காளியோ அதைவிடப் பொல்லாதவள். சீனன் அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யவில்லை. அதனால் அவர்கள் அவன் மீது கோபமாக இருந்தார்கள். அந்தக் கோபத்தில் அவர்கள் அவனைத் துன்புறுத்தலாம், அல்லவா? அதற்காகவே போலீஸ் கோஷ்டி மறைந்திருக்க வேண்டும் என்று ஏற்பாடு.

குடிசைகள் இருளடர்ந்த பிரதேசத்தில் முட்டு முட்டாகக் காட்சியளித்தன. எல்லாக் குடிசைகளுமே உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தன. கூவம் ஆறு, கரிய மலைப்பாம்பு இரையை விழுங்கிவிட்டு அசைய முடியாமல் நீண்டு கிடப்பதுபோல் காணப்பட்டது. அதன் தண்ணீரின் நாற்றம் வயிற்றைக் குமட்டியது. அந்தப் பிரதேசத்தில் விளக்குகள் இல்லாததால், பாதை தெரிந்து, வளைந்து வளைந்து செல்வதே கஷ்டமாக இருந்தது. சீனனும் ஷங்கங்கும் இந்த இருட்டில் நடந்து நடந்து பழக்கமானதால் அவர்கள் வெகு எளிதாகச் சந்தையும் பொந்தையும் கடந்து ஆற்றின் கரை ஓரமாக இருந்த தனிக் குடிசைக்கு வந்தார்கள்.

அந்தக் குடிசைக்குப் பின்புறத்தில் ஆறு ஓடியது. ஓட்டைப் படகுகள் இரண்டு அதன் கரை ஓரமாக ஒதுக்கப்பட்டிருந்தன.

படகைச் செலுத்தும் நீண்ட கோல் ஒன்று குடிசை ஓரமாகச் சாத்தப்பட்டிருந்தது. நட்சத்திரங்களின் ஒளிதான் மங்கலாகத் தெரிந்தது. எதிரே வருபவனை மிக அருகில் வந்தால்தான் தெரிந்துகொள்ள முடியும். அதுவும் நல்ல வெளிச்சத்திலிருந்து வந்தவர்களுக்கு, நல்ல வெளிச்சத்திலேயே பழகியவர்களுக்கு அது கூடத் தெரியாது. ஆள்மீது முட்டிக்கொண்டால்தான் தெரியும்.

குப்பை மேட்டு நாய்கள் இரண்டு வேற்று ஆட்களைக் கண்டதும் 'வாள் வாள்' என்று மாறி மாறிக் குரைத்தன. நல்ல ஆடை உடுத்துக்கொண்டவர்களை அவை பார்த்ததில்லை.

கந்தலும் கிழிசலும் தாடியும் மீசையுமாக வருபவர்களைக் கண்டால்தான் அவை மனிதர்களாக எண்ணி வாயை மூடிக் கொண்டிருக்கும். நல்ல சட்டை வேஷ்டியுடன் வந்தால் அவை இப்படிக் குலைப்பது வழக்கந்தான். அதனால் நாய் குரைக்கிறதே என்று அந்தச் சேரியில் யாரும் கலவரம் அடைவதேயில்லை; தூக் கத்தைக் கெடுத்துக்கொள்வதும் இல்லை.

கரையில் ஒதுங்கியிருந்த இரண்டு படகுகளில் ஒன்றுமட்டும் கோலோடு பாதிப் பாகம் தண்ணீரிலும் பாதிப் பாகம் தரையிலுமாக நின்றது. அதைப் பார்த்தால் எந்த நிமிஷத்திலும் அது கிளம்புவதற்குத் தயாராக நிறுத்தப்பட்டதுபோல் இருந்தது.

'ஙொய்' என்று காதைத் துளைப்பதுபோல் கரிச்சான் கத்தியது. சில தவளைகள் எங்கிருந்தோ 'கொடாக், கொட கொடாக்' என்று இருட்டின் பயங்கரத்துக்குத் தாளம் எழுப்பின. நீர் வாழ் ஜந்துக்கள் காலடி ஓசை கேட்டுத் தண்ணீரில் சள சள வென்று பாய்ந்தன. 'கிர் கிர் கிர்' என்று ஏதோ ஒரு பூச்சி நிறுத்தி நிறுத்திக் கத்தியது.

சீனனும் ஷங்கங்கும் சின்னப்பக்கிரியின் குடிசையை அடைந்தார்கள். பனை ஓலையும் வைக்கோலும் வேய்ந்த அந்தக் குடிசை இருளில் முட்டுப்போலக் கவிந்திருந்தது. துருவேறிய தகரங்களால் ஆன கதவு சாத்திக் கிடந்தது. உள்ளே விளக்கு வெளிச்சம் இருப்பதற்கான அறிகுறியே காணோம்.

ஆனால் இரண்டு குரல்கள் மட்டும் கிசுமுசு வென்று முணு முணுப்பதை வாசலில் நின்ற நண்பர்கள் இருவரும் உணர்ந்தார் கள். 'குத்து வெட்டு' என்ற வார்த்தைகள்கூடக் காதில் விழுந் தன. சற்றைக் கெல்லாம் கடப்பாரை டணர், டணர் என்று இடிபட்டது.

சீனனுக்கு அந்த இருட்டில் நிற்பதற்குப் பயமாக இருந்தது. இருளோடு நன்கு பழகிய அவர்களுக்கே அந்த நேரத்தில் இடிப் பதும், முணு முணுப்பதும் அச்சத்தைத் தந்தன.

கதவருகில் போய் நின்றான் சீனன். வெளியில் தட்டி மறை வில் நின்றான் ஷங்கங். திடீரென்று தட்டிக்குக் கீழே இருந்த புறுப் பெட்டியடியில் வெள்ளையாக ஏதோ ஒன்று அசைவதைப்

பார்த்தான் ஷங்கங். நெஞ்சு 'சொரக்' கென்றது. உற்றுப் பார்த்தான். பார்க்கும்போதே இரண்டு நெருப்புத் துண்டங்களை வைத்ததுபோல, இரண்டு ரத்தினங்கள் ஜொலிப்பது போல ஒரு பிரகாசம் தோன்றியது. ஷங்கங் ஓர் அடி பின்வாங்கினுன். வேறென்றுமில்லை; கூரையின் விட்டத்தில்தான் அவன் தலை இடித்தது.

நெருப்புப் பந்து மெல்ல நகர்வதுபோல் இருந்தது. உண்மையில் ஷங்கங்கின் நெஞ்சு துடிக்கத் தொடங்கியது. வரவர அது முன்னேக்கி வருவது நிச்சயமாகத் தெரிந்தது. அவன் பார்த்துக் கொண்டேயிருந்தான். உள்ளே 'டங், டங்' என்று கடப்பாரை இடிக்க இடிக்க நெருப்புப் பந்தும் வெள்ளை உருவமும் அவனை நோக்கி முன்னேறி வந்தன. அவன் மூச்சு நின்றுவிடும்போல் தேங்கியது,

சீனன் கதவருகில் நின்றுன். கைகள் வெலவெலத்தன; "இடி; உடை!" என்ற மெல்லிய முணு முணுப்பு அடித் தொண்டையில் வலுவான சொற்களாகக் கேட்டன இருட்டில் வீட்டின் மூன்றுபுறமும் போலீஸ்காரர்கள் கையில் தடியுடன் எச்சரிக்கையாக நின்றுர்கள். படகுக்கு அருகில் இன்ஸ்பெக்டர் துரைராஜ் நின்றுகொண் டிருந்தார்.

"ஐயோ! சீனு!" என்று வீரிட்டான் ஷங்கங்.

அடுத்த கணம் சீனன் உளறியடித்துக்கொண்டு தகரக் கதவின்மேல் விழுந்தான். அந்த அதிர்ச்சியில் தகரம் படபடவென்று ஓசை எழுப்பியது. ஷங்கங் வெளியில் கவிழ்ந்திருந்த பானை சட்டிகளின்மேல் உருள, பானைகள் உடைய, சட்டிகள் கவிழ்ந்து நொறுங்க, 'பே பே' என்று வாய் அரற்றக் கீழே தடுமாறி விழுந் தான்.

"யாரு?" என்று ஒரு பெண் குரல் பயங்கரமாக அதட்டியது.

சீனன் தடுமாறி எழுந்து, ஓடுவதற்குத் தயாராக ஒரு காலை முன்னுலும் ஒரு காலைப் பின்னுலுமாக வைத்துக்கொண்டு சொன்னுன்:

"நா நா..நான்தான்!"

"என்னடா, கேக்கறேன்; நான்தான்றியே! நான்னு எவண்டா அது?" - படீரென்று தகரத்தட்டிக் கதவு அரை குறை யாகத் திறந்து கொண்டது.

சீனன் வாயிற்படியில் இடறி விழாமல் நின்றதே பெரிய சாதனை. கதவின் உட்புறத்தில், காளியின் பயங்கர உருவம் தெரிந்தது.

"யாரு—யாருடா நீ?"

"நான்..தான்....சீ...சீ...சீனன்..."

"சீனனு?"

"ஆஆஆ.." தலையை உலுக்கிப் பேச முயன்ற சீனன் வெறும் திக்கலோடு நின்றுவிட்டான்.

"யாரவன்? சீனன் பயலா? சீனன் பயலா வந்திருக்கிறுன்? ஹாங்!' என்று காளிக்குப் பின்னுலிருந்து மற்ருெரு பேய்க்குரல் உறுமிக்கொண்டு வந்தது.

'வீல்' என்று மறுபடியும் ஓர் அலறல்.

எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். கையில் ஒரு சிமினி விளக்குடன் காளி வெளியில் வந்தாள். சீனனும் திரும்பிப் பார்த்தான். கொழுத்த வெள்ளைப் பூனை ஒன்று வாயில் எதையோ கவ்வியவாறு தகரத்தட்டிக் கதவிடுக்கில் பாய்ந்தது.

"பூ..பூ..பூனை!" என்று உளறியடித்துக்கொண்டு எழுந்த ஷங்கங், "ஹி...ஹி...பூனை!" என்று தன்னையே தேற்றிக் கொண்டு எழுந்தான்.

அடுத்த கணம் இன்ஸ்பெக்டர் துரைராஜ், "இங்கே என்ன சத்தம்?" என்று அதிகாரக் குரலில் கேட்டவாறு வாசலுக்கு வந்தார்.

அவர் தலை தெரிந்ததோ இல்லையோ, பின்னுல் கடப்பாரையுடன் காணப்பட்ட சின்னப்பக்கிரி சடக்கென்று பின் வாங்கி, தன் தலையை மறைத்துக்கொண்டான்

"அதோ..அதோ..அவர்தான் கறுப்புக் கம்பளி! பிடியுங்க.. பிடியுங்க!" என்று கூவினுன் ஷங்கங்.

எல்லாரும் வீட்டின் முன்புறமாக வந்து கூடினுர்கள். இன்ஸ்பெக்டர் தைரியமாக, "போ, அந்தப் பக்கம்!" என்று காளியை மிரட்டி ஒதுக்கிவிட்டு வீட்டினுள்ளே நுழைந்தார். அடுத்த கணம் மிரண்டு அடித்துக்கொண்டு வெளியே ஓடிவந்தார்.

"ஆ! மண்டை ஓடு! பிசாசு!" என்று கூவினுர்.

பிறகு இரண்டு மூன்று பேராகச் சேர்ந்து தைரியத்தோடு, முன் ஜாக்கிரதையாகக் கையில் தடியை ஓங்கியவாறு உள்ளே நுழைந்தார்கள். இன்ஸ்பெக்டரை மிரட்டிய மண்டை ஓட்டைக் காணவில்லை.

## 23

## சின்னப் பக்கிரி

அங்கே ஒரு கடப்பாரை மட்டும் கீழே கிடந்தது. ஒருவன் காளியின் கையிலிருந்த விளக்கைப் பிடுங்கிக்கொண்டு உள்ளே வந்தான். ஆனால் போலீஸ்காரர்களைத் தவிர அங்கே வேறு யாரையும் காணவில்லை.

"எங்கே அவன்? எங்கே அவன்?" என்று கத்தினார் இன்ஸ்பெக்டர்.

"எங்கே? எங்கே?" என்று ஒவ்வொருவரும் அதே கேள்வியைக் கேட்டுக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

அந்தச் சின்னக் குடிசையின் மூலை முடுக்கு, பானை, பத்தாயம் எங்கும் பார்த்துவிட்டார்கள்.

சின்னப்பக்கிரி தப்பி ஓடிவிட்டான். எப்படித் தப்பினான்?

"ஓடு ஓடு! பிடி பிடி!" என்று கூவினார் இன்ஸ்பெக்டர். எல்லாரும் அந்தச் சேரியின் நாலாபுறமும் விழுந்தடித்து ஓடினார்கள். சின்னப்பக்கிரியைத் தேடினார்கள்.

இருளில் போலீஸார் நாலாபுறமும் ஓடி, தேடிப் பார்த்தார்கள். போலீஸ் வானின் வெளிச்சம் கண்ணைக் கூச வைப்பது போல அந்தச் சேரியை நோக்கி அடித்துக்கொண்டிருந்தது. சிலர் டார்ச்லைட் உதவி கொண்டு தேடினார்கள்.

உள்ளே நுழைந்த இன்ஸ்பெக்டர் முகத்தில் வியப்பு, கோபம், அவசரம் எல்லாம் கலந்திருந்தன. அந்தக் குடிசைக்குள்ளிலிருந்து ஒருவன் அதற்குள் எப்படி மயமாக மறைந்துவிட முடியும்? இது ஏதாவது குறக்களி வித்தையா? மந்திர மை வித்தையா? ஒன்றும் புரியவில்லை அவருக்கு.

காளி, பத்திரகாளியாக மாறிவிட்டாள். "ஐயையோ! ஓடியாங்களேன்! எல்லாருமே வந்து எங்களை என்னமோ செய்யிறாங்களே!" என்று பயங்கரமாகக் கூவி, சேரியைக் கூட்டிவிட்டாள்.

அந்தக் குடிசைகளிலிருந்த ஆண் - பெண்களில் சிலர் என்னவோ, ஏதோ என்று தடியும் ஆயுதங்களும் எடுத்துக்கொண்டு ஓடோடி வந்தனர். மற்றும் சிலர் விழித்துக்கொண்டே கூச்சலையும், அதன் போக்கையும் கவனித்துக்கொண்டிருந்தார்கள். தெரு நாய்கள், மனிதர்களுடைய ஆரவாரத்துக்கு மேல் ஊரே கிடுகிடாய்க்கும்படி ஒருமிக்கச் சேர்ந்து நீளம் நீளமாகக் குலைத்துக்கொண்டிருந்தன.

"எங்கே அவன்?" என்று இன்ஸ்பெக்டர் காளியைப் பார்த்து மிரட்டும் குரலில் கர்ஜித்தார். குடிசைக்குள்ளே ஓடிய பூனை புதிய மனிதர்களைக் கண்டு எந்தப் பக்கமாக வெளியேறுவது என்று புரியாமல் பதுங்கிக்கொண்டிருந்தது. சீனனும் ஷங்கனும் அதையே கவனித்தார்கள். அதிலும் ஷங்கன் அதன்மீது வைத்த கண்ணை எடுக்கவேயில்லை. இருட்டில் அது சற்றுமுன் அவனை என்ன பாடு படுத்திவிட்டது! அதனால் வந்த ரகளைதானே இத்தனை அமர்க்களமும்?

சரியான பதில் சொல்லாமல் காளி இன்ஸ்பெக்டர் முன் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தபோது அந்த வெள்ளைப் பூனை குப்பென்று குட்டைச் சுவரிலுள்ள கூரைமீது தாவிப் பாய்ந்தது. அப்போதுதான் ஷங்கன் கவனித்தான். கூரையில் ஓர் ஆள் புகுந்து போகக்கூடிய அளவில் இடைவெளி இருந்தது. அதன் வழியாகத்தான் பூனை வெளியே செல்ல முயன்றது. அங்குள்ள சந்தடியில் யாரும் பூனையையோ கூரையில் இருந்த அந்த இடைவெளியையோ, இவையிரண்டையும் கவனித்துக்கொண்டிருந்த ஷங்கனையோ கவனிக்கவில்லை. பூனை போலவே ஷங்கன் மெதுவாகப் பதுங்கி, அந்த இடைவெளியினுள் நுழைந்தான். என்ன ஆச்சரியம்! ஓர் ஆள் வெகு சுலபமாக அதன் வழியாக வெளியே தப்பித்துச் செல்ல முடிந்தது. அங்கிருந்து தப்பித்துக்கொண்டால் அருகிலுள்ள கூவத்துக் கரையை எட்டிவிடலாம். கரையை எட்டிவிட்டால் பிறகு ஒருவர் கண்ணிலும் படாமல் தப்பித்துச் செல்வதா ஒரு பிரமாதம்?

ஷங்கன் கூவத்தின் இருண்ட கரையையும் அங்கே நிறுத்தப்பட்டிருந்த சின்னப் படகையும் கவனித்தான். அவனுடைய கவனம் வீண் போகவில்லை. கறுப்புக் கம்பளி போர்த்த உருவம் படகைத் தண்ணீரில் தள்ளி, படகுக் கோலைத் தூக்கி வைத்துக்கொண்டது. இதையெல்லாம் கவனித்த அவன், "ஹோய்!" என்று கத்தினான். ஆனால் அந்தக் கூச்சல் படகிலிருந்த உருவத்துக்கு மட்டுந்தான் கேட்டதேயொழிய, குடிசைகளுக்கு முன்பு உள்ள போலீஸாருக்கோ மற்றவருக்கோ கேட்கவில்லை. உடனே அந்த உருவம் படகுக்குள் தன்னை ஒளித்துக்கொள்ள முயன்றது. ஆனால் ஷங்கனின் பார்வையிலிருந்து அது தப்பவில்லை.

ஷங்கன் விரலை மடக்கி விசில் அடித்தான். இன்ஸ்பெக்டர் இதைக் கேட்டு வெளியே வந்துவிட்டார். அவர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஷங்கன், "எல்லாரும் ஓடி வாங்க! ஆள் அதோ படகில் இருக்கான்! ஜல்தி வாங்க!" என்று கத்திக்கொண்டே கூரைமீதிருந்து குதித்து, படகை நோக்கி ஓடினான். அவன் படகுப் பக்கமாய் நெருங்குவதற்கும், அதனுள் பதுங்கியிருந்த பக்கிரி எழுந்திருப்பதற்கும் சரியாக இருந்தது.

இன்னும் மயிரிழை தப்பியிருந்தால் ஷங்கன்மீது அவன் பாய்ந்திருப்பான். ஆனால் ஷங்கன், பக்கிரி எதிர்பாராத விதமாக

அவனுடைய முதுகின்மீது, மகா துணிச்சலுடன் பாய்ந்து, உடும்பு ஒட்டிக்கொள்வதுபோல் பிடித்துக்கொண்டான். பக்கிரியினல் திமிற முடியவில்லை; உதறி எறிய முடியவில்லை. இன்னும் ஒரு நிமிஷம் தாமதித்திருந்தால் பக்கிரி அவனேடு சேர்ந்து கூவம் ஆற்றில் குதித்திருப்பான். ஆனல் அதற்குள் இன்ஸ்பெக்டரும் இன்னும் இரண்டு ஜவான்களும் கையில் துப்பாக்கிகளுடன் ஷங்கங்கின் உதவிக்கு ஓடிவந்து விட்டார்கள்.

"அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அசைந்தாயோ உன்னைச் சுட்டுத் தள்ளிவிடுவேன்!" என்று கூச்சலோடு எச்சரித்தார் இன்ஸ்பெக்டர்.

அப்படி வெறும் எச்சரிக்கையோடு நில்லாமல் ஆகாயத்தை நோக்கி ஒரு முறை சுட்டுக் காண்பித்தார். 'டுமீல்!' என்ற துப்பாக்கியின் சத்தம் கூவம் ஆற்றின் எதிர்க் கரையின்மீது எதிரொலித்துச் சென்றது.

பக்கிரி அசையவில்லை. தப்பி ஓடவோ, தண்ணீரில் குதிக்கவோ முயலவில்லை.



அடுத்த கணம் என்ன நடக்க வேண்டுமோ அது நடந்துவிட்டது. பக்கிரியின் இரண்டு கைகளையும் சேர்த்து, இன்ஸ்பெக்டரின் கட்டளைக்கு இணங்க, இரண்டு போலீஸ்காரர்கள் விலங்கை மாட்டினர்கள்.

* * *

கூறுப்புக் கம்பளியைப் போர்த்துக்கொண்டு பறங்கிமலைப் பங்களாவில் கழுத்தை நெறிக்க வந்தவன் இந்தப் பக்கிரியே என்பதை அறிந்துகொண்ட சீனன் ஆத்திரங்கொண்டான். இவன் எப்படி கிங்கிங்குக்கு அறிமுகமானன்? எப்படிக் இவர்கள் இருவரும் சேர்ந்துகொண்டார்கள்? இவர்கள் எதற்காக, என்ன சதி செய்தார்கள்?

உலகத்தில் பல விஷயங்கள் இப்படித்தான் விசித்திரமாகவும் விபரீதமாகவும் நடக்கின்றன. பணம், பதவி இரண்டும் ஒருவனுக்குக் கிடைத்துவிட்டால் அதற்கு எத்தனை போட்டி! எத்தனை பொருமை! உற்ருர் உறவினர் என்று யாராக இருந்தாலும் அவர்கள் எப்படியெல்லாம் திடீரென்று மாறிவிடுகிருர்கள்! அதற்குச் சின்னப் பக்கிரி மட்டும் விலக்கா, என்ன?

அவன் வழக்கம்போல், பேப்பர்க் கடைக்காரனிடம் சீன னுடைய சம்பளத்தைக் கேட்டு வாங்கிப் போக வந்தான். அங்கே போன பிறகுதான் சினன் வீட்டுக்கு இரண்டு நாளாக வராதது போலவே கடையிலும் வேலை செய்ய வருவதில்லை என்று தெரிய வந்தது. சின்னப் பக்கிரிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இந்த ஷங்கங் பயலோடு சேர்ந்துகொண்டு சீனன் கடைக்கு வராமல் இருக்கிறான் என்று கோபம் கொண்டான். இரண்டு நாளாகக் குடை ரிப்பேர் செய்வதிலும் வரும்படியில்லை. காளியோ பத்திரகாளியாக விளங்கினாள். தினம் நாலணா எட்டணா சம்பாதிக்கிறவன் வீட்டுப் பக்கமே வராமல் இருந்தால் எரிச்சல் வராதா? அதற்கு அப்புறம் அவர்களுக்குச் சீனனைப்பற்றித் தெரிந்துகொள்ள ஒரு வாரம் ஆயிற்று.

அவனுக்குத் திடீரென்று ஏதோ அதிருஷ்டம் வந்துவிட்டது என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. ஆனாலும் அது எத்தனை பெரிய அதிருஷ்



டம் என்பது அவர்களுக்கு முதலில் தெரியாது. சீனனும் ஷங்கங்கும் காரிலே போகக்கூடிய அளவுக்கு வந்துவிட்டார்கள் என்பதைக் கண்ட பிறகுதான்

கொஞ்சம் புரியத் தொடங்கியது. அக்கம் பக்கத்தில் அப்படி இப்படி விசாரித்ததில் சீனனுக்கு இப்போது அடித்திருக்கும் அதிர்ஷ்டத்தைப்பற்றித் தெரிந்துகொண்டார்கள்.

"பிள்ளை, பிள்ளை என்று எடுத்துவந்து வளர்த்தோமே, அந்தப் பிள்ளையைப் பார்த்தியா? நம்பகிட்டே வந்து உண்மையைச் சொன்னுஞ?" என்று ஆத்திரப்பட்டாள் காளி.

"வரட்டும்; இன்னிக்கு எப்படியும் அந்தப் பயலைக் கையோடு இருந்து பார்த்துப்புட்டுத்தான் போறது—" என்று கறுவினன் பக்கிரி.

அன்றுதான் சீனனும் ஷங்கங்கும் டார்ஜான் பிக்சர் பாலஸ் போயிருந்தார்கள். அங்கு நடந்ததையும், அதற்குப் பிறகு நேர்ந்த சம்பவங்களையும் நாம் பார்த்துவிட்டோம். சின்னப் பக்கிரியும் காளியும் வண்டிக்குமுன் வந்து நின்று வழி மறித்ததை நாம் பார்த்தோம். அவர்கள் கூப்பிடக் கூப்பிடக் காதில் விழாதபடி வண்டி புறப்பட்டுப் போய்விட்டது.

"அட பாவிப் பயலே! கூப்பிடக் கூப்பிடக் காதில் விழாதவன் போலப் போறதைப் பாத்தியா?" என்ருள் காளி.

"காதிலே விழுமா இப்போ?" என்று பின்னல் ஒரு குரல் கேட்டது. காளியும் சின்னப் பக்கிரியும் திரும்பிப் பார்த்தார்கள். அங்கே கிங்கிங் நையாண்டியாகச் சிரித்தபடி நின்ருன்.

காளி அவனைச் சரியாகக் கவனியாமலே, "அநாதையா இருந்த பயலை நாங்க கொண்டாந்து வளத்து, சோறு போட்டோம் ஐயா; இப்போ நாங்க நிக்கிறது அவனுக்குக் கண்ணிலேயே படல்லியே!" என்ருள்.

"அதாம்மா, இப்ப அவனுக்கு எதுவும் காதிலும் விழாது; கண்ணிலேயும் படாது" என்று அவர்களுடைய ஆத்திரத்தைக் கிளறிவிட்டான் கிங்கிங்.

"இப்ப, இப்பங்கிறீங்களே, அப்படி என்ன வந்திடிச்சி இவனுக்கு இப்போ? அதைத்தான் சொல்லுங்களேன்!" என்று கேட்டான் சின்னப் பக்கிரி.

"ஆமாம்; இப்படிக் கிட்டே வா. முதல்லே நீ இவனுக்கு என்ன வேணும்? அதைச் சொல்லு" என்று கேட்டான் கிங்கிங்.

"நாஞ? நான் வந்து அவனுக்குச் சித்தப்பன் வேணுங்க!"

"சொந்தச் சித்தப்பஞ?"

இப்படி அவன் கேட்டதும், சின்னப் பக்கிரி அவனை உற்றுப் பார்த்தான். அவனுக்குத் திடீரென்று ஏதோ யோசனையாகப் போய்விட்டது. அவனைப் பார்த்தால் அவன் வெளியூர்க்காரன் என்று உடனேயே தெரிந்துவிட்டது. இதில் அவனுக்கு என்ன அக்கறை வந்தது என்று சந்தேகம் வந்துவிட்டது.

கிங்கிங், விஷமமாகச் சிரித்துக்கொண்டே, "நான் நெனச்சேன். உன்னைக்கூட இதுக்கு முந்தி எப்போதோ பார்த்த மாதிரி இருக்குது. இதுக்கு முந்தி நீ வேறே எந்த ஊரிலேயாவது இருந்திருக்கிறுயா?" என்று கேட்டான்.

"ஏன், இருந்திருக்கேன். எம் பேரைக் கேட்டாலே தெரிஞ்சிக்கலாமே. சிங்கப்பூர்ச் சின்னப் பக்கிரிங்கறதுதான் எம் பேரு..."

கிங்கிங் தூக்கிவாரிப் போட்டவன்போல் திகைத்து நின்றுன். உண்மையிலேயே அவனுக்குத் தூக்கி வாரித்தான் போட்டது. "எனக்கு எந்த ஊர் தெரியுமா? நானும் அங்கேயிருந்துதான் வந்திருக்கேன்" என்றுன்.

"அப்படிங்களா?"

"ஆமாம்."

"அப்ப ரொம்பச் சந்தோசங்க. மூகத்தைப் பார்த்தாலே தெரியுதுங்க. வந்து...இந்தச் ஏனனை உங்களுக்கு எப்படித் தெரியுங்க?" என்றுன் பக்கிரி.

கிங்கிங் சிறிது யோசித்தான். பிறகு சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் காளியிடம் கொடுத்து, "இந்தா, இதை இப்போதைக்குச் செலவுக்கு வச்சிக்க. அப்பறமா இன்னும் கூடத் தரேன். வா, பக்கிரி, போய் எங்கியாவது ஏதாவது சாப்பிட்டுட்டு வரலாம். எங்க ஊரிலே இருந்தவங்களைப் பார்த்தா எங்க ஊரையே பாத்தாப்பலே இருக்கு" என்றுன். காளிக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. "நீங்க நல்லாயிருக்கணும்" என்று சொல்லிவிட்டு அவள் போய்விட்டாள்.

"ஆமா, ஒரு சந்தேகம்?" என்றுன் பக்கிரி.

"என்ன? சீனன் விஷயந்தானே! எனக்குத் தெரியும் நீ எதுவும் சந்தேகப்படுவேன்னு. இப்ப அவனுக்கு என்ன வாழ்வு வந்திட்டுதுன்னுதானே கேட்க வர்றே?"

"ஆமாங்க!"

"அப்படிக் கேளு..அதைத்தான் நான் உங்கிட்டே தனியாச் சொல்லணும்னு நினைக்கிறேன். இப்ப அவன் திடீரென்று பணக்காரனுயிட்டதாக எண்ணிக்கிட்டிருக்கிறுன். ஆனல் உண்மையிலே அப்படியில்லே. அது இன்னிக்குத் தெரியுமா அவனுக்கு? அப்புறந்தான் விளங்கும். அது கெடக்கட்டும் வா, போவோம்" என்று பக்கிரியை அழைத்துக்கொண்டு அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டான்.

"நான் சொன்னதை மட்டும் தட்டாமே கேட்டியோ, உனக்கும் வேண்டிய பணம் கிடைக்க வழியிருக்குது. ஆனல் உன் மேலே எனக்கு நம்பிக்கை வரவேணுமே. எப்படி உன்னை நான் திடீரென்று நம்புவது?" என்றுன் கிங்கிங்.

"அதென்னங்க அப்படிச் சொல்லிட்டீங்க! நம்பிக்கை வரும் படியா எதுவேணுலும் சொல்லுங்க. செய்யாட்டி அப்புறம் பாருங்களேன்!" என்று வேகமாகக் கூறினுன் பக்கிரி.

"முதல்லே இதைச் சொல்லு! இந்தப் பையன் உனக்கு என்ன வேணும்?"

பக்கிரி சிறிது நேரம் பதில் சொல்ல முடியாமல் திகைத்தான்; விழித்தான்.

"நீ சொந்தச் சித்தப்பன் இல்லையே?"

வேறு வழியின்றி பக்கிரி உண்மையை ஒப்புக்கொள்ள எண்ணி, இல்லை என்பதுபோல் தலையை ஆட்டினுன்.

"சபாஷ்! அப்படியானுல் நான் நினைத்ததுதான் சரி. நான் உன்னைப் பணக்காரனுக்குவேன். நீ உடனே ஒரு டாக்ஸி கொண்டு வா. பறங்கிமலைப் பங்களாவுக்குப் போவோம். சீனன் வைத்திருக்கும் சு-சூ தோல் பெட்டியை முதலில் அபகரிக்க வேண்டியது உன் பொறுப்பு. அந்த முயற்சியில் அவனுடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்தாலும் நீ தயங்கக் கூடாது. நீ மாட்டிக்கொண்டாலும் என்னைக் காட்டிக் கொடுக்கக்கூடாது. அதற்கு என்னுடைய காணிக்கையாக, இந்தா, இதை முதலில் வைத்துக்கொள்!" என்று தன் பான்ட் பையினுள் கையை விட்டுப் பத்து நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

ஆயிரம் ரூபாயை ஒரே சமயத்தில் கண்ட பக்கிரிக்கு மூச்சு முட்டியது. அதை உடனே தன் மடியில் பத்திரமாகச் செருகி வைத்துக்கொண்டு, "இதோ போய் டாக்ஸி கொண்டு வருகிறேன்! இப்பவே அங்கே போகலாம்!" என்ருன்.

பக்கிரியும் கிங்கிங்கும் இப்படித்தான் ஒன்று சேர்ந்தார்கள்; சதி செய்தார்கள். பாரிஸ்டர் வீட்டிலிருந்து சீனனும் ஷங்கங்கும் புறப்பட்டு, பறங்கிமலைப் பங்களாவுக்குச் சென்றபோது கிங்கிங் எதிரே நின்ருன் அல்லவா? அப்போதுதான் பக்கிரி டாக்ஸி கொண்டு வரப் போயிருந்தான். அவர்களுடைய டாக்ஸிதான் சீனனுடைய வண்டியைப் பின்தொடர்ந்தது. ஆனுல் முன்னுல் போகும் வண்டியைத் தெரிந்து அவர்கள் பின்பற்றவில்லை.

கிங்கிங் வண்டியைப் பங்களாவின் இறக்கத்தில் நிறுத்தினுன். பக்கிரி மதில் ஏறிக் குதித்து, சாக்கடைக் குழாய் வழியாக மேலே ஏறினுன். இன்ஸ்பெக்டர் நம்பவில்லையே தவிர, சீனன் பார்த்ததாகச் சொன்னது உண்மையே. கிங்கிங் பாதையிலே மரக்கிளையைத் தள்ளிப்போட்டு, ஹோட்டலுக்குத் திரும்பிவிட்டான். பக்கிரி கட்டிலுக்கு அடியில் பதுங்கிக் கொண்டான். அதுவே அவனுக்கு இரண்டு விதத்தில் நன்மையாக முடிந்தது. அந்தக் கட்டில் பல விசைகள் அடங்கிய கட்டில்.

சீனன் பத்திரமாகப் பக்கத்தில் வைத்துக்கொண்ட சு-சூ பெட்டி, கட்டிலின் அடிப்பாகத்தில் வந்து விழுந்தது. ஒருவிதமான பிரயாசையுமின்றி, சு-சூ பெட்டி கிடைத்ததோடு அவனையும் ஒருவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. இதே சமயத்தில்தான் கிங்கிங் ஹோட்டலிலிருந்து சீனனுக்குப் போன் செய்தான். வாயைத் திறந்தால் உயிர் போய்விடும் என்று மிரட்டியவன் கிங்கிங்தான்.

ஆயினும் என்ன? குற்றவாளிகள் என்றைக்குமே தப்பிவிடுவதில்லை. சிலர் உடனே சிக்கிவிடுவார்கள். சிலர் கொஞ்சநாள் கழித்துச் சிக்கிக்கொள்ளலாம். ஆனால் என்றைக்குமே அவர்கள் செய்த குற்றத்திலிருந்து தப்பித்து விடுவதில்லை. பக்கிரி இப்போது அகப்பட்டுக்கொண்டது அதைத்தான் விளக்கியது.

மறுநாள் பாரிஸ்டர் வீட்டில் பேசிக்கொண் டிருந்தபோது யாரோ மறைந்து செல்வதுபோல் இருந்ததாகச் சீனன் கருதினானே, அதுவும் பக்கிரியின் வேலைதான். அவன்தான் பாரிஸ்டரைப் பார்க்க வந்தவன். பாரிஸ்டருக்குப் பக்கிரியைத் தெரியாது. அவருடைய பாலில் மயக்கப் பவுடரைக் கலந்தவன் அவன்தான். ஆனால் அதைப் பாரிஸ்டர் கவனித்துவிட்டார் என்பது அவனுக்குத் தெரியாது. பிறரை ஏமாற்றுவதிலேயே குறியாக இருப்பவர்கள் தம்மையறியாமலேயே தாம் ஏமாறுவதை உணருவதில்லை. ஏமாற்ற எண்ணுகிறவர்களுடைய கதியே இதுதான். தாமே ஏமாறுவதை அவர்கள் அறிவதில்லை. பாரிஸ்டர் வீட்டிலிருந்து நீலப் பிளானை எடுத்துச் செல்வதுதான் கிங்கிங்கின் திட்டம். முடிந்தால் கிழவருடைய உயிலையும் அதன் நகலையும் அபகரித்து விட வேண்டும் என்று திட்டம் போட்டான். நீலப் பிளானை அபகரித்து விட்டான். சு-சூ பெட்டி கிடைத்து விட்டது; நீலப் பிளானும் கிடைத்துவிட்டது. இனி உயில் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை என்றுதான் அவன் ஒருவருக்கும் தெரியாமல் புறப்பட்டு விட்டான்.

பக்கிரி மட்டும் இல்லாவிட்டால் இவ்வளவும் அவனுக்கு நடந்திருக்குமா?

சீனனுக்கு இப்போது பல விஷயங்கள் ஒரே குழப்பத்தைக் கொடுத்தன. சு-சூ பெட்டியின் மர்மம் என்ன? மண்டையோட்டின் மர்மம் என்ன? கிழவர் அதைக் கண்டு ஏன் முதலில் மூர்ச்சித்து விழுந்தார்? நீலப் பிளானில் என்ன இருக்கிறது? கிங்கிங் ஏறிய கப்பல் புறப்பட்டுவிட்டதா, புறப்படப் போகிறதா? அந்த மண்டை ஓடு மீண்டும் பக்கிரியிடம் எப்படி வந்தது? பக்கிரி, தன் குடிசையினுள் ஏன் பூமியைப் பள்ளம் தோண்டிக்கொண் டிருந்தான்? சீனனுக்குப் பக்கிரி சிற்றப்பன் இல்லையென்றால் அவன் யார்?

இவையெல்லாம் சீனனுக்கு மட்டுமா குழப்பத்தைக் கொடுத்தன? இல்லை; எல்லாருக்குந்தான் குழப்பத்தைத் தந்தன.

## 24

## நல்ல முடிவு

சீனனுக்கு அந்தக் குழப்பத்தின் நடுவிலும் ஒரு விஷயம் மிகுந்த ஆறுதலைக் கொடுத்தது. அது என்ன தெரியுமா? அதுதான் பக்கிரி அவனுடைய சொந்தச் சிற்றப்பன் இல்லை என்பது. அவனைத் தன் சிற்றப்பன் என்று சொல்லிக்கொள்ள அவனுக்கு எப்போதுமே அருவருப்பாகத்தான் இருந்தது. காளியைச் சின்னம்மா என்று அழைக்க அவன் விரும்பியதேயில்லை. இருவருடைய குணமும் அவனுக்கு வெறுப்பைத் தந்தது. 'இவன் எனக்கு ஒரு சிற்றப்பனாக வந்து வாய்த்தானே!' என்று அவன் எத்தனையோ முறை ஷங்கங்கிடம் சொல்லிச் சொல்லி வேதனைப் பட்டிருக்கிறான். இப்போது அந்த வேதனை மறைந்துவிட்டது. அப்படியானால் சின்னப் பக்கிரி யார்? அவனிடம் சீனன் எப்படி வந்து சேர்ந்தான்!

அது ஒரு தனிக் கதை. அதைத் தெரிந்துகொண்டபின் போவதாக இருந்தால் கிங்கிங் ஏறிச் செல்ல விருந்த 'ஜல-கங்கா' போய் விடும்.

ஆகவே இன்ஸ்பெக்டர் துரைராஜுடனும் அவர் கோஷ்டியுடனும் சீனனும் ஷங்கங்கும் புறப்பட்டுச் சென்றார்கள். கிங் கிங்கை அடையாளம் காட்ட வேண்டுமே!

கப்பல் புறப்படுவதற்குமுன் இப்படி ஒரு துரதிருஷ்டம் தனக்கு நேரும் என்று கிங்கிங் எதிர்பார்க்கவேயில்லை. எதற்காகப் பெரிதும் பாடுபட்டானோ அது அவனுக்குக் கிடைத்துவிட்டது. அதைப் பத்திரப்படுத்திவிட்டு ஆனந்தப்பட்டுக்கொண் டிருந் தான். ஆச்சு; இன்னும் சரியாக அரைமணி நேரந்தான். அப்புறம் அவனை யார் என்ன செய்ய முடியும்? கப்பல் துறை முகத்தைக் கடந்துவிட்டால் அவனை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. அவனுக்கு வேண்டியதெல்லாம் அந்தப் பெட்டி ஒன்று தான். கிழவருடைய சொத்துக்கள் அவனுக்குக் கிடைக்காததைப் பற்றிக்கூட அவனுக்கு வருத்தமில்லை. அந்தப் பெட்டி இப்போது தன்னிடம் இருப்பது வேறு ஒருவருக்கும் தெரியாது என்றே அவன் எண்ணினான். பக்கிரிக்குத் தெரிந்ததும் ஒன்றுதான்; தெரியாததும் ஒன்றுதான். இனி அவன் எங்கே தன்னைப் பார்க் கப் போகிறான்! தன்னுடைய பெயர்கூட அவனுக்குச் சரியாகத் தெரியாது.

கிங்கிங் இருந்த கப்பல், வியாபாரக் கப்பல். சரக்குகளை இறக்கி ஏற்றிக்கொண்டு அது நேராகச் சிங்கப்பூர் போக வேண் டும். கப்பலில் ஏறியதுமே அநேகமாக அவன் தன் ஊர் போய்ச்

சேர்ந்துவிட்டதாகவே எண்ணினான். அந்த உற்சாகத்தில் கப்பலின் தளத்திலே வந்து நின்று கடலையே வென்று விட்டவன் போல் சிட்டியடித்தான். ஆனால் அவனுடைய உற்சாகத்தைத் தடுப்பதுபோல் கப்பல் சிப்பந்தி ஒருவன் ஓடிவந்து, "ஸார்! யாரோ உங்களைப் பார்க்க வேணுமாம்; காப்டன் கூப்பிடுகிறார்!" என்று கூறினான்.

"என்னையா? எதற்காக?"

"உங்களைத்தான்! எதற்காக என்று தெரியாது!" என்றான் சிப்பந்தி. ஆயினும் அவன் முகத்தில் இருந்த கலவரத்தை அவன் உணர்ந்துகொண்டுவிட்டான்.

"யாராவது அவரோடுகூட இருக்கிறார்களா?"

இதற்கு அந்தச் சிப்பந்தி எதையும் குறிப்பாகச் சொல்லாமல் தலையை மட்டும் அசைத்தான். இந்த நேரத்தில் கப்பல் காப்டன் அழைப்பது என்றால் அது சாதாரணமான விஷயம் அல்ல. ஆகவே அவன் நெஞ்சு துணுக்குற்றது. உடனே அவன், "சரி, நீ போ! இதோ வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு, தன்னுடைய காபினை நோக்கி அவசர அவசரமாக ஓடினான். ஜன்னல் வழியே பார்த்தபோது மோட்டார்ப் படகு நிற்பது தெரிந்தது. அவன் தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டு விட்டான்.

அங்கே அவனுடைய வேலைகளை முடித்துக்கொள்ள ஐந்து நிமிஷங்கூட ஆகவில்லை. அவன் காபினைச் சாத்தி மூடிக்கொண்டு திரும்பியபோது, "நீங்கதானா கிங்கிங் என்பது?" என்று ஒரு குரல் மிடுக்காகக் கேட்டது.

அவன் அதை எதிர்பார்க்கவில்லை. அப்படிக் கேட்டவரைக் கண்டதும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏனெனில் அவருடைய கையில் இருந்த சுழல் துப்பாக்கி அவர் யாராக இருக்கும் என்பதைக் காட்டிவிட்டது.

"எங்கே, அதை இப்படிக் கொடுங்கள்!" என்று நிதானமாக, உறுதியாகக் கேட்டார், துப்பாக்கியை வைத்திருந்த மனிதர்.

"எதை?" என்றான் கிங்கிங்.

அதிகம் வளர்த்துவானேன்? அவன் தன் கால்சட்டைப் பையில் ஒளித்து வைத்திருந்த கைத் துப்பாக்கியை, துறைமுகப் பாதுகாப்பு இன்ஸ்பெக்டர் முதலில் வாங்கிக்கொண்டுவிட்டார். இதன் பிறகு நடந்ததையெல்லாம் விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அடுத்த அரைமணி நேரத்துக்குள் கிழவரைத் தாக்கிய குற்றத்துக்கும், பிறர் பொருளை அபகரித்த குற்றத்துக்கும், பாரிஸ்டர் வீட்டில் துராக்கிருதமாக நுழைந்து பிளானைத் திருடிய குற்றத்துக்கும் இன்னும் பக்கிரியோடு சேர்ந்து செய்த சதிகளுக்குமாக அவன் அந்த இடத்திலேயே, கப்பல் காப்டன் முதலானோர் முன்னிலையில் இன்ஸ்பெக்டர் துரைராஜினால் கைது

செய்யப்பட்டான். அவனுடைய உடைமைகள் யாவும் அந்த இடத்திலேயே பறிமுதலாயின. ஆனல் என்ன தேடியும் அவர்கள் தேடிவந்த அந்தச் சு-சூ பெட்டியை மட்டும் காணவில்லை.

"அது எங்கே?" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"எனக்கு என்ன தெரியும்?" என்ருன் கிங்கிங்.

"சரி; ஆனல் இந்த நீலப் பிளான் உன்னிடம் எப்படி வந்தது?"

"எப்படி என்று என்ன கேள்வி? அது என்னுடைய பிளான். என்னிடம் இருக்கிறது" என்ருன் கிங்கிங்.

இன்ஸ்பெக்டருக்கு அதற்குமேல் அவனை என்ன கேட்பது என்று புரியவில்லை. "பக்கிரியை அழைத்து வந்தால்தான் இவன் வழிக்கு வருவான்" என்று அவர் சீனனைப் பார்த்துக் கூறினர்.

"ஸார்! எனக்கு ஒரு சந்தேகம்!" என்ருன் ஷங்கங்.



"சட்..நீ சித்தே சும்மா இருப்பா! உனக்கு எப்பவும் ஏதாவது சந்தேகம் வந்துக்கிட்டே இருக்கும்!" என்றார் துரைராஜ்.

ஷங்கங் உடனே சீனன் காதருகில் ஏதோ சொன்னான். சீனன் முகம் வியப்பினால் விரிந்தது.

"சரி ஸார்! நீங்க இந்த ஆளோடு முன்னால் போங்க. நாங்க இப்படி இந்த வழியாகச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகிறோம்" என்று சொல்லிவிட்டு, சீனனும் ஷங்கங்கும் புறப்பட்டார்கள்.

போலீஸ் ஸ்டேஷனில் தனக்கு முன்னால், பக்கிரி கையில் விலங்குடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததுமே கிங்கிங் இடிந்து போனான்.

"போடா முட்டாளே!" என்று கத்தினான் கிங்கிங்.

"அட மோசக்காரா?" என்று கறுவினான் பக்கிரி.

* * *



சீனனுடைய மூளையைக் குழப்பிய விஷயங்களுக்கு விளக்கமே கிடைக்காமல் போயிருக்கலாம்.

ஆனால் மிகப் பெரிய யந்திரத்தை ஒரு சிறு விசை இயக்குவதுபோல ஷங்கங்குடைய விசித்திரமான அற்ப சந்தேகம் அந்தப் பெரிய புதிர்களை விடுவிக்கக் காரணமாக இருந்தது. இன்ஸ்பெக்டர் துரைராஜ் அதன் அருமை புரியாமல் அலட்சியம் செய்தாரே தவிர, சீனன் அப்படி அலட்சியம் செய்யவில்லை.

ஷங்கங்குக்குத் தோன்றிய அந்தச் சந்தேகம் இதுதான்.

யாருக்கும் பார்த்தவுடனேயே ஏற்படக்கூடிய சந்தேகம் தான் அது அந்தக் கப்பல் வியாபாரச் சரக்குகள் ஏற்றும் கப்பல். அதுவும் கிங்கிங்குடைய காபினுக்கு முன்னால் வந்து நின்றால் ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகள் எல்லாம் கீழ்த் தளத்தில் அடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதையே இன்னும் சற்று ஊன்றிப் பார்த்தால் பெரிய பெரிய கள்ளிப் பெட்டிகளுக்கு இடையே ஒரு கோணிப்பை ஒளித்து வைக்கப்பட்

டிருப்பது தெரியும். பக்கத்துப் பெட்டியின் மேல் பலகை கழற்றப் பட்டிருப்பதும் தெரியும். மறு நாள் பார்த்திருந்தால் கோணிப்பை மறைந்திருக்கும். அதாவது நடுக் கடலில் போய் விழுந்திருக்கும். அதை யார் செய்திருப்பார்கள்? கிங்கிங்தான் செய்திருப்பான்!

ஏனெனில் கள்ளிப் பெட்டியின் மேல் பாகத்தைக் கழற்றிய வன் அவன்தான். அதிலிருந்த கைலித் துணிகளில் சிலவற்றை வெளிப்படுத்திக் கோணியில் அடைத்தவனும் அவன்தான். கைலித் துணிகளை அப்புறப்படுத்திய காலி இடத்தில் ஒரு சிவப்புப் பெட்டியைப் பூட்டிச் சீலிட்டு, விலாசம் ஒட்டிப் பதுக்கி வைத்த வனும் அவனே. அதன் மேல் இப்படி எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்: ''இந்தப் பெட்டியைச் சிங்காரவேலன், 111, டாஞ் சோங் தெரு, சிங்கப்பூர் என்ற விலாசத்தில் சேர்ப்பிக்கவும்.''

அந்தப் பெட்டியைக் கிங்கிங் அங்கே பதுக்கி வைத்தான் என்பது ஷங்கங்குக்கு எப்படித் தெரியும்? அது வெறும் ஊகம் தான். கோணியைப் பார்த்த ஷங்கங் முதலில் சாதாரணமாகத் தான் சந்தேகப்பட்டான், அதனுள் அவர்கள் தேடும் பொருள் இருக்குமோ என்று. ஆனால் சீனனும் அவனும் போய்ப் பார்த்த போது அதனுள் ஏழெட்டுக் கைலித் துணிகளே இருந்தன. பக்கத்துப் பெட்டியின்மேல் ஆணி கழற்றப்பட்டிருந்தது. அந்தப் பலகையை மீண்டும் ஆணி வைத்து அடிக்கவில்லை. காரணம் கழற்றிய ஆணி பக்கத்திலேயே வளைந்து கிடந்தது. அது உபயோ கப் படாததால் வேறு நல்ல ஆணி கொண்டுவந்து அடிப்பதற்காக அப்படியே பெட்டியை மூடியதுபோல் விடப்பட்டிருந்தது. சீனன் அந்தப் பலகையை மெதுவாகத் தொடவே அது நகர்ந்தது. ஷங்கங் எட்டிப் பார்த்தான். முன்பு ஹோட்டலில் சீனன் வைத் திருந்த சிவப்புப் பெட்டி அதனுள்ளே இருப்பது தெரிந்து விட்டது. பழம் நழுவிப் பாலில் விழ, அதுவும் நழுவி வாயில் விழுந்த கதையாக முடிந்தது அவனுடைய சந்தேகம். கிங்கிங்கினு டைய மூளை அபாரமாகத்தான் வேலை செய்கிறது. ஆனால் அதை விட ஷங்கங்குடைய சந்தேக மூளைதான் சீனனுக்கு உயர்வாகப் பட்டது. இருவரும் அந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு இன்ஸ் பெக்டரோடு போய்ச் சேர்ந்துகொண்டார்கள்.

* * *

சிங்கப்பூர் சிங்காரவேலன் வீட்டில் ஆண் பிள்ளைகள் யாரும் இல்லை. ஒரே ஓர் அம்மாள்தான் பைத்தியம் பிடித்த நிலையில் கிட்டத்தட்டக் கைதிபோல இருந்து வந்தாள். அவளுக்குத் துணை யாக ஒரு பர்மாக்காரி மட்டுமே இருந்தாள். அந்தப் பர்மாக்காரி யின் வேலை என்னவென்றால் அந்த அம்மாளுக்கு வேளைக்குச் சமைத்துப் போடுவது அந்த அம்மாள் வெளியில் எங்கும் போகா மல் பார்த்துக்கொள்வது. அவ்வளவுதான். பர்மாக்காரிக்குத் தமிழ் தெரியாது. எல்லாம் சைகை மூலமாகவும் உத்தேசமாகவும் தான் நடந்தன.

தமிழ் தெரிந்தவர்கள் யாரும் அந்த வீட்டிலேயே நுழைய முடியாது. காரணம், அந்த வீட்டின் எஜமான் அடிக்கடி வெளியூர் போய்விடுவதால், யார் வந்தாலும் அப்புறம் வந்து பார்க்கும்படி பர்மாக்காரி சைகை மூலமாகவே திருப்பி அனுப்பிவிடுவாள்.

அந்த வீட்டு எஜமான்தான் சிங்காரவேலன். சிங்காரவேலனுக்கும் கிங்கிங்குக்கும் என்ன சம்பந்தம் என்பதை அறிந்து கொண்டால், கிட்டத்தட்ட எல்லா மர்மங்களும் தெரிந்த மாதிரிதான்.

கிங்கிங் கைது செய்யப்பட்ட பதினைந்தாவது நாள் இரண்டு இளைஞர்கள் அந்த வீட்டில் நுழைந்து கதவை இடித்தார்கள். பர்மாக்காரி கதவைத் திறந்தாள். வழக்கம்போல அப்புறம் வரும்படி கூறினாள்.

அந்த இளைஞர்களில் ஒருவன் உடனே நூறு ரூபாயை எடுத்து அவளிடம் கொடுத்து, "சிங்காரவேலன் கொடுக்கச் சொன்னார். அவர் வரும்வரையில் எங்களை இங்கே இருக்கச் சொன்னார்" என்று சிவப்புப் பெட்டி ஒன்றைக் காட்டினான்.

ஆம்; அவர்கள் சீனனும் ஷங்கங்கும்தான். அவர்கள் காட்டிய பெட்டிதான் கிங்கிங்குடைய பெட்டி. அதைப் பார்த்ததும் பர்மாக்காரி தடை ஒன்றும் சொல்லாமல் நூறு ரூபாயை வாங்கிக்கொண்டுவிட்டாள். சீனனும் ஷங்கங்கும் உள்ளே போனார்கள். அவர்கள் அங்கே கண்ட காட்சி! சுவரிலே கிங்கிங்கினுடைய பெரிய படம் ஒன்று மாட்டியிருந்தது. இரண்டு பக்கத்திலும் ஒரே சாயலாக இருந்த இரண்டு பேருடைய படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு படத்தைப் பார்த்தபோது அவர்களுக்கு உண்மையிலேயே தூக்கிவாரிப் போட்டது. அது சீனனுக்குத் தம் சொத்துக்களையெல்லாம் வழங்கிவிட்ட அந்தக் கிழவருடைய படந்தான்.

"சீனு! அது அந்தத் தாத்தாவுடைய படம்டா!" என்றான் ஷங்கங்.

"ஆமாண்டா!" என்றான் சீனன்.

அப்போது அவர்களையே பின்னால் நின்றுகொண்டு இரண்டு விழிகள் ஆச்சரியத்தோடு கவனிப்பதை அவர்கள் உணரவில்லை. "ஆமா! நீங்கள்ளாம் யாரு?" என்று தமிழிலே ஒரு குரல் கேட்டபோது அவர்கள் இரண்டு பேரும் திடுக்கிட்டுத் துள்ளி விழுந்தார்கள்; திரும்பிப் பார்த்தார்கள். அந்த அம்மாள் இருந்த பரிதாபகரமான நிலையைக் கண்டு விழித்தார்கள்.

"நாங்கள் சென்னையிலிருந்து வந்திருக்கிறோம்" என்றான் ஷங்கங்.

"அந்தக் கிழவரைத் தெரியுமா உங்களுக்கு?"

"தெரியும்..."

"அவர் எப்போ வருவார்?"

"இனிமே வர மாட்டார். அவர் செத்துப் போய்விட்டார்."

இதைக் கேட்டதுமே அந்த அம்மாள் 'ஹோ' என்று அழத் தொடங்கிவிட்டாள். அவளைச் சமாதானப்படுத்தப் பட்ட பாடு பெரும் பாடாகிவிட்டது.

"இந்தப் படத்தில் இருப்பவர் யார்?" என்று வேண்டுமென்றே கிங்கிங் படத்தைக் காட்டிக் கேட்டான் ஷங்கங்.

அந்த அம்மாள் உடனே நடு நடுங்கிப் போய்விட்டாள். பதிலே சொல்லவில்லை.

"இதிலே ஏதோ மர்மம் இருக்குபோல் இருக்குடா, சீனு. நாம் சாமர்த்தியமாக நடந்துகொள்ள வேணும். இன்னும் ஒரு நூறு ரூபாயைக் கொடுத்து அந்த வேலைக்காரியை நைஸாக வெளியே அனுப்பிவிட்டால் எல்லாம் தெரிந்துகொள்ளலாம்" என்றான் ஷங்கங்.

அவர்கள் எண்ணிய காரியம் பலித்துவிட்டது. பர்மாக்காரி ஒரு நாள் ஓய்வும் அதே சமயத்தில் பணமும் கிடைத்த சந்தோஷத்தில் போய்விட்டாள். ஷங்கங் கிழவர் இறந்ததையும் சீனன் அவருடைய சொத்துக்களுக்கு இப்போது சொந்தக்காரன் என்பதையும் சொல்லி அந்த அம்மாளிடம் ஜாக்கிரதையாகப் பேசினான்.

ஒரே சாயலாக இருந்த இரண்டு பேரும் அந்தக் கிழவரும் அவருடைய தம்பியுந்தான். கிழவருக்கு ஒரே மகன். அவருடைய தம்பிக்கும் ஒரே மகன். அந்த அம்மாள்தான் கிழவருடைய மருமகள்.

கிழவர் பாடுபட்டு ஏராளமாகச் சொத்துக்கள் சேர்த்தார். அவர் தரிசாக வாங்கிய இடமெல்லாம் இப்போது முக்கியமான கடைத் தெருவாகப் போய்விட்டது. நூறு ரூபாய்க்கு வாங்கிய தரிசு பதினாயிரம் இருபதினாயிரம் என்று விலை ஏறிவிட்டது. திடீரென்று அவர் பெரும் பணக்காரராகிவிட்டார். சென்னையிலும் சிங்கப்பூரிலுமாக மாறிமாறி இருந்தார். ஆனால் அவருடைய தம்பி அவரிடமே வேலைக்கு இருந்தார். நோயாளியாக இருந்து, ஒரே மகனை விட்டுவிட்டு, கடைசியில் இறந்தும் போய்விட்டார். கிழவர்தான் அவர் மகனையும் கவனித்து வந்தார். கிழவருடைய மகன் அதாவது அந்த அம்மாளுடைய கணவர் ஒரு சமயம் வியாபார நிமித்தமாக ஜாவாவுக்குப் போனார். போன இடத்தில் அவருக்கு எதிர்பாராத அதிருஷ்டம் ஒன்று அடித்தது. அவர் கடை வைப்பதற்காக வாங்கிய இடத்தில் பெரிய புதையல் ஒன்று கிடைத்தது. ஆனால் அந்தப் புதையலைக் கொண்டுவர முடியவில்லை. காரணம் அவர் தனியாக இருந்ததுதான். அதற்காக அதைப் பத்திரமாக ஓர் இடத்தில் புதைத்து வைத்துவிட்டு அவர், தம் சிற்றப்பா மகனை அழைத்துப் போவதற்காகச் சிங்கப்

பூர் வந்தார். அப்போது அந்த அம்மாளுக்குப் பிரசவ சமயம். வீட்டிலே பெண் துணை யாரும் இல்லை. அவர்கள் வீட்டு வேலைக்காரனுக்கு ஒரு மனைவி இருந்தாள். அவளைத் துணையாக வைத்திருந்தது. கிழவர் அப்போது சென்னையில் இருந்தார். ஆண் பிள்ளைகள் யாரும் இல்லாத சமயம் அந்த அம்மாள் பிரசவித்தாள். அந்த அம்மாளுக்குச் சுய நினைவே இல்லை அப்போது. ஏழெட்டு நாட்கள் வரையில் அவளுக்குப் பிரக்ஞையே வரவில்லை. கடைசியாகப் பிரக்ஞை வந்தபோது அவளுக்கு ஓர் இடி காத்திருந்தது. பிறந்த குழந்தை இறந்து போய்விட்டது என்று அந்த வேலைக்காரி சொல்லிவிட்டாள். கிழவருடைய தம்பி மகனும் அதையேதான் சொன்னான். ஆகையால் அதை எல்லாரும் நம்பி விட்டார்கள். ஒரு வருஷம்வரை யாரும் எங்கும் போக வேண்டாம் என்று எழுதிவிட்டார் கிழவர் பிறகு கிழவருடைய மகனும் தம்பி மகனும், புதையல் நிதியை எடுத்துவர ஜாவாவுக்குப் புறப்பட்டார்கள்.

போய் ஒரு மாதம் வரையில் ஒரு தகவலும் வரவில்லை. திடீரென்று ஒரு நாள் கிழவருடைய தம்பி மகன் சிங்காரவேலன் மட்டும் திரும்பி வந்தான். அழுதுகொண்டே வந்தான். கிழவருடைய மகன், அதாவது அந்த அம்மாளுடைய கணவர், நோய் கண்டு இறந்துவிட்டார் என்றும் புதையலை எடுத்து வரவில்லை என்றும் துக்கப்பட்டான்.

இது மற்றோர் இடியாகக் கிழவரையும் அந்த அம்மாளையும் தாக்கியது. அதிலிருந்து அந்த அம்மாளுக்குப் புத்தியே கலங்கி விட்டது.

கொஞ்ச நாட்களுக்கு முன் வரையில் ஏழெட்டு வருஷங்களாகக் கிழவர் தம்பி மகனைத்தான் சொந்த மகனாகப் பாவித்து வந்தார். ஆனால் ஒரு நாள் திடீரென்று அவர் மனம் மாறிவிட்டது. மனம் மாறியதற்குக் காரணம் தெரியவில்லை. அவர்கள் வீட்டில் வேலை செய்து வந்த வேலைக்காரன் மனைவி சாகக் கிடந்தாள். கிழவரைப் பார்க்க வேண்டும் என்று சொன்னாள். கிழவர் அதைத் தட்டாமல் போய்விட்டு வந்தார். அன்று முதல் அவர் போக்கே மாறிவிட்டது. அந்த வேலைக்காரி அவரிடம் என்ன சொன்னாளோ என்னவோ, அவள் அன்றே இறந்தும் போய்விட்டாள்.

கிழவர், வித்தியாசமாக நடந்துகொள்வதை அறிந்த சிங்காரவேலன் ஜாக்கிரதையாக இருக்கத் தலைப்பட்டான். ஒரு நாள் கிழவர் அவனுடைய அறையை அவன் இல்லாதபோது சோதனை போட்டபோது ஒரு மண்டை ஓடும், ஒரு புதுவிதமான பெட்டியும் இருப்பதைக் கண்டார். மண்டை ஓட்டை அப்படியே வைத்துவிட்டு, அந்தப் பெட்டியை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு விட்டார் என்று தெரிந்தது. ஏனெனில் கிழவர் மறு நாளே அந்த அம்மாளிடம், ''நான் சென்னைக்குப் போகிறேன். வர நாளாகும். இருந்தாலும் நல்ல சேதியோடு வருவேன் என்று நினைக்கிறேன்.

ஒன்றுக்கும் பயப்படாமல் இரு. எதற்கும் இந்தச் சிங்காரவேலனை நம்பாதே!'' என்று சொல்லிவிட்டுப் போனார். அவர் போன பிறகு தான், ''என் அறையில் ஒரு பெட்டி இருந்ததே. எங்கே?'' என்று அந்தச் சிங்காரவேலன் வந்து மிரட்டினான்.

அந்த அம்மாள் என்ன கண்டாள், பாவம்! அவளை அவன் இம்சித்தான்; கொடுமைப்படுத்தினான்; தனி அறையில் சிறைப் படுத்துவதுபோல் சிறை செய்தான். சமையலுக்கும் காவலுக்கு மாக அந்தப் பர்மாக்காரியை வைத்துவிட்டு, கிழவரைத் தேடிக் கொண்டு சென்னைக்குக் கிளம்பிவிட்டான்.

இவ்வளவு விவரங்களும் தெரிந்துகொண்ட பிறகு, ''இந்தப் படத்தில் இருப்பவன்தான் சிங்காரவேலனா?'' என்று கேட்டான் ஷங்கங்.

''ஆமாம்'' என்றாள் அந்த அம்மாள்.

''அப்போ கிங்கிங்?''

''அதுதான் அவனை வீட்டில் கூப்பிடும் பெயர்.''

இப்படி அந்த அம்மாள் சொன்னதும் பளிச்சென்று ஒன்றுக்கு ஒன்று இருந்த தொடர்பு புரியலாயிற்று. மற்ற விவரங் கள் பின்னர் தெரியவந்தன.

கிங்கிங் கிழவரைச் சண்டையிட்டுக் கொல்ல முயன்றதற்கு அந்தப் பெட்டியே காரணம். அந்தப் பெட்டியை அபகரிக்கவே அவன் அவரைத் தேடிக்கொண்டு சென்னை வந்தான். கிழவர் பலே கெட்டிக்கார். உயிரை விட்டாலும் பெட்டியை விடவில்லை.

''பெட்டி வேண்டுமென்றால் உண்மையைச் சொல். எனக்கு எல்லாம் தெரியும். நீதான் வேலைக்காரி மூலமாக அந்தக் குழந் தையை அவள் மகளிடம் கொடுத்து அனுப்பியிருக்கிறாய். உண்டா இல்லையா?'' என்றார் கிழவர்.

''ஆமாம்'' என்றான் கிங்கிங்.

''குழந்தை எங்கே?''

''எனக்கு உண்மையாகத் தெரியாது. அந்த வேலைக்காரியின் மகள் பெயர் காளி. அவள் கணவன் பெயர் பக்கிரி. அவ்வளவு தான் எனக்குத் தெரியும். பெட்டியைக் கொடுங்கள். இரண்டு பேரையும் நான் பார்த்ததுகூட இல்லை!'' என்றான் கிங்கிங்.

''சரி; ஆனால் என் மகனை, உன் அண்ணனை நீ ஜாவாவில் என்ன செய்தாய்?''

''நான் ஒன்றும் செய்யவில்லை. அவன் நோய் கண்டுதான் இறந்து போனான்.

''இல்லை; பொய். உன்னிடம் இருக்கும் மண்டை ஓடு ஏது?''

"ஒரு வித்தைக்காரன் ஜாவாவில் கொடுத்தான்.

"எதற்காக? உன் உத்தரவுப்படி அவனைத் தீர்த்துக் கட்டி விட்டதாக நிரூபிக்கத்தானே!"

இந்தச் சம்பாஷணைதான் துறைமுகக் கரையில் அந்தக் கிழவருக்கும் கிங்கிங்குக்கும் நடந்தது. கிங்கிங் பதில் சொல்ல வில்லை. கிழவர் பெட்டியைக் கொடுக்கவில்லை. கழுத்தை நெரித்துக் கொன்றுவிடத் துணிந்துவிட்டான் கிங்கிங். ஆனால் அவன் ஒன்று நினைக்க, விதி வேறுவிதமாக எண்ணிவிட்டது.

கிழவர் அங்கே சாகாமல், சீனனே தன்னுடைய உண்மை யான பேரன் என்பதை அறிந்துகொண்டு உயில் எழுதி வைத்த பிறகுதான் இறந்தார். சீனனிடம் அதைச் சொல்லுமுன் அவர் உயிர் பிரிந்துவிட்டது. சீனனுடைய பெயர், அவன் சிற்றப்பனின் பெயர், சின்னம்மாவின் பெயரை விசாரித்தபோதே அவர் உண் மையை உணர்ந்துகொண்டு விட்டார். அதற்குமேல்தான் அவ னிடம் அந்தச் சு-சூ பெட்டியைக் கொடுத்தார்.

சு-சூ பெட்டியின் மர்மம் என்ன? கிழவருடைய சொத்து கிடைக்காவிட்டாலும் அது கிடைத்தால் போதும் என்று கிங்கிங் முயன்றதன் காரணம் என்ன?

அது இதுதான்: அது சீன தேசத்து மந்திரவாதி கொண்டு வந்து கொடுத்த பெட்டி. அந்தப் பெட்டிதான் சீனனுடைய தந்தையிடம் இருந்த பெட்டி. புதையலை ஒளித்து வைத்த இடத் தைக் காட்டும் நீலப் படமும் அந்த இடத்தின் சாவிகளைப் பாங் கில் பாதுகாப்பில் வைத்திருப்பதற்கான சீட்டும், பாங்கி டெபாஸிட் பெட்டியின் திறவுகோலுந்தான் அதனுள் இருந்தன. அந்தப் புதையலுடைய பெறுமானம் கிழவருடைய சொத்துக் களுக்குச் சமமான மதிப்புடையது. அதனால்தான் கிங்கிங் அதை 'விடேன் தொடேன்' என்று தேடிக்கொண்டு வந்தான். கிழவர் இறந்த பிறகு புதையலை எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் அவன் அவ்வளவு நாளும் அதைக் கொண்டு வ்ராமல் இருந்தான்.

வந்த காரியம் முடிந்து ஊர் திரும்பும்போது அந்த மண்டை ஓடு இனி எதற்கு? சீனன் தன் அறையிலிருந்து கீழே போட்ட மண்டை ஓட்டை வாங்கிக்கொண்ட கை பக்கிரியின் கை. ஆனால் அதை அவன் கீழே நழுவவிட்டுவிட்டான். ஷங்கங் ஒளித்து வைத்தது அவனுக்குத் தெரியாது. குப்பைத் தொட்டியில் விழுந் திருக்குமோ என்று கிளறிப் பார்த்தபோது அது கையில் கிடைத்துவிட்டது. அதை எடுத்துக்கொண்டுதான் அவன் குடிசைக்கு வந்தான். கிங்கிங் கொடுத்த ஆயிரம் ரூபாய்களைப் பத்திரமாக வைக்க அவனிடம் பெட்டி எது? அதனால்தான் அவன் குடிசையினுள் குழி தோண்டிப் பாதுகாப்பாக வைக்க முயன்றுகொண்டிருந்தான். அதற்குள் எல்லாமே மாறிவிட்டன.

"ஷங்கங்! நீ இல்லாவிட்டால் எனக்கு இந்தச் சொத்தும் வந்திருக்காது. என் அம்மாவையும் நான் மீண்டும் உயிரோடு பார்த்திருக்க முடியாது! உன் மூளையே மூளை!'' என்றான் சீனன், மனப்பூர்வமான நன்றியறிதலுடன்.

இருவரும் சீனனுடைய அன்னையை அழைத்துக்கொண்டு சென்னைக் கப்பலில் வந்துகொண் டிருந்தார்கள்.

"நீ இல்லாவிட்டால் நான் இவ்வளவு நேரம் 'ஒன்றீணு, இரண்டீரீணு' என்று தொண்டை கிழியச் சைனு பஜாரில் கத்திக் கொண்டுதான் நிற்பேன்!'' என்றான் ஷங்கங்.

இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். சீனனுடைய அம்மாவும் அவர்களுடைய சிரிப்பில் வருத்தத்தோடு கலந்து கொண்டாள். "பாவம், தங்கத் தொட்டிலில் தூங்க வேண்டிய நீங்கள் குப்பை மேட்டில் வளர்ந்தீர்களே!'' என்றுதான் அவள் மனம் எண்ணியது.

"குப்பை மேட்டில் வளர்ந்தாலும் உங்கள் மகனுக்குக் குணம் தங்கக் கட்டி!'' என்றான் ஷங்கங்.

"நீயும் எனக்கு இன்னொரு மகன்போலத்தான்! இன்று போல் என்றும் நீங்கள் இரண்டு பேருமே இருக்க வேண்டும்'' என்று வாழ்த்தினாள் சீனனுடைய அன்னை. அத்தனை சொத்துக் கும் கடைசிவரையில் அவர்கள் இருவருமே எஜமானனாக இருந் தார்கள்.

முற்றும்

MADURAI UNIVERSITY LIBRARY
15 FEB 1973
MADURAI-2.

Book supplied by the University
central Co-op. Stores, Madurai.